பிரமாதி வருடம்

சித்திரை - ஆனி

இதழ்

தீபம் 3

சுடர் 3



# ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் வழங்கும்
# இன்னிசை விருந்து - சிறப்பிதழ்



இரத்மலானை - கொழும்பு இந்துக் கல்லூரியின் முகப்புத் தோற்றம்


அகில இலங்கை இந்து மாமன்றம் காலாண்டிதழ்

Quarterly of All Ceylon Hindu Congress

# மாமன்ற தூதுக் குழுவின் வன்னி விஜயம்

வவுனியாவிலுள்ள முகாம்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களைப் பார்ப்பதற்காகச் சென்ற சுவாமி ஆத்மகனானந்தஜி அவர்களின் தலைமையிலான மாமன்ற தூதுக் குழுவினர், வவுனியா கச்சேரியின் கேட்போர் கூடத்தில் நடந்த மகாநாட்டில் கலந்து கொள்வதையும், பின்னர் வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் கச்சேரி உயர் உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படங்களையும் இங்கு காணலாம்.









# பஞ்ச புராணங்கள்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

**சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது**

பண் - பழம் பஞ்சுரம்
இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப் பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம்வந் தெனையாண்ட அருமருந்தென் னாரமுதை
வெங்கனல்மா மேனியனை மான்மருவுங் கையானை
எங்ஙனம் நான் பிரித்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

## திருவாசகம்

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது**

பாருரு வாய பிறப்பற வேண்டும் பத்திமை
யும் பெற வேண்டுஞ்
சீருரு வாய சிவ பெரு மானே
செங்கம லமலர் போல்
ஆருரு வாயஎன் னாரமு தேயுன்
அடியவர் தொகைநடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி என்னையும்
உய்யக் கொண்டருளே.

## திருவிசைப்பா

**கருவூர் தேவர் அருளியது**

பண் - பஞ்சமம்
தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்பும்
செவியவன் அறிவு நூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்
கிள்ளையும் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம்பலை செய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே என்னுமென் மனனே.

## திருப்பல்லாண்டு

**சேந்தனார் அருளியது**

பண் - பஞ்சமம்
மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்தபொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

**சேக்கிழார் சுவாமிகள் அருளியது**

நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்.

*திருச்சிற்றம்பலம்*

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் : 3 சுடர் : 3
பிரமாதி வருடம் சித்திரை - ஆனி

## சமூக நலன் பணிகளுக்கு உதவுவீர்

*மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற அருள்வாக்கைப் போற்றும் வகையில் இந்துமாமன்றம் தற்சமயம் இரண்டு அதிமுக்கியமான அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.*

*யுத்த சூழ்நிலை காரணமாக வவுனியா முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து உடுத்த உடுப்புடன் இடம் பெயர்ந்து வீதியோரங்களிலும் காடுகரம்பைகளிலும் மர நிழலில் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கும் எம்மவர்க்கு உதவுதல் முதலாவது பணியாகும். இவர்களுக்கு உதவுமுகமாக இதுவரை பொது மக்ககளிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் மூன்று லொறிகளில் வவுனியா அரச அதிபர் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. இந்தப் பணிக்குப் பொருட்கள் மட்டுமன்றிப் பணமாகவும் இதுவரை ரூபா 432,000/- கிடைத்துள்ளது. மாணவர்களுக்கான சீருடைத்துணி, அப்பியாசப்புத்தகங்கள், போல் பொயின்ற் பேனா, கணித உபகரணப் பெட்டிகள், குழந்தைகளுக்கான பால்மா வகை, பாய்கள் ஆகிய பொருட்கள் ரூ 424,160/- பெறுமதியானவை கொள்வனவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. மாமன்றம் இந்தப் பணியைத் தொடர்ந்தும் செய்து கொண்டிருக்க உத்தேசித்திருப்பதால் இதற்குத்* தொடர்ந்தும் இயன்றளவு உதவிக் கொண்டிருக்கும் வண்ணம் அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

*மாமன்றம் ஈடுபட்டுள்ள இரண்டாவது பணி வசதியற்ற சிறார்களுக்கான கல்விப் பணியாகும். எண்ணற்ற எமது அனாதரவான சிறார்கள் திறமையிருந்தும் பல்வேறு வசதியீனங்கள் காரணமாகப் பாடசாலை சென்று படிக்க முடியாத நிலையிலுள்ளனர். இவர்களின் பரிதாப நிலையை உணர்ந்த மாமன்றம் இரத்மலானை - கொழும்பு இந்துக் கல்லூரியில் ஓர் இலவச மாணவர் விடுதியை நடத்துவதன் மூலம் இவர்களின் கல்விக்கு உதவி வருகின்றது. விடுதியை விஸ்தரித்துக் கூடுதலான மாணவர்களுக்கு வசதி செய்யும் நோக்குடன் இதற்கான நிதியத்தைத் திரட்டுவதற்காக டி.கே. பட்டம்மாளின் பேத்தியான பிரபல பாடகி நித்திய ஸ்ரீ மகாதேவனின் இன்னிசைக் கச்சேரியை ஒழுங்கு செய்துள்ளது.*

*மேற்படி இன்னிசைக் கச்சேரிக்கு ஆதரவை வழங்குவதன் மூலம் எமது சமூக நலன் பணிக்குத் தங்கள் ஊக்குவிப்பையும் ஆதரவையும் வழங்கி எமது பணிகள் இனிதே நடைபெறத் தங்கள் மனமார்ந்த நல்லாசிகளை வழங்கி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசப் பெருமானின் நல்லருள் பெற்று இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ வேண்டுகின்றோம்.*

*"மக்கள் சேவைப் பாதையில் மாமன்றம்" என்ற தலைப்பில் மாமன்ற சமூக நலப்பணிகள் பற்றிய கட்டுரை ஒன்றும் இந்த இதழில் பிரசுரமாகியிருக்கிறது.*

புத்தாண்டு புனித தினத்தில் இந்து மக்கள் வேடிக்கை கொண்டாட்டங்களை தவிர்த்து இறை வழிபாட்டில் ஈடுபட்டு அல்லலுறும் மக்களுக்கு விமோசனம் வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்று அன்பாக வேண்டுகிறோம்.

நூலகம்

# பிரமாதி வருஷமே வருக

மங்களமாய் பூமகள் மனம் மகிழ (1)
மருவி நின்று மக்கள் குழாம் குதூகலிக்க
துங்கமா முகன் துதிக்கரத்தால் ஆசீர்வதிக்க
துயரமனைத்தும் எம்மனம் விட்டோடிட
சங்க நாதமாய் சகல மக்களும் சுபீட்சம்பெற
சமாதானம் எம்நாட்டில் சானித்தியம் கொள
பங்கமில்லா "பிரமாதி" வருஷமாய் - என்றும்
பல இன்பம் தந்திட வருக, வருகவே !

ஆதி நாத சிவனின் திருவருள் மலர்ந் தோங்க (2)
அம்பிகையாம் மங்கையவள் கருணைதர
வேதியராம் அந்தணரும் அறம் காத்து நிற்க
வெற்றிகளும் நீதிகளும் பூமி நிறைந்தோங்க
நாதி யற்றோர் நலம்யாவும் சிறந்திடவே
நற்பண்பும் நற்செயலும் நிறைந்து நிற்க
மேதினியில் 'பிரமாதி" வருஷமே - என்றும்
மெருகு இன்பம் தந்திட வருக வருகவே !

பானுவெனும் ஞாயிறு மேஷராசி மேவிட (3)
பண்புறு சோமனெனும் திங்களவன் மீனராசி மருவ
வானுயர வாழும் தேவர்குழாம் வாழ்த்தொழிக்க
வளம் நிறைவாய் வயற்பரப்பு செங்கதிரோங்க
தேனுடை சுவையாய் அனைவர் மனமும் இனிக்க
தென்றலாய் நாடு செழித்து மிளிர்ந்திட
ஈனும் இத்தனை அருளோடு "பிரமாதி" வருஷமே - என்றும்
இனிக்கும் இன்பம் தந்திட வருக வருகவே !

*- சிவஸ்ரீ. ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்*

உ

சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

'இன்னிசை மாமணி' - 'யுவகலாபாரதி'

## ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் வழங்கும்

## இன்னிசை விருந்து



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில்

ஹோட்டல் தாஜ் சமுத்திர, சக்தி டி. வி., சக்தி எஃப். எம்., தினக்குரல்

ஆகியோரின் அனுசரணையுடன்

அகில இந்தியப் புகழ் கர்நாடக சங்கீத விபூக்ஷணி

## ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் வழங்கும்

## இன்னிசை விருந்து

இடம் : சுவாமி விபுலானந்தர் அரங்கு,
புதிய கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டி, கொழும்பு 4.

காலம் : 10.04.1999 சனிக்கிழமை மாலை 5.30 மணி
11.04.1999 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி

## நிகழ்ச்சி நிரல்

### 10.04.1999 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| மாலை | 5.15 | - | விருந்தினர்கள் வருகை |
| | 5.25 | - | மங்கள விளக்கேற்றல் |
| | 5.30 | - | இன்னிசை விருந்து ஆரம்பம் |
| இரவு | 8.30 | - | இன்னிசை விருந்து நிறைவு |

### 11.04.1999 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| மாலை | 5.15 | - | விருந்தினர்கள் வருகை |
| | 5.25 | - | மங்கள விளக்கேற்றல் |
| | 5.30 | - | கலைஞர்கள் கௌரவம் |
| | 5.45 | - | இன்னிசை விருந்து ஆரம்பம் |
| இரவு | 8.45 | - | இன்னிசை விருந்து நிறைவு |

அனுசரணை வழங்குவோர் :

தினக்குரல் THINAKKURAL An Independent Daily Voice in Tamil

சக்தி Shakthi TV

சக்தி Shakthi FM

TAJ SAMUDRA
Colombo
A TAJ LUXURY HOTEL

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில்
இன்னிசை மாமணி, யுவகலாபாரதி
ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் (B. Com. Madras) வழங்கும்

# இன்னிசை விருந்து

மேற்படி இன்னிசை நிகழ்ச்சி 1999 ஏப்ரல் 10ம், 11ம் திகதிகளில் மாலை 5.30 மணிமுதல் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறுவதையொட்டி மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" சிறப்பிதழாக மலர்ந்து மணம் பரப்புகிறது.

இந்து மாமன்றத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் இரத்மலானை - கொழும்பு இந்துக் கல்லூரியின் இலவச மாணவர் விடுதி வளர்ச்சி நிதிக்கான இந்த இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் கலைஞர்களை அறிமுகம் செய்வதில் "இந்து ஒளி" பெருமகிழ்ச்சியடைகிறது.



*இன்னிசை மாமணி, யுவகலா பாரதி*
ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன்
*B. Com (Madras)*

★ காஞ்சிப் பெரியவர் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் இசை விருந்தளித்து, சுவாமிகளின் ஆசியைப் பெற்றவர்.
★ கானசரஸ்வதி டி. கே. பட்டம்மாள் அவர்களின் தகப்பன் வழிப் பேத்தி, பிரபல மிருதங்க வித்துவான் பாலக்காடு மணி அவர்களின் தாய்வழிப் பேத்தி, மிருதங்க வித்துவான் ஸ்ரீ ஈஸ்வரன் சிவகுமார், இசைக் கலையில் மிகுந்த ஆர்வமும், அறிவும் கொண்ட ஸ்ரீமதி லலிதா சிவகுமார் தம்பதியினரின் மகள்.
★ குருகுலம் : தாயார் ஸ்ரீமதி லலிதா சிவகுமார், பேத்தியார் ஸ்ரீமதி. டி. கே. பட்டம்மாள்.
★ இந்தியாவிலும், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் பல இசைக் கச்சேரிகள் நடாத்தி புகழ் பெற்றவர்.
★ அண்மையில் "ஜீன்ஸ்" திரைப்படத்தில் பிரபலமான "கண்ணோடு காண்பதெல்லாம்....." என்ற பாடலின் மூலம், திரையுலகிலும் பெரும் புகழீட்டி, கண்ணதாசன் விருதும் பெற்றுள்ளார்.
★ சென்னை மியூசிக் அக்கடமி, தமிழ் இசைச்சங்கம் நடத்திய இசைப் போட்டிகளிலும், அகில இலங்கை வானொலி தேசிய ரீதியாக நடத்திய போட்டிகளிலும் பரிசில்கள் பெற்றிருப்பதுடன், 1990ம் ஆண்டு பாபநாசம் சிவன் தம்புரா பரிசும், 1994ம் ஆண்டு சிறந்த பல்லவி இசைக்கான விருதும் உட்பட மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.
★ இந்த இளம் வயதில் இசைத் துறையில் ஆய்வுகள் செய்து, சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளையும், தெய்வீகப் பாடல்களையும், பாரதியார், கோபாலகிருஷ்ண பாரதி, பாபநாச சிவன் ஆகியோரது பாடல்களையும் தனக்கே உரித்தான பாணியில் "பாட்டும் பொருளும், பொருளால் பொருந்தும் பயனும்" இசை ரசிகர்கள் பெறும் வகையில் தனது அபூர்வ சாரீரத்துடன் வழங்கி, பழமையும் புதுமையும் இணைக்கும் ஒரு பாலமாக இந்திய இசையுலகில் ஓர் இசையரசியாக பிரபல்யமடைந்துள்ளார்.
★ இசை விமர்சகர் எம். என். நாராயணன் அவர்களால் "இன்று முதல் நீ இராணி நித்தியஸ்ரீ" என்று பாராட்டப் பெற்றவர்.
★ சிறுமியாக இருந்த காலத்தில் அவரது பேத்தியார் டி. கே. பட்டம்மாள் அவர்களுடன் இலங்கை வந்துள்ளார்.
★ தனது ரசிகர்களை அவர் பெரிதாக மதிப்பவர் என்பதற்கு கீழ்வரும் அவரது வாசகம் சிறந்ததொரு சாட்சி.

"எவ்வளவு உயர்ந்த பரிசை வாங்கினாலும் கச்சேரி கேட்டுவிட்டு எனக்கு ரசிகர்கள் போன் (phone) பண்ணிப் பாராட்டும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கும். இதுதான் எனக்கு பெரிய பரிசாக (Award) தோன்றுகிறது" –

*(பெண்மணி – மாதர் இதழ் ஜூலை 1998)*

★ ★ ★

ஸ்ரீமதி நித்யஸ்ரீ வழங்கிய இன்னிசை விருந்து தொடர்பான விமர்சனங்களுள் ஒரு சில :
"லண்டனில் இசை மழையில் நனைய வைத்து வர்ண ஜாலம் புரிந்த நித்யஸ்ரீ" (லண்டன் Orphan Trust நன்கொடை நிதிக்கான இசை நிகழ்ச்சி பற்றிய விமர்சனம் – புதினம் – நவம்பர் 1998)
"சுத்த சுருதியுடன் தனித்துவமான முறையில் ராகங்களைக் கையாண்டு புதிய இசை வார்ப்புகளை தனது அபூர்வ குரல்வளத்தின் மூலம் வெளிப்படுத்தி, ரசிகர்களின் இதயங்களைக் கவரும் வகையில் இசைத்துறையில் சிறந்து விளங்குகிறார்".
(Kartik Fine Arts Musical Programme - Review by Indian Express - 13 - 12 - 98)
"சொற்தெளிவுடனும் தத்துவரூபமாகவும், பக்தியுடனும் கர்நாடக இசை சமுத்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட முத்துக்களை ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாதேவன் வழங்கினார்"
(Indian Fine Arts - 66வது தென்னிந்திய இசை மகாநாடு, இசை விழா நிகழ்ச்சி பற்றிய விமர்சனம் – The Hindu 25.12.98)

# அணியிசைக் கலைஞர்கள்



*மிருதங்க வித்துவான்*
ஸ்ரீ ஈஸ்வரன் சிவகுமார்.
*(B. Sc. Maths)*

★ இவர் ஸ்ரீ. ஆர். ஈஸ்வரன் கான சரஸ்வதி, ஸ்ரீமதி D. K. பட்டம்மாள் அவர்களின் புதல்வர். மிருதங்க மகாமேதை பாலக்காட்டு மணி ஐயர் அவர்களின் மருமகன்.

★ இசைக் குருகுலம் : பாலக் காட்டு குஞ்சுமணி, பாலக்காட்டு மணி ஐயர்.

★ கர்நாடக இசைக்கு அவர் ஆற்றிய சேவைகளை மெச்சி வடபழனி தேவஸ்தான திருப்புகழ் மன்றம் அவருக்கு "திருப்புகழ் மாமணி" என்ற விருதை வழங்கியது. இது தவிர 1951ம் ஆண்டு தொடக்கம் இந்தியாவிலுள்ள பல இசை மன்றங்களில் நடைபெற்ற பல விழாக்களில் மிருதங்க இசை வழங்கி விருதுகளைப் பெற்றுள்ளார்.

★ 1977ம் ஆண்டு ஜெர்மனி பேர்லினில் நடந்த சர்வதேச இசை மகாநாட்டில் விசேட அழைப்பின் பேரில் பங்கு பற்றினார். 1986ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடந்த இந்திய கலாசார விழாவிலும், 1993ம் ஆண்டு சங்கீத நாடக அக்கடமியினால் பம்பாயிலும் ஹைதராபாத்திலும் நடாத்தப்பட்ட இசை விழாக்களில் பங்கு கொண்டார்.

★ பழம் பெரும் இசை மேதைகளாகிய ஸ்ரீ M. K. இராமநாதன், வீணை ஸ்ரீ பாலச்சந்தர், ஸ்ரீ T. M. கிருஸ்ணன் கலாநிதி பாலமுரளி கிருஷ்ணா, ஸ்ரீ. S. இராமநாதன் ஆகியவர்களது இசைக் கச்சேரிகளில் மிருதங்க வாத்திய இசை வழங்கியுள்ளார்.

★ அவரது குடும்பத்தைச் சேர்ந்த பழம்பெரும் கலைஞர்களாகிய அவரது தாயார் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள். அவரது மாமனார் ஸ்ரீ டி. கே. ஜெயராமன் ஆகியவர்களுக்கு மிருதங்க வாத்திய இசை வழங்கிய பெருமையுடன் இன்று இசை இராணியாக மலர்ந்து வரும் அவரது மகள் ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது இசைக் கச்சேரிகளில் இந்தியாவிலும் ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆகிய நாடுகளிலும் பங்குபற்றியுள்ளார்.

★ தனது தாயார், டி. கே. பட்டம்மாளுடன் ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் 1977ம் ஆண்டு நடைபெற்ற இசைக் கச்சேரிகளில் பங்குபற்றியுள்ளார்.

★ இலங்கைக்கும் தனது தாயாருடன் பலமுறை வருகை தந்து இசை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியுள்ளார்.

★★★



*வயலின் இசைக் கலைஞர் மேலக்காவேரி*
கே. தியாகராஜன் அவர்கள்

★ இவர் பிரபல வயலின் வித்துவான். இவருடைய தந்தையார் மேலக் காவேரி K. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிரபல மிருதங்க வித்துவான்.

★ இவர் தனது ஆரம்ப இசைப் பயிற்சியை சென்னையிலுள்ள R. R. சபா இசைக் கல்லூரியில் கலாநிதி ஸ்ரீமதி கற்பகம் (M. A, PHD in Music) அவரிடம் பெற்றார். அதன்பின் வயலின் வித்துவான் அமரர் இராமநாதபுரம் ஸ்ரீ வெங்கடாசலம் ஐயர் அவர்களிடம் ஸ்ரீ. V. L. குமார் அவர்களிடமும் இசைக் கலையின் நுட்பங்களைக் கற்றார்.

★ மேன் மேலும் இசைக் கலையில் கீர்த்தனை பற்றிய விசேட அறிவைப் பெறும் பொருட்டு சங்கீத வித்துவான் ஸ்ரீ M. M. சுப்பிரமணியம் அவர்களிடம் கற்று வருகின்றார்.

★ கடந்த எட்டு ஆண்டுகளாக தமிழ் நாட்டிலும், இந்தியாவில் பல இடங்களிலும் நடைபெற்ற கர்நாடக இசைக் கச்சேரிகளில் வயலின் பக்கவாத்தியம் வாசித்து பெரும் புகழீட்டியுள்ளார்.

★ அகில இந்திய வானொலி சென்னை தூரதரிசன நிலையம் நடாத்தும் இசைக் கச்சேரிகளில் பங்குபற்றியுள்ளார்.

★★★

## அணியிசைக் கலைஞர்கள்



ஸ்ரீமதி சாந்தா விஸ்வநாதன் - தம்புரா

*(B. Sc. Economics Madras)*

★ பேராசிரியர் கலாநிதி விஸ்வநாதன் இவரது கணவர்.

★ இளவயதிலிருந்தே இசை பயின்றவர்.

குருகுலம் : ஸ்ரீ ஆனையம்பதி கணேசன்,
ஸ்ரீ ஆலத்தூர் சிறிநிவாஸ் ஐயர்

★ அகில இந்திய வானொலி – திருச்சி நிலையத்தில் 1962ம் ஆண்டு தொடக்கம் இசைக் கச்சேரிகள் செய்துள்ளார்.

★★★



கலைமாமணி யாழ்ப்பாணம் ஸ்ரீ கணேசபிள்ளை

★ இவர் இலங்கை தந்த சிறந்த தவில் மேதை

★ 1984ம் ஆண்டு தொடக்கம் 1997ம் ஆண்டு வரை இந்தியாவில் வசித்த காலத்தில் பல சபாக்களில் நடைபெற்ற இசைக் கச்சேரிகளில் தவில், கஞ்சிரா, வாத்தியங்களை வாசித்துள்ளார்.

★ நாதஸ்வர மாமேதை அமரர் திருவாவடுதுறை ஸ்ரீ. இராஜரத்தினம்பிள்ளை காலம் தொடக்கம் இன்று வரையுமுள்ள நாதஸ்வர மேதைகள் பலரது கச்சேரிகளிலும் தவில் வாசித்தவர்.

★ 1990ம் ஆண்டு தமிழ் நாடு அரசாங்கத்தின் 'கலைமாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

★ இசை மாமேதைகள் மகாராஜபுரம் விஸ்வநாதையர், மதுரை மணி ஐயர் அவர்களது கச்சேரிகளில் கஞ்சிரா வாத்திய இசை வழங்கியுள்ளார்.

★ மிருதங்க மாமேதை பாலக்காட்டு மணி ஐயருடன் தஞ்சாவூர் சபாவில் கஞ்சிரா வாசித்தமை அவரது பெருமைகளில் ஒன்றாகும்.

★ 1987 முதல் 1989 வரையிலான காலப் பகுதியில் காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்துவானாக இருந்துள்ளார்.

★★★

பல தசாப்தங்களாக இந்நாட்டில் ஆலயங்கள் அமைத்து இந்து பண்பாட்டை வளர்த்த பரம்பரையில் வந்த பழம் பெரும் அறங்காவலர் இந்து மதப் பணிகளுக்கு என்றும் பலமாகத் திகழும்,

கலாநிதி. ஆர். எம். பழனியப்பச் செட்டியார்

இந்நிகழ்ச்சிகளை நடத்த புதிய கதிரேசன் மண்டபத்தை எங்களுக்கு தந்துதவியமைக்கு எங்கள் மனமுவந்த நன்றி.

– அகில இலங்கை இந்து மாமன்றம்



## கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கொழும்பு நகரில் தலைமையகத்தைக் கொண்டு சிறப்புடன் இயங்கி வரும் அகில இலங்கை இந்து மாமன்றப் பணிகள் பன்முகப்பட்டவை. சமயப் பணிகளோடு பல சமூகப்பணிகளையும் அவர்கள் ஆற்றிவருவதைப் பலரும் அறிவர். அப்பணிகளில், சென்ற ஆண்டு அவர்கள் இரத்மலானையில் ஆரம்பித்து வைத்த இலவச மாணவர் விடுதி ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இந்த மாணவர் விடுதி இரத்மலானை – கொழும்பு இந்துக் கல்லூரியில் அமைந்துள்ளது. அக்கல்லூரியைச் சேர்ந்த 40 வறிய மாணவர்கள் தற்சமயம் இவ்விடுதியில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு உணவு, உறைவிடம் இலவசமாக வழங்கப்படுகின்றன. உண்மையிலேயே இது ஒரு மகத்தான பணி. இந்து மாமன்றப் பணிகளுக்கு இது சிகரம் போல் அமைந்துள்ளது எனலாம். இந்த விடுதியைத் தொடர்ந்து நடத்தவும் விரிவு செய்யவும் அனைவரது ஒத்துழைப்பும், நல்லாதரவும் அவசியம் என்பதைக் கூறத் தேவையில்லை.

அகில இலங்கை இந்து மாமன்றப் பணிகள் மேன்மேலும் வளர்ந்து சமுதாயம் நன்மைபெற, இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.



## கானசரஸ்வதி ஸ்ரீமதி டி.கே. பட்டம்மாள் அவர்களின்

# வாழ்த்து

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அறப்பணிகளுள் ஒன்றான கொழும்பு – இரத்மலானை இந்துக்கல்லூரி இலவச மாணவர் விடுதி நன்கொடை நிதிய வளர்ச்சிக்காக எனது அன்புப் பேத்தி ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களையும் அவரது இசைக்குழுவினரையும் அழைத்து, இரு சிறப்பு இசைக்கலை நிகழ்ச்சிகளை கொழும்பு நகரில் நடாத்தவிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வேளையில், கடந்த காலங்களில் அதாவது ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன் இலங்கை இசைக்கலைப் பிரியர்களும், அன்பு நண்பர்களும் என்னை அழைத்து இன்னிசை நிகழ்ச்சிகளை நடாத்தி, என்னைக் கௌரவித்தமை எனது நினைவுகளில் வருகின்றது.

எனவே எனது பேத்தி நித்யஸ்ரீயின் இலங்கை விஜயம் எமது குடும்பத்தினரின் தொடர்புகளை மீண்டும் புதுப்பிக்கும் ஒரு நிகழ்ச்சியாக அமையும் அதேவேளையில், இந்திய – இலங்கை கலாச்சாரத் தொடர்புகளில் எமது குடும்பத்தினரின் பங்களிப்பையும் வலுப்படுத்துகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அறப்பணிகள் சிறப்பாக அமையவும் நித்யஸ்ரீ உவந்தளிக்கும் இசை நிகழ்ச்சிகள் வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன்.

இந்த வேளையில் இலங்கை மக்கள் படும் அவஸ்தை நிலையிலிருந்து அவர்கள் விடுதலைபெற்று, எங்கும் சாந்தி நிலவவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

*ஓம் சாந்தி.*

## அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்
## திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஆதியும் அந்தமுமில்லா அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் கருணையினால் அகில இலங்கை இந்து மாமன்றம் அதன் சமூக நலன்புரி பணிகளில் ஒன்றாக ஆதரவற்ற மாணவர்களுக்கு பல வசதிகளுடன் கூடிய இலவச விடுதி ஒன்றினை பராமரித்து வருவது எல்லோரும் அறிந்ததே. இந்த நூற்றாண்டில் இந்து மத மலர்ச்சியின் மூல கர்த்தாவாகிய சுவாமி விவேகானந்தர் மாணவர்களுக்கு கல்வியூட்டி வளர்ப்பதே சமூகத்திற்கு நாம் செய்யும் தலையாய தொண்டாகும் என்று அறிவுறுத்தியுள்ளார். அதாவது சமயமும் சமூகமும் இணை பிரியாதவை. சமயம் இன்றேல் சமூகம் இல்லை. சமூகம் இன்றேல் சமயம் இல்லை. இந்த அடிப்படையில் அகில இலங்கை இந்து மாமன்றம் சமூகப் பணிகளில் தனது அங்கத்துவ மன்றங்களைப் பங்குபற்ற ஊக்குவித்து சமய வளர்ச்சிக்கு எமது மதக் கோட்பாடுகளை முன் எடுத்துச் செல்கின்றது. இன்றும் நாளையும் இவ்விடத்தில் நடக்கவிருக்கும் இவ்விசைக் கச்சேரிகள் மாணவ விடுதி நிதியத்துக்கு மனமுவந்து பண உதவியும் பொருள் உதவியும் தந்துதவிய பெருமக்களுக்கு நன்றி செய்யும் வகையில் ஏற்பாடாகியுள்ளது. இந்த இன்னிசை விருந்துகளை அளிக்கும் இசைமாமணி ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன், இலங்கை இசைப்பிரியர்களினால் அன்புடன் நினைவு கூரும் கானசரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளின் பேத்தி. அவர் மீண்டும் அவரது பாட்டியாரின் வழியில் சென்று அவரது இசை நிகழ்ச்சிகளின் வழியாக இலங்கை இந்திய கலாசார பாலம் பலம்பெற ஆற்றும் உதவி போற்றுதற்குரியதாகும். அவர், அவரது கணவன் ஸ்ரீ மகாதேவனுடனும், அவரது தந்தை ஸ்ரீ. ஈ. சிவகுமார், அவரது மாமியார் ஸ்ரீமதி சாந்தா விஸ்வநாதனுடனும் அணி செய் வயலின் இசைக் கலைஞர் மேலக்காவேரி கே. தியாகராஜன் அவர்களுடனும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள். அவர்களைஅகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் அன்புடன் வரவேற்கின்றேன். இந்த நிகழ்ச்சிகளில் தவில் மேதை யாழ்ப்பாணம் கலைமாமணி ஸ்ரீ க. கணேசபிள்ளை அவர்கள் பங்குபற்றுவது எமக்கெல்லாம் பெருமை அளிப்பதாகும். இந் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேற எல்லாம்வல்ல இறைவனது பாதங்களை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

# நன்றி

வெகுதானிய வருடம் பங்குனித்திங்கள் 27ம், 28ம் (1999ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம்,11ம்) திகதிகளில் நடக்கும் இன்னிசைமாமணி யுவகலா பாரதி ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களின் இன்னிசைக் கச்சேரிக்கு அனுசரணை வழங்கிய கீழ்க் குறிப்பிடப்படுபவர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்:-

இந்நிகழ்ச்சிக்கு பலவழியில் அனுசரணை தந்த,

1. கலாநிதி கே. சங்கர் - நோர்வே
2. தாஜ் சமுத்திரா ஹோட்டல்
3. சக்தி தொலைக்காட்சிச் சேவை
4. சக்தி ஒலிபரப்புச் சேவை
5. தினக்குரல் புதினப் பத்திரிகை நிறுவனம்

★ வாழ்த்துச் செய்தி வழங்கிய கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ்.

★ இந் நிகழ்ச்சியை இலங்கையில் நடத்துவதற்குத் தனது உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்கிய குழுவின் முகாமையாளர் ஸ்ரீ. வி. மகாதேவன்.

★ இசைக் குழுவினரின் பிரயாண ஒழுங்குகளைச் செய்வதில் உதவிய கலாச்சார அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஸ்ரீ K. பரஞ்சோதி.

★ இசைக் குழுவினரின் விஜயம் சம்பந்தமாக விசா வசதி ஒழுங்குகளைச் செய்து உதவிய குடிவரவு குடியகல்வுக்கட்டுப்பாட்டாளர், சென்னையிலிருக்கும் இலங்கைக்கான பிரதி உயர் ஸ்தானிகர், இலங்கையிலிருக்கும் இந்திய அரசுக்கான உயர்ஸ்தானிகரும் அவரின் அலுவலர்களும்,

★ இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துவதற்குப் புதியகதிரேசன் மண்டபத்தை கட்டணமின்றி தந்துதவிய அறங்காவலர் பெருமகன் கலாநிதி R. M. பழனியப்பச் செட்டியார்.

★ இன்னிசைக் கச்சேரி சம்பந்தமான அச்சு வேலைகளைச் செய்து உதவிய ரங்கோ (Ranco) அச்சகத்தார்.

★ இந்து ஒளி சிறப்பிதழை அச்சிட்டுத்தந்த யுனி ஆட்ஸ் நிறுவனம்.

★ 'இந்துஒளி' சிறப்பிதழ் அனுசரணையாளர்,

★ இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்வதில் முன்னணியில் இருந்த மாமன்ற உபதலைவரும் சமய விவகாரங்கள், குருகுலம், விழாக்கள் குழுத்தலைவர் திரு. த. கணநாதலிங்கம், இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்வதில் உதவி வருகின்ற ஏனைய மாமன்ற அலுவலர்கள் யாவருக்கும் குறிப்பாக சமூகநலன் குழுத்தலைவர்திரு. சின்னத்துரை தனபாலா,செயலாளர் திருமதி. வானதி இரவீந்திரன் ஏனைய சமூகநலன் குழு உறுப்பினர்களுக்கும்,

★ வேறு வழிகளில் எங்களுக்கு உதவிய அன்பர்கள் யாவருக்கும்.

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர்*
*அகில இலங்கை இந்து மாமன்ற*
*முகாமைச் சபைக்காகவும் அதன்சார்பாகவும்.*

## Our Thanks to:

We thank the following sponsors of the programme music concerts of April 10th and 11th 1999 by Shrimathi Nithyasree Mahadevan:

Dr. K. Shankar - Norway
Hotel Taj Samudra
M/S. Shakthi TV
M/S Shakthi Radio
Management of United Newspapers (Pvt) Ltd.

Swamy Aathma Gananandaji Maharaj, Ramakrishna Mission, Colombo for the message of benediction.

Sri V. Mahadevan, Manager of the Musical Team for the co-operation and assistance extended to have this programme in Sri Lanka.

Sri K. Paramsothy, Additional Secretary, Ministry of Cultural Affairs for the assistance rendered in the travel arrangements.

Controller of Immigration and Emigration, Deputy High Commissioner for Sri Lanka in Chennai, & the Indian High Commission in SriLanka for facilitating the official visa arrangements for the visiting musical team.

Mr. R. M. Palaniyappa Chettiar for giving the New Kathiresan Hall free of charge for this purpose.

Unie Arts (Pvt) Ltd; the printerss of the Special Issue of the Hindu Oli.

The sponsors of the special issue of Hindu Oli.

The Chairman of the Religious comminittee and a Vice President of the ACHC. Mr. T. Gananathalingam who was in the forefront in organising this program.

The officers of the ACHC specially the Chairman and the Secretary of the Social Welfare Committee Mr. Sinnathurai Thanabalaa and Mrs. Vanathy Ravindran and all the other members of the Social Welfare Committee.

**Kandiah Neelakandan,**
*General Secretary for and*
*on behalf of the Council of*
*Management of the All Ceylon Hindu Congress.*

# அகில இலங்கை இந்து மாமன்றத் தூதுக் குழுவின் வன்னி விஜயம்

வன்னி மக்களின் துயரத்தை ஓரளவேனும் குறைக்க வேண்டு என்ற நோக்குடன் அகில இலங்கை இந்து மாமன்றம் ஏனையோரின் உதவியுடன் நிவாரணப் பொருட்களை இரண்டு லொறிகளில் ஏற்கனவே வன்னிக்கு அனுப்பி வைத்தது. மார்ச் முதலாம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் வன்னி மக்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி ஒரு ஆலோசனைக் கூட்டம் மாமன்ற ஆதரவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வன்னியில் மக்கள் படும் துயரத்தை எங்கள் துயரமாகக் கருதி எங்களாலான உதவிகளை வழங்க வேண்டும் என்று இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தஜி அவர்களும் ஏனையோரும் வலியுறுத்தியிருந்தனர். வன்னி நிலைமையை நேரில் சென்று அறியவேண்டும் என்பதற்காக வவுனியா அரசாங்க அதிபரின் ஆதரவுடன் அகில இலங்கை இந்து மாமன்றம் இந்த விஜயத்தை ஒழுங்கு செய்திருந்தது. சுவாமி ஆத்மகனானந்தஜி தலைமையில் சென்ற இந்தக் குழுவில், மாமன்றத்தின் சார்பில் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், பொருளாளர் திரு. மு. கந்தசாமி, உறுப்பாண்மைக் குழுச் செயலாளர் திரு. பி. கருப்பையா, முகாமைப் பேரவை உறுப்பினர்கள் திருமதி. அ. கயிலாசபிள்ளை, திரு. வி. நடராஜா, அகில இலங்கை கம்பன் கழகத்தின் சார்பில், அதன் அமைப்பாளர் கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ், சாரதா சமித்தியின் சார்பில் செயலாளர் செல்வி. வி. கணபதிப்பிள்ளை, திருமதி. தெய்வேந்திரம், இராமகிருஷ்ண மிஷன் சார்பில் அதன் செயலாளர் திரு. ஆர். சிவஞானசோதி உட்பட மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்களும் சென்றிருந்தனர்.

மார்ச் 6ம் திகதி சனிக்கிழமை காலை வவுனியா சென்றடைந்த இக்குழுவினரை வவுனியா கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. கணேஷ், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. இ. தர்மகுலசிங்கம், மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. குரூஸ், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. இராஜநாயகம் ஆகியோர் வரவேற்றனர். சுவாமி ஆத்மகனானந்தஜி அவர்கள், சமயாசார முறைப்படி வரவேற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதைத் தொடர்ந்து வவுனியா கச்சேரியின் கேட்போர் கூடத்தில், வவுனியா அரசாங்க அதிபர் திரு. கணேஸ் தலைமையில் நடந்த மகாநாட்டில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களின் அரச அதிபர்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள உணவு, உடை, வதிவிடம், கல்வி, சுகாதாரம் சம்பந்தமான பிரச்சனைகளை எடுத்துக் கூறினார்கள். வன்னிக்கு அரசாங்கம் மூலம் கிடைக்கின்ற மருந்து போதாமையை வன்னி சுகாதார அத்தியட்சகர் கலாநிதி. கே. இளங்கோ எடுத்துரைத்தார். வவுனியா கல்வி அதிகாரிகள் திருமதி. ஒஸ்வோல்ட், திரு. நடராஜா ஆகியோர் வவுனியாவில் பல பிள்ளைகள் கல்வி கற்காத நிலைமைகளை எடுத்து விளக்கினார்கள். வவுனியா உணவு அதிகாரி திரு. சத்தியசீலன் உணவு பற்றாக் குறையை எடுத்துரைத்தார். கிளிநொச்சி யோகர் சுவாமிகள் அனாதை இல்லம், முல்லைத்தீவு கண்ணிழந்தோர் இதய வாழ்வு இல்லம், பாலம்பிட்டி அனாதை இல்லம் போன்றவற்றைப் பராமரிக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனை சாதகமான முறையில் அணுகி நடவடிக்கை எடுப்பதாக மாமன்ற நிறைவேற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தெரிவித்தார்.

மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடத்துவதற்கும், பாலர்களுக்கு வகுப்புகள் நடத்துவதற்கும் உரிய செலவுகளை பொறுப்பேற்க இராமகிருஷ்ண மிஷனும், சாரதா சமித்தியும் ஒத்துக் கொண்டிருக்கின்றன. வட – கிழக்கு மாகாண பழைய மாணவர் சங்க சம்மேளனத்தின் உதவியையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாமன்றத் தலைவர் அறிவித்தார்.

மகாநாட்டின் இறுதியில் நன்றி தெரிவித்துப்பேசிய மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், வன்னியில் இருக்கும் நான்கு அரச அதிபர்களும், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. இரகுநாதபிள்ளை, வன்னி நிர்வாகப் பணிகளுக்குப் பொறுப்பாக இருக்கும் திரு. திருஞானசம்பந்தர் மற்றும் அரச அதிகாரிகள் கஷ்டமான நிலையிலும் அரும்பணியாற்றி வருவதை மெச்சியதுடன், இந்துமாமன்றம் வன்னியில் நிலவும் பிரச்சனைகளை ஜனாதிபதி, கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், ஏனைய இந்து நிறுவனங்களினதும் ஆதரவையும் பெற்று நிவாரணப் பணியைத் தொடரும் எனக் கூறினார்.

அகில இலங்கை இந்து மாமன்றம் நிவாரணப் பணிகளில் தங்களுக்கு உதவி வருவதற்கும், சுவாமி ஆத்மகானந்தஜி தலைமையில் நேரில் வவுனியாவுக்கு விஜயம் செய்து வன்னி மக்களுக்கு நிம்மதி தந்தமைக்கும் அரசாங்க அதிபர் திரு. கணேஸ் நன்றி தெரிவித்தார்.

அதன்பின் பூந்தோட்டத்திலிருக்கும் எட்டு இடம்பெயர்ந்தோர் முகாம்களையும் தூதுக்குழு பார்வையிட்டது. இராணுவ நடவடிக்கைகளால் தாங்கள், தங்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப் பட்டிருப்பதாகவும், தங்கள் சொந்த இடங்களுக்குப் போகத் தங்களை இராணுவம் அனுமதிக்கவில்லை என்றும் முகாம் மக்கள் தூதுக் குழுவிடம் முறையிட்டு, தங்களுக்கு மேலும் உணவு, உடை, பால்மா போன்ற உதவிகளை வழங்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

ஆயிரத்திற்கும் மேலான பாலகர்கள் மிகவும் வருந்தக்கூடிய நிலையிலே அசுத்தமான வடிகால்களின் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருப்பதையும் பிள்ளைகளுக்கு உணவு, உடை, அப்பியாசப் புத்தகங்கள் இல்லாத காரணத்தினால் பாடசாலை போக முடியாத நிலைமைகளையும், கொழும்பில் ஒரு வசதி படைத்த வீட்டிலிருக்கும் நாய்க் கூண்டிலும் பார்க்க கேவலமான காற்றோட்டமில்லாத, சிறுசிறு கிடுகு அடைப்புகளுக்குள் குடும்பங்கள் கைதிகள் போன்று வைக்கப்பட்டுள்ள அவல நிலையையும் அவதானித்த மாமன்ற தூதுக்குழு, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை கோருவதென தீர்மானித்துள்ளது.

# இந்து மதத்தின் சிறப்பியல்புகள்

வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்

இந்து மதத்தின் சிறப்பியல்புகள் பல. யோகம் என்னும் முறையைச் சொல்லும் சிறப்பு இந்த மதத்துக்கு உண்டு. இராஜயோகம், ஹடயோகம் என்று வழங்கும் யோக முறைகள் இந்த நாட்டிற்கே உரியன. இதை அயல் நாட்டாரும் கற்றுப் பயின்று வருகிறார்கள்.

மற்றொரு சிறப்பியல்பு ஜீவன் முக்தி என்பது. ஆன்மா உடம்புடன் இருக்கும்போது ஜீவன் என்ற பெயருடையதாக இருக்கிறது. உடம்பில் ஆன்மா இருக்கும்போதே பேரின்ப அனுபவத்தைப் பெறுவது ஜீவன் முக்தி. எல்லாச் சமயங்களும் இறுதியாகக் கடவுளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடைவதைக் கூறுகின்றன. இறந்த பிறகு அடையும் நிலை அது. இந்து மதமோ, இந்த உடம்பில் இருக்கும்போதே ஆன்மா அந்த இன்பத்தை அடையும் நெறியைச் சொல்கிறது.

"இத்தேகமொடு காண்பனோ"

என்ற தாயுமானவர் வாக்கில் இந்த உண்மையைக் காண்கிறோம்.

"நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்இந் திரியம் எல்லாம்நீத்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உவப்பில் அதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்
அன்றே அப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே"

என்று நம்மாழ்வாரும் இந்நிலையைக் கூறுகிறார். பற்றுக்களெல்லாம் அற்றபோது இந்த அனுபவம் கிடைக்கும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதும் இதையே குறிக்கிறது.

இவ்வாறு இந்த உடம்புடன் வாழும்போதே, பழுத்த புளியம்பழத்தைப் போலப் பற்றெல்லாம் நீங்கி நிற்கும்போது பேரின்பத்தை நுகரலாம் என்பதை இந்து மதம் சொல்வது அதன் சிறப்பியல்புகளில் ஒன்று.

இனி, மற்றொன்றைப் பார்க்கலாம்; கடவுளை வணங்கி வழிபடுபவர்கள் பல மூர்த்திகளை வழிபடுகிறார்கள். இந்த உபாசனை முறையை வகைப்படுத்தி ஆறு என்று அமைத்தார் சங்கராச்சாரியார். அவை காணபத்தியம், கௌமாரம், சௌரம், வைஷ்ணவம், சாக்தம், சைவம் என்பன. கடவுளுக்கு வடிவங்கள் பல ஆனாலும் அவர் ஒருவரே என்பதை இந்து மதம் வற்புறுத்துகிறது. "ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி" என்பதும், "ஒன்றே குலம் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலர் திருமந்திரமும் இதையே காட்டுகின்றன.

கடவுள் நாமமும் உருவமும் அற்றவர். இந்து மதம் அல்லாத வேறுபல சமயங்கள் கடவுள் உருவம் இல்லாதவர் என்று சொல்லி, அவருக்கு வடிவம் அமைத்து வழிபடுவதை ஏற்றுக்கொள்வதில்லை. இந்து மதமும் இயல்பாகக் கடவுளுக்குப் பெயரோ வடிவமோ இல்லையென்பதை ஒப்புக்கொள்கிறது. ஆனால் பக்தர்களுக்குத் தியானம் செய்யும் பொருட்டுப் பெயரையும் வடிவத்தையும் எடுத்துக் கொள்வான் என்று இந்து சமயம் சொல்கிறது.

மனம் ஏதேனும் உருவம் இருந்தால்தான் அதைப் பற்றிக்கொள்ளும். பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய நெருப்பைத் தனியே நாம் பார்க்க முடியாது. ஏதேனும் கட்டையையோ திரியையோ பற்றிக்கொண்டால்தான் அதைப் பார்க்கமுடியும். ஐந்து பூதங்களில் ஒன்றாகிய தீயையே பற்றுக்கோடு இல்லாமல் பார்க்க முடியாது என்றால்யாவும் கடந்த பெருஞ் சோதியாகிய இறைவனை எப்படிக் காணமுடியும்? அவனை அறிந்து போற்றாவிட்டால் பேரின்பம் பெற முடியாது. அவனோ பொறிபுலன்களுக்கு எட்டாமல் அப்பால் நிற்கிறவன். அப்படியானால் இறைவனுடன் எவ்வாறு நாம் தொடர்பு கொள்ள முடியும்? இறைவனே கருணையினால் வடிவம் எடுத்துக்கொள்கிறான். மக்களின் மனத்திலே புகுவதற்காகவே அதை எடுத்துக்கொள்கிறான். அப்படியானால் அவன் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வரலாமே! பல வடிவங்களை மேற்கொள்வதனால் குழப்பம் அல்லவா உண்டாகும்? இவ்வாறு சில கேள்விகள் எழலாம்.

மனிதன் தான் நுகரும் பொருள்களை வெவ்வேறு வகையில் நுகர்கிறான். அவனுடைய உணவில் பல வகைகள் இருக்கின்றன. அவனுடைய உடைகளிலும் பல வகைகள் உண்டு. அவன் வாழும் வீடுகளும் பலவகைகளாக உள்ளன.

ஒரேமாதிரி உணவு, ஒரேமாதிரி உடை, ஒரேமாதிரி வீடு என்று இருந்தால் மனிதனுக்கு இனிமை உண்டாவது இல்லை. பல்வகையாக இருப்பதே வாழ்வில் சுவை உண்டாக்குகிறது. அதனால் பலவகை வடிவங்களை வழிபடுவதனால் மேலும் பக்தி பெருகுமேயன்றிக் குறைவதில்லை.

ஆண்டவன் தன் வடிவத்தைக் காட்டுவது அன்பர்கள் அதைப் பற்றிக்கொண்டு தியானம் செய்து உய்யவேண்டும் என்பதற்காகத்தான். மக்கள் பலவகை மனோபாவங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். 'லோகோ பின்ன ருசி' என்றபடி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வடிவத்தில் ஈடுபாடு உண்டாகிறது.

ஞானியர் இறைவனைத் தியானம் செய்து அவன் சுடருருவைத் தம்முள்ளே தரிசிக்கிறார்கள். அந்த உருவத்தைப் பிறரும் காணவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அதை உள்ளே காணுவதற்குரிய பக்குவம் எல்லோருக்கும் இருப்பதில்லை. ஆதலால் தாம் கண்ட உருவங்களுக்கு வடிவமைத்துத் தந்து நம்மை வழிபடும்படி செய்கிறார்கள். தம் உள்ளத்தில் கண்ட வடிவத்தை வெளிப்படையாக நாம் தரிசிக்கும்படி விக்கிரகங்களாக வடித்துத் தருகிறார்கள். அவ்வாறு செய்வதற்கு ஆகமங்கள் வழிகாட்டுகின்றன. அகத்தே கண்டதை ஒருவாறு புறத்தே அமைத்து அவர்கள் காட்டுகிறார்கள். நாம் புறத்தே கண்ட அந்த வடிவத்தை அகத்திலும் தியானித்துப் பயிற்சி செய்ய வேண்டும். அப்போது புறத்தே கண்ட அந்த உருவம் தேசு பெற்றுத் தோன்றும், நடனமிடும், நம்மோடு பேசும். இந்த உள்ளுணர்வாகிய ஆனந்தத்தைப் பெற்றவர்கள் பலர்.

"என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்"
என்று அப்பர் பாடுகிறார்.

*"போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்*
*வாக்கும் மனமும் வடிவும் இல்லாதொன்று வந்து வந்து*
*தாக்கும்; மனோலயம் தானே தரும்; என்னைத் தன்வசத்தே*
*ஆக்கும்; அறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே"*

என்ற அருணகிரியார் திருவாக்கில் இந்த அனுபவத்தைப் பார்க்கலாம்.

இவ்வாறு உள்முகத்தே வைத்துத் தியானிக்கவே கடவுள் பல உருவங்களை எடுக்கிறார். ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு வகையில் இருப்பதால் இறைவன் பல பல வடிவங்களை எடுக்கிறான். ஏதேனும் ஒன்றில் மனிதன் மனம் ஈடுபடவேண்டுமென்பதே அவன் திருவுள்ளம்.

தேங்காய், பழம், கற்பூரம், சாம்பிராணி முதலிய பண்டங்களைக் கோவிலுக்கு அருகில் விற்கிறார்கள். நவதானியக் கடையில் பலவகைத் தானியங்களையும் பெறலாம். ஜவுளிக் கடையில் பல வகையான ஆடைகளைப் பெறலாம். இப்படியே வெவ்வேறு வகையான பண்டங்களை விற்கும் பல்வேறு கடைகள் உள்ளன. எல்லாப் பண்டங்களையும் ஒரே கடையில் பெறுவதானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அப்படியும் சில கடைகள் உண்டு. அவற்றை உயர்ந்த கடை (Super Market) என்று சொல்கிறார்கள். பலவகைப் பண்டங்களையும் தரும் கடை உயர்ந்த கடையாகுமானால், பலவகை மனோபாவங்களையுடையவர்களுக்கும் ஏற்ற வகையில் பல வகையான வடிவங்கள் இறைவனுக்குரியவை என்று சொல்லும் இந்து மதம் மிகச்சிறந்த மதம் (Super Religion) என்று சொல்லலாம் அல்லவா?

கிராமத்தில் உள்ள ஒரு பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகள் வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு கல்லூரிகளில் படிக்கிறார்கள். விடுமுறையில் யாவரும் ஊருக்கு வருகிறார்கள். தாம் உண்ணும் உணவு விடுதிகளில் தம் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் சிற்றுண்டிகளைப் பெற முடியாமல் ஏங்கிய அவர்கள் ஊருக்கு வந்தவுடன் ஆளுக்கு ஒரு சிற்றுண்டி வேண்டுமென்று அன்னையிடம் சொல்கிறார்கள். அன்னை செல்வமுடையவளாதலாலும், தன் பிள்ளைகளுக்கு வேண்டியதைச் செய்துதரும் அன்பு உடையவளாதலாலும், அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து தருவதோடு, அவற்றிற்கு மேலும் சில சுவையான சிற்றுண்டிகளைச் செய்து தருகிறாள். இது அவளுடைய வளவாழ்வையும் தன் மக்களிடம் உள்ள அன்பையும் காட்டுகிறது. ஏதேனும் ஒன்றைச் செய்து, இதைத்தான் யாவரும் உண்ணவேண்டும் என்று சொல்லமாட்டாள். வறுமையுடையவர்களே அப்படிச் சொல்வார்கள்.

அவ்வாறு வளம் பெற்ற இந்து மதம் வெவ்வேறுவகையான மூர்த்திகளைக் காட்டி, எப்படியாவது மக்கள் உய்யவேண்டும் என்று எண்ணும் வகையில் அமைந்திருக்கிறது. இதைச் சிறப்பான மதம், எல்லாவகையான மன இயல்புடையவர்களுக்கும் ஏற்ப வழிகாட்டும் மதம் என்றால் பிழை உண்டா?

இவ்வாறுள்ள மூர்த்தி பேதங்களை வழிபடலாம் என்று சுருதி சொல்கிறது. மேலே சொன்ன காரணங்கள் யுக்திக்குப் பொருத்தமாக உள்ளன. சுருதி, யுக்தி, அனுபவம் என்று மூன்றைச் சொல்வதுண்டு. சுருதியாலும், யுக்தியாலும் பல வடிவங்களை வழிபடுவது நடைமுறைக்கு ஏற்றது என்பதை உணர்ந்தோம். அனுபவத்தில் அது சாத்திய மானதா என்று பார்க்கவேண்டும்.

இந்த மூர்த்திகளை வழிபட்டுப் பேரின்ப வாழ்வைப் பெற்றவர்கள் இந்த நாட்டில் உண்டு. சிவபெருமானை வழிபட்டுப் பேரின்ப வாழ்வு பெற்றவர்கள் நாயன்மார்கள். திருமாலை வழிபட்டு உய்தி பெற்றவர்கள் ஆழ்வார்கள். அம்பிகையை உபாசனை செய்து நலம் பெற்றவர்கள் இராமகிருஷ்ணபரமஹம்ஸர், அபிராமிபட்டர் முதலியோர். முருகப்பெருமானை வழிபட்டு இன்பம் பெற்றவர்கள் அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள் முதலியோர். இவ்வாறே ஒவ்வொரு மூர்த்தியையும் வழிபட்டவர்கள் பலர். ஆகவே பல உருவ வழிபாடு அனுபவத்துக்கும் துணை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒருவனே பல வடிவங்களையும் வழிபடலாமா என்ற கேள்வி எழலாம். எந்த வடிவத்தில் தன் மனம் ஈடுபடுகிறதோ அதைப் பற்றிக்கொண்டு தியானம் செய்யவேண்டும். இதனால் மற்ற வடிவங்களைப் புறக்கணிக்கவேண்டும் என்பதன்று. கற்புடைய மங்கை ஒருத்தி புறத்தே அண்ணன், தம்பி, தந்தை, பிற உறவினர் ஆகியவர்களோடு பேசிச் சிரித்துப் பழகினாலும், இன்பத்தை விழையும்போது தனிமையில் தன் கணவனோடு இணைகிறாள். அவ்வாறே எல்லா மூர்த்திகளையும் வணங்கினாலும் தனக்கு விருப்பமான மூர்த்தியை உண்முகத்தே தியானித்து வரவேண்டும். வீதியில் உள்ள வீடுகளெல்லாம் நன்றாக இருந்தாலும், தன் உறவினர் வாழும் வீடுகளுக்கு ஒருவன் அவ்வப்போது சென்று வந்தாலும், அவன் தன் வீட்டுக்கு வந்தே உண்ணுகிறான், உறங்குகிறான். அவ்வாறே எல்லா மூர்த்திகளையும் வேறுபாடின்றித்தரிசித்தாலும், தன்னுடைய உபாசனா மூர்த்தியை உள்ளத்தே வைத்துத் தியானம் செய்வதே அநுபவத்தைப் பெறுவதற்குரிய வழி.

வேற்றுமையில் ஒற்றுமையைக் காட்டும் இந்தச் சிறப்பியல்பு இந்து மதத்துக்கு உரியது.

பல கிளைகளும் வளரும் தன்மை உடைய ஆலமரத்தை பெரியதாகக் கருதுகிறோம். அது 'ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க' நிழல் தருகிறது. அத்தகையதே இந்து மதம். அதிகாரமோ, விளம்பரமோ இல்லாமல் இந்த மதத்தின் பெருமையை உணர்ந்து அமெரிக்கர்களும் வேறு நாட்டவர்களும் இதை விரும்புகிறார்கள். உண்மையான மதிப்பு இருப்பதால் அதைப் பலரும் விரும்புவது இயற்கை.

இதுவரைக்கும் கூறியவற்றால், இந்து மதம் ஜீவன் முக்தியை அடைய வழிகாட்டுவது என்பதும், எப்படியேனும் மனிதன் தன் மன இயல்புக்கு ஏற்ற வடிவத்தைத் தியானித்து உய்யவேண்டுமென்று கருதிப் பல மூர்த்தி வழிபாட்டை வகுத்திருக்கிறது என்பதும் புலனாகும்.

*நன்றி – அகில உலக இந்து*
*மாநாட்டு மலர் – 1982*

## யோகர் சுவாமிகளின் மகாவாக்கியங்கள்

யோகர் சுவாமிகள் 91 வயது வரை இப்பூலகில் வாழ்ந்து மக்களின் துயரைத்துடைத்து நல் உபதேசங்களைச் செய்து நல்வாழ்வு வாழ வழிகள் வகுத்துக் கொடுத்தார். அவர் எமக்கு நற்சிந்தனை எனும் அரிய பொக்கிஷத்தை வழங்கியுள்ளார்.

"சும்மா இரு"
"எப்பவோ முடிந்த காரியம்"
"நாம் அறியோம்"
"முழுவதும் உண்மை"
"ஒரு பொல்லாப்பும் இல்லை"

இம் மகா வாக்கியங்கள் நான்கு வேதங்களையும் பன்னிரு திருமுறைகளையும், பதினெண் புராணங்களையும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும், இருபத்தெட்டு ஆகமங்களையும் பிழிந்தெடுத்த சாறாகும்.

கல்லால விருட்சத்தின் கீழிருந்து நால்வருக்கு அறமுரைத்த, தெட்சணா மூர்த்தியின் திருவுருவத்தை "சும்மா இரு" என்பது படம் பிடித்துக் காட்டுகின்றது. மனிதன் முடிந்த காரியங்களை நினைத்து பச்சாதாபப்படக் கூடாதென்பதை இரண்டாவது மகாவாக்கியம் உணர்த்துகின்றது.

நாம் என்ற அகந்தை வசப்பட்டு இறந்து போகாமல் இறைவனிடம் சரணடைய வேண்டும் என்பதை மூன்றாவது மகாவாக்கியம் உணர்த்துகின்றது. இறைவன் அல்லாமல் உலகத்தில் எதுவுமில்லை என்பதை நான்காவது மகா வாக்கியம் விளக்குகின்றது.

உலகம் உன்னை இகழ்ந்தாலும் சரி புகழ்ந்தாலும் சரி இரண்டையும் ஒன்றாகக் கருதி சமநிலையில் மனதை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை ஐந்தாவது மகாவாக்கியம் விளக்குகின்றது. எனவே இம்மகாவாக்கியங்களின் உட்கருத்தை நன்குணர்ந்து நற்சிந்தனைப் பாடல்களைத் தினமும் ஓதி நற்கதி அடைவோமாக.

*(திருமதி. யோகாம்பாள் இராஜசிங்கம் கனடா சிவத்தொண்டன் நிலையத்தில் ஆற்றிய உரையின் ஒருபகுதி)*

# A TRANSLATION OF THE SÚTRÃS
## of
# SIVAGNÃNA BHÕDHAM

**Sir Ponnambalam Arunachalam**

1. அவனவ ளதுவெனு மவைமூ வினைமையில்
தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்

Inasmuch as the things called he, she, it (the universe) have the threefold act (appearance, continuance, disappearance), they stand evolved. From that into which they are involved (ஒடுங்கி) they by innate taint (*மலம், malam*) are (again in like manner) evolved. The Last is the First, say the wise.

2. அவையே தானே யாயிரு வினையில்
போக்கு வரவு புரிய வாணையில்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

Being those things (*i.e.*, he, she, it = the universe) and Himself (*i.e.*; other than the universe), while by His Sovereign power (ஆணை), according to their twofold deed, (souls) come and go, inseparable He stands from of old.

3. உளதில தென்றலி னெனதுட லென்றலின்
ஐம்புல னொடுக்க மறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

Soul there is in the *mãya*-machine, the body, for that we say "no, no" ('I am *not* the gross body, *not* the organs of action *not* the organs of sense, etc.'), for that we say, "This is my body", for that we know the five senses at work and at rest, for that in sleep there is no food (experience) or action, for that we know when made to know.

4. அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

Not one of the inner organs (intellect, etc.) is the soul with them it is united. By innate taint (சகச மலம்) it knoweth not. Like King and his Ministers, it standeth in the five; states (waking, dreaming, deep sleep, *turiyam* and beyond *turiyam*).

5. விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தளந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

By the (power of the) aforesaid soul, the body (*i.e.*,skin) mouth (tongue), eye, nose (and ear) know each (its appropriate object, touch, taste, etc.,) but know not (each itself or the soul). Like them, (the soul) by the peerless Grace (of the Lord) knows (objects and pains and pleasures), but knows not itself (or Him). It (the working of Grace) is like iron in the presence of the magnet (*i.e.*, God energizes the soul but remains unaffected).

6. உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

If He is a form knowable (by the senses or intellect, etc.) He is not real (*i.e.*, is subject to change and is not lasting); if He is not knowable (in any way), He is not (*i.e.*, hath no existence, like a hare's horns). Therefore neither as the one nor as the other, but as the Blessed Reality (சிவசத்தி) in two ways the wise declare Him (*i.e.*, not knowable by the senses, intellect, etc., but knowable by His Grace or Holy Spirit (அருள்).

7. யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராதலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டிலா வான்மா.

In the presence of the one Reality (Sat) all things are nothing (súnyam). The Real knows not them. The Unreal hath no existence and knows not (the Real). The Soul, which is neither one nor the other, knoweth both.

8. ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே.

The soul's Lord, by reason of its meritorious acts (தவம், in past lives) appears even as Teacher and declareth: "Growing up among wild men, the five senses, thou hast forgotten (thy true nature)." Then the soul, quitting (them), wins oneness with the feet if Hara.

9. ஊனக்கண் பாச முணராப்பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

The Lord, whom the eye of the flesh and of the mind (பாசம், literally, "fetters") knoweth not, seek thou in thy heart with the eye of the spirit (ஞானக்கண்) and when the universe (பாசம், 'fetters', mind and its creature, the universe,) drops off like the riderless chariot (mirage), cool, refreshing shade will be the Lord. (Till then) duly meditate on the five Letters.

10. அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்லினை யின்றே

When He (the Lord) and itself (the soul) become one and its acts become His acts, there is no taint of *malam* (ஆணவம்), of *māya* or of deed of power (வல்வினை=âgâmya).

11. காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பி னரன்கழல் செலுமே.

As to the seeing eye, 'tis the soul that (standing as one with it) shows and makes it see (itself and Him), therefore by unfading love (that never forgets its Benefactor) will be reached the feet of Hara.

12. செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே.

Washing of the impure taint (மலம்) that keeps (the soul) from union with the beautiful gracious Lotus feet (of the Lord), consorting with His devotees, offer worship unto the guise of those who, free from delusion, are filled with love (of Him) and unto His temples as unto Hara himself.

## உலக நீதி

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவுந் தீது

தீயகுணமுடையவர்களைப் பார்ப்பதுவுந் தீமையே. அவர்களுடைய அறிவற்ற சொற்களைக் கேட்பதுவுந் தீமையே; அத் தீயவர்களுடைய குணங்களை யெடுத்துச் சொல்வதுந் தீமையே ; அவர்களுடனே சேர்ந்திருப்பதுவும் தீமையேயாம்.

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை

நெல்லுக்கு இறைக்கப்பட்ட தண்ணீரானது வாய்க்கால் வழியாகச் சென்று அங்குள்ள புற்களுக்கும் கசிந்து பயனளிக்கும்; பழமையான இவ்வுலகில் நல்லவர் ஒருவர் இருப்பார் ஆயின், அவருக்காக எல்லார்க்கும் மழை பெய்யும்.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு

பிறருக்கு உதவி செய்யாத கரிய கடலின் தண்ணீரை முகிலானது போய் மொண்டுவந்து பிறருக்கு மழையாகப் பெய்து கொடுக்கும் ; அதைப்போலப் பிறருக்கு உதவி செய்யாதவருடைய பெரிய செல்வமானது வேறேயாயினும், அதனையெடுத்துப் பிறருக்கு உதவி செய்பவர்களுடைய செல்வமாகவே கொள்ளப்பெறும்.

# புதுமைக்கும் வழிகாட்டிகளாகப் பண்டே நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்

சுடர் - 4

ஆ. குணநாயகம்

*"வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும் காட்டையே*
*தஞ்சமெனத் திரியும் வேடனார்க்கும் வேண்டுவன ஒன்றேயாம்."*

**ப**ண்டைக் காலத்தில் சிறந்த ஆசிரியராக இருந்து பலருக்கு அரிய நூல்களை ஓதுவித்தவர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர். இவ்வரிசையில் மதுரைக் கணக்காயனார் என்று ஒருவர் இருந்தார். அவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இவருடைய மகனார் நக்கீரனாவார். இவரது காலத்துப் புலவர்களுள் இவர் தலைமைப் புலவராக விளங்கினார். இவரே "திருமுருகாற்றுப்படை" பாடி முருகன் திருவருள் பெற்றவர். நெற்றிக்கண்ணைக் காட்டினாலும், குற்றம் குற்றமேயென்று சிவபெருமானோடு வாதாடியவரும் இவரேயாம். இவர் அந்தணரல்லர், வேளாண் மரபினர். பரந்த நோக்குடையவர். பிறர் நலன்களில் அக்கறை கொள்ளும் மனப்பான்மை படைத்தவர்.

இத்துணைச் சிறப்புடைய புலமை சிறந்த நக்கீரனார், மலையும், நாடும், கடலுமாகிய எப்பகுதியிலும் வாழும் மக்கள் பலருடைய முயற்சி முற்றும் தம் புலமைக் கண்ணால் நோக்கினார். எல்லோருடைய உள்ளமும் பொருளீட்டற்கண் பேரார்வமுற்று இயங்குவது தெரிந்தது. நாடுகட்குத் தலைமை தாங்கிய வேந்தர், பொதுச் சொல் மேவாது, அரசு புரிவதும், காடுகளில் வாழும் விலங்குகளை வேட்டையாடித் திரியும் வேட்டுவர் இரவும் பகலும் தமக்குரிய விலங்குகளைப் பற்றி எண்ண முயல்வதும், நக்கீரர் கருத்தை ஈர்த்தன. இவரது உழைப்பின் முடிவு என்னை என்று ஆராய்ந்தார். இவர் அனைவர்க்கும் வேண்டுவன, உண்டியும் உடையுமே என்றும், அவற்றுள் உண்பது நாழி, உடுப்பது இரண்டும் என்றும் பிற வகையில் ஒரு வேற்றுமையும் இல்லையெனவும் துணிந்தார். இவற்றை நோக்குமிடத்து, வேண்டுவன சிறிதும், ஈட்டுவன பெரிதுமாதலின், மிக்கு நிற்கும் செல்வத்தால் செய்ய வேண்டுவது ஈதலாகிய அறமேயாகும். இது செய்யாராயின், அறமும், பொருளும், இன்பமும் எய்தப்பெறா என்பதனை உணர்ந்தார். இக்கருத்துக்களை ஒரு பாட்டின் கண்வைத்துப் பாடியுள்ளார். இப்போது அப்பாட்டின் பொருளை முதற்கண் பார்ப்போம் :-

*"தெளிந்த நீராற் சூழப்பட்ட உலகு முழுவதையும், பிற வேந்தர்க்குப் பொதுவாதலின்றித் தாமே உரித்தாக ஆண்டு, வெண்கொற்றக் குடையால் நிழல் செய்த ஒரு தன்மையை உடையோர்க்கும், இடையாமத்தும் நண் பகலும் துயிலானாய், விரைந்து ஓடும் விலங்குகளைப் பற்றக் கருத்துச் செல்லும் கல்வியில்லாத ஒருவனுக்கும், உண்ணப்படும் பொருள், நாழி உடுக்கப்படுபவை இரண்டே, பிற தேவைகளும் எல்லாம் ஒப்புடைத்தாகவே இருக்கும். ஆதலால், செல்வத்தாற் பெறும் பயனாவது, கொடுத்தல்; இதனை விடுத்து, செல்வத்தை நாமே நுகர்வோம் என்று கருதின், தவறுவன பல."*

இதற்குரிய பாடல் பின்வருமாறு :-

*"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி*
*வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்*
*நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்*
*கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்*
*உண்பது நாழி உடுப்பவை இரண்டே*
*பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே*
*செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்பே மெதினே தப்புந பலவே."*

இங்கே உடுப்பவை இரண்டே என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது, அரையிற் கட்டிக் கொள்ள நான்கு முழமும், மேலே போடடுக் கொள்ள இரண்டு முழமும் ஆகையால், உடுப்பவை இரண்டாயிற்று. பிறவும் எல்லாம் ஓரொக்குமே என்றது, உண்டல், உறங்கல், இனப் பெருக்கல் ஆகியன.

பல்லாண்டுகளுக்கு முன்பே நக்கீரனார் எடுத்துக் கூறிய இக்கருத்துத் தீர்க்க தரிசனம் போன்றதோர் அற்புதமான கருத்து. செல்வ நிலையின் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும் வேறுபாடு மக்கள் சமூகத்தில் மாத்திரமன்றிச் சர்வதேச அரங்கிலும் பூசலையும் போட்டியையும் உண்டுபடுத்தும் ஆணி வேராக உள்ளது. இக் காலத்தில் தேசங்களுக்கிடையே, "உள்ளான்", "இல்லான்" (Haves and Have - nots) என்னும் வேறுபாடு யுத்தங்களையே உருவாக்கக் கூடிய தன்மையாய் உள்ளன.

இதற்கோர் விமோசனமாகவே கொடையை எடுத்து விதந்தோதினார் நக்கீரனார்.

கொடையென்பது சர்வதேச அரங்கில் வெவ்வேறு உருவில் வழங்கப்படலாம். பொருளாதாரத் துறையில் இதனைச் சாத்தியமாக்கலாம். ஆனால், முதற்கண், நக்கீரனாரின் சீரிய கருத்தின் நுண்பொருளை உய்த்துணர்ந்து ஏற்றுக் கொண்டாலேயே சாத்தியம் கைகூடும்.

இதற்கு மாறாக, நான் செல்வனாக இருக்க வேண்டும், மற்றவர் எப்படி இருப்பினும், அதனால் எனக்கு அக்கறை இல்லை, என்று எண்ணுவதனால் முரண்பாடு ஏற்படுதல் இயல்பே. உலகத்தில், சாந்தி, சமாதானத்திற்கு இடம் இருக்காது.

சில அரசுகள் தமது கோட்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலும் கூட, அவற்றைக் கடைப் பிடித்து ஒழுகும் பிற சில சிறிய அரசுகளுக்குக் கொடை உதவியைப் பல்வேறு வடிவில் வழங்குவதை நாம் பார்க்கின்றோம். அதே வேளை, உண்மைத் தேவை உடைய நாடுகளைக் கிஞ்சித்தும் கவனியாதிருப்பதையும் பார்க்கிறோம். இத்தகைய கொடைகள் சுயநலச் சார்புடைய இழுக்குடைக் கொடுப்பனவேயன்றி நற்கொடையின் பாற்படாது. இந்தக் கருத்தைத் திரு வள்ளுவனார், விருந்தோம்பல் அதிகாரத்தின் கீழ் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

*''இனைத் துணைத்து என்பது இல்லை; விருந்தின்*
*துணைத் துணை வேள்விப் பயன்''*

ஒரு கொடைச் செயலை மேல்வாரியாகப் பார்த்து இது நல்ல கொடை, இதன் சிறப்பு இத்தகையது, என்று சொல்லி விடமுடியாது. யாருக்குக் கொடுக்கப்பட்டது, என்ன நோக்குடன் கொடுக்கப்பட்டது, என்ன சந்தர்ப்பத்தில் கொடுக்கப்பட்டது. என்றெல்லா அம்சங்களையும் நன்கு ஆராய்ந்த பின்னரே, அதன் சிறப்பு இவ்வளவினது என்று தெளியப்படல் வேண்டும். மனிதனுக்கு இருக்க வேண்டிய சிறப்பியல்புகளில் முக்கியமானதொன்று கொடைப் பண்பாகும். இது, பொருளியல் நிலையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்வதேயாகும். இதனை விட, வேறுமோர் பாரிய காரணம் உண்டு.

மனிதன் மாதா வயிற்றினின்றும் உதிக்கும் பொழுதே, கோடான கோடி கடன் பழுவைச் சுமந்து கொண்டே தோற்றம் அளிக்கின்றான். அதாவது, சொல்லில் அடங்காத எத்தனை சௌகரியங்களை, பிறந்த மனிதன், அனுபவிக்கின்றான். இவையெல்லாம் கோடான கோடி மக்களின் கைங்கரியமன்றோ! இப் பாரிய கடன் பழுவுக்குக் கைமாறாக மனிதன், தனது கொடையின் மூலம், ஒரு துளியையாவுதல் செலுத்தியாக வேண்டும். அதனைத் தானும் செய்யாதவன் திருடன் என்று ஸ்ரீமத் பகவத்கீதை பேசுகின்றது (3–12).

தங்கள் பொருட்டாகவே சமைக்கும் பாவிகள், பாவத்தையே உண்கின்றார்கள் – கீதை, 3–13

''கொடையிலேன், கொள்வதே நான் ?'' என்று அப்பரடிகள் ஒரு இடத்தில் தன்னையே வைது கொள்கின்றார்.

*''இரத்தலின் இன்னாது, மன்ற நிரம்பிய*
*தாமே தமியர் உணல்''*

*– திருக்குறள் 229*

பசியால் வாடும் பிறர்க்குக் கொடுக்காது தாமே, வயிறு புடைக்கத் தனித்து உண்ணுதல், பிச்சையெடுத்து உண்பதிலும் இழிவானது.

கொடையென்பது பணக் கொடையாக மாத்திரம் அமைய வேண்டிய தொன்றல்ல. அது பல்வேறு வடிவங்களில் வழங்கப்படலாம். அது மனித சேவையாக இருக்கலாம், கல்வியறிவு புகட்டுவதாக இருக்கலாம், உள்ளத்திலிருந்து எழும் உண்மை அன்பாகத் தானும் இருக்கலாம். இதற்கு வரையறுத்தல் கிடையாது.

''சமதர்மவாதம்'' என்னும் அரசியற் கோட்பாடு தெய்வீக மயமானது. அதனை உலகளாவிய ரீதியில் செயற்படுத்த முற்பட்டோர், அக் கோட்பாட்டினின்றும் கடவுள் தன்மையை நீக்கி, இனங்களுக்கிடையே விரோத மனப்பான்மையை உண்டுபடுத்தி, அதனைச் செயற்படுத்தக் கையாளப்படும் சாதனம் இரத்த சகிதப் புரட்சியாகவும் இருக்கலாம் என முனைந்தனர். அம் முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

ஆனாலும், இவ்வுலகத்தின் கண்ணே பொருளியல் துறையில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு அடி அத்திவாரமாகவுள்ள மூல காரணத்தை மூதறி புலவர் நக்கீரனார் தமது நுண் மாண் நுழை புலன் கருவியாகப் பல்லாண்டுகளுக்கு முன்னரேயே எடுத்து விளக்கியுள்ளார்.

புலவர் பெருமானின் தீர்க்க தரிசனச் சிந்தனை
இருந்தவாறென்னே !

# சைவ சித்தாந்தம் - சில அடிப்படைகள்

க. கணேசலிங்கம்

சைவசமயத் தத்துவமாக அமைந்தது சைவசித்தாந்தம். சித்தாந்தம் என்பதன் பொருள் முடிந்த முடிபு என்பதாகும். பலவித ஆய்வுகளின் பயனாகக் கண்டு தெளிந்த முடிவே சைவசித்தாந்தமாகும்.

சைவசித்தாந்தக் கருத்துக்கள் சைவ ஆகமங்களிலும் பழந்தமிழ் நூல்களிலும், திருமுறைகளிலும், விரவிக்கிடக்கின்றன. ஆயினும் அவற்றைத் தொகுத்து முறைப்படுத்திப் பதினான்கு சாத்திர நூல்களாக சைவ அறிஞரும். அருளாளரும் தந்துள்ளார்கள். இந்த நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படுகின்றன. இவையும் தேவாரம் திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகளும் சைவசமயத்தினரால் போற்றப்படவேண்டியன. இந்நூல் அனைத்தும் தமிழ் மொழியிலே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சைவ சித்தாந்தத்தைத் தமிழர் தத்துவம் எனலாம்.

சைவ சித்தாந்தக் கொள்கை விளக்கமாக இறைவனின் சிறப்பியல்பு (சொரூபலட்சணம்) பொதுவியல்பு (தடத்த லட்சணம்), முத்தியில் ஆன்மாவின் நிலை முதலியன சொல்லப்படுகின்றன. அதன் பொருள் விளக்கமாக முப்பொருள் (பதி. பதி. பாசம்.) உண்மை, முப்பொருளியல்பு ஆகியவை கூறப்படுகின்றன.

**மாயை:** நாம் காணும் பொருள்களெல்லாம் தோன்றி, இருந்து, அழிகின்றன. எமது உடலும் உறுப்புக்களும் கூட இந்த மாறுதலுக்கு உட்படுகின்றன. சைவ சித்தாந்தப்படி உள்ளது அழியாது, இல்லது தோன்றாது. இக்கொள்கை சற்காரியவாதம் எனப்படும். இஃது ஓர் அறிவியற் கொள்கையும் கூட. அண்டத்திலுள்ள சக்திகள் அனைத்தும் கூடுவதோ. குறைவதோ இல்லை. ஒவ்வொரு வகைச்சக்தியும் இன்னொன்றாக மாறுகின்றது. பொருள் சக்தியாகவும், சக்தி பொருளாகவும் மாற்றமடைகின்றது. இந்த அடிப்படையில் உலகும், உலகப்பொருள்களும் ஒருவித நுண்பொருளிலிருந்து பிறந்து, மீண்டும் அந்த நுண்ணிய பொருளாக மாறுகின்றன. இந்த நுண்பொருளை மாயை என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. ஆகவே பிறத்தல் இறத்தல் என்பது உடல் பற்றிய நிலைமாற்றங்களேயாகும்.

இறைவன் உலகைப் படைக்கின்றான் என்றால் அவன் மாயையிலிருந்து அதனைத் தோற்றுவிக்கின்றான் என்பதே பொருள். இது குயவன் ஒருவன் மண்ணிலிருந்து பானையை உண்டாக்குவதை ஒக்கும். பானைக்கு முதற்காரணம் மண், துணைக்காரணம் பானை செய்யப்பயன்படும் சக்கரம், நிமித்த காரணம் குயவன். இதேபோல் உலகப் பொருள்களைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணம் மாயை. துணைக்காரணம் இறைவனது ஆற்றல் ஆகிய சக்தி. நிமித்த காரணம் இறைவன்.

வேதாந்திகள் கூறுவதுபோல மாயை என்பது ஒரு பொய்த்தோற்றம் (An Illusion) அல்ல. அஃது ஓர் உள்பொருள் (சத்தியப் பொருள்) என்று சைவ சித்தாந்தம் உறுதிப்படுத்துகிறது.

**கன்மம்** : உடல் எடுத்த உயிர்கள் அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் செயல் செய்கின்றன. நாம் செய்யும் செயல் அல்லது வினையின் பயனை நாமே அனுபவிக்க வேண்டும். இந்தக் கொள்கை பொதுவாக எல்லாச்சமயங்களுக்கும் உடன்பாடானது. வினையையும் வினையின் பயனையும் கன்மம் என்று பொதுவாக அழைப்பர். செய்கின்ற வினையின் பயனை உடனே அனுபவிக்க வேண்டுமென்பதில்லை. அது இனி வரும் பிறவிகளிலும் வரலாம். பல விதைகளை ஒரே நேரத்தில் நிலத்தில் விதைத்து நீருற்றினாலும் அவை எல்லாம் ஒரே நேரத்தில் முளைவிடுவதில்லை. முந்திப்பிந்தி முளைவிடுகின்றன. எமது வினைப்பயனும் இது போலவே முந்திப்பிந்தி அனுபவத்திற்கு வருகின்றன. இந்த வினைப்பயனுக்கு ஏற்பவே நாமெடுக்கும் பிறவிகளும் எம் வாழ்வும் அமைகின்றன. எம் இன்பதுன்ப அனுபவங்களுக்கும் இதுவே அடிப்படையாகும். நாம் செய்யும் வினையானது நல்வினை தீவினை (புண்ணியம், பாவம்) என அமைகின்றது. இதனை இருவினை என்பர்.

**ஆணவம்** : இறைவனும் உயிர்களும் அறிவுடைப்பொருள்கள். ஆனால் இறைவனின் அறிவு நிறைவு பெற்ற அறிவாக இருக்க. உயிர்களின் அறிவு குறைவுடையதாக இருக்கின்றது. இதனால் உயிர்களுக்கு அறியாமை செய்யும் ஒரு பொருள் இருக்கிறது என்பது உணரப்படும். இதனை ஆணவம் என்று சைவசித்தாந்தம் கூறும். உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலில் 'அறியாமை ஆணவம்' என்று கூறப்படுகின்றது. அறியாமை செய்யும் ஆணவம் உயிருக்குள்ள முதற்தடையாகும். இதனால் ஆணவத்தை மூலமலம் என்றும் சொல்வார்கள். மலம் என்பதற்கு அழுக்கு என்பது பொருள், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் மும்மலங்களாகும்.

ஆணவம் அறிவற்ற பொருள். ஆகவே அது தானாக வந்து உயிர்களைப் பற்றமாட்டாது. உயிர் தனக்கு ஊறு செய்யும் ஒன்றைத் தானாக விரும்பிப் பற்றாது. அருளே உருவான இறைவன் உயிர்களுக்கு ஆணவத்தைச் சேர்க்க மாட்டான். ஆகவே, ஆணவம் அநாதியாகவே உயிர்களுடன் சேர்ந்து இருக்கின்றது என்று கொள்ளலாம். இஃது இயற்கையாக உயிர்களுடன் சேர்ந்து செம்பிற் களிம்பு போலவும் நெல்லில் உமி போலவும் இருக்கின்றது. இதனால் ஆணவத்தை சகச மலம் என்றும் கூறுவார்கள். சகசம் என்பதற்கு உடன்பிறந்தது, இயற்கை என்ற பொருள் உண்டு. இதனை உயிரினது இயற்கைக் குற்றம் என்றும் கூறுவர்.

**பதி, பசு, பாசம் :** அனைத்தும், பிரமம், பொருள்களும் உயிர்களும் இறைவனின் வேறல்ல. அவனிலிருந்து தோன்றி அவனிலே ஒடுங்குகின்றன. எல்லாம் அவனது பிரதி விம்பம் என்ற வேதாந்திகளது கொள்கையைச் சைவ சித்தாந்தம் ஏற்பதில்லை. உயிரும் பொருள்களும் இறைவனின் வேறல்லவென்றால் எமக்கும் பிற பொருள்களுக்கும் இறை குணங்கள் இருக்கவேண்டும். அத்துடன் முக்தியடைந்த பின்னும் நாம் இறைவனை விட்டுப்பிரிந்து மீண்டும் பிறப்பு இறப்புக்கு ஆளாகலாம் என்ற நிலை ஏற்படலாம்.

இறைவன் வேறு. உயிர்கள் வேறு. மும்மலங்கள் வேறு என்பது சித்தாந்தக் கொள்கையாகும். மும்மலங்களைப் பாசம் என்றும் கூறுவர். பாசம் என்ற வடசொல்லின் நேர்க்கருத்து கயிறு என்பதாகும். கட்டுதல் என்ற பொருளில் தத்துவங்களில் இது வருகின்றது. தமிழிலே தளை என்று அழைப்பர். இறைவனைப் பதி என்றும், உயிரைப் பசு என்றும், கூறுதலே வழக்கம். உயிர்களுக்கு தலைவன் என்ற பொருளில் பதி என்ற பெயரும், மும்மலங்களால் கட்டுப்பட்டுள்ளது என்ற பொருளில் பசு என்ற பெயரும் வந்தன. பசு என்பது பாசத்தினால் கட்டுப்பட்டது என்பதைக் குறிக்கும். பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் முப்பொருள்கள் என்று சைவத்தில் வழங்கப்படுகின்றன. இறைவன் ஒருவன், உயிர்கள் பல என்பதும், இறைவனைப்போல பசுவும், பாசமும் அநாதி என்பதும் சைவசித்தாந்தக் கொள்கை. இதனை பின்வரும் திருமூலர் திருமந்திரத்தால் அறியலாம்.

*"பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றில்*
*பதியினைப் போல் பசு பாசம் அநாதி"*

கந்தபுராணத்தில் கச்சியப்பர் இதனைப் பின்வருமாறு விளக்குவார்:

*"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்*
*மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன*
*ஆன்றதோர் தொல்பதி ஆர் உயிர்த்தொகை*
*வான்திகழ் தளை என வகுப்பர் அன்னவே"*

இறைவன் அல்லது பதி முற்றறிவுடையது. பாசம் சடமாதலால் அறிவித்தாலும் அறியமாட்டாது. பசு சிற்றறிவுடையது. அறிவித்தால் மட்டுமே அறியும். அஃது எதனைச் சார்ந்திருக்கிறதோ அதன் தன்மையைப் பெறும். உயிரின் இந்தத் தன்மையை சார்ந்ததன் வண்ணமாதல் என்பர்.

**இறையருளும் ஆன்ம வளர்ச்சியும் :** ஆணவம் உயிரினது அறிவையும் ஆற்றலையும் இருள்போல் நின்று மறைக்கின்றது. இருள் என்பதும் அதற்குரிய ஒரு பெயராகும். உயிர் முதலில் உடலெடுக்குமுன், ஆணவத்தைப் பற்றி நின்ற நிலையில், இறைவன் தன் கருணையினால் நுண்ணுடம்பைப் படைத்துக் கொடுக்கின்றான். நுண்ணுடலில் மனம், புத்தி, அகங்காரம் என்ற உட்கருவிகள் (அந்தக் கரணங்கள்) உயிரினது இயற்கைக்கேற்ப விருப்பு வெறுப்புக்களை உண்டாக்குகின்றன. இதனையே உயிரினது தொடக்க வினையாகக் கொண்டு இறைவன் உயிருக்கு அதற்கேற்ற பரு உடம்பை (தூல உடம்பை) கொடுத்து அருளுகின்றான். இதன்பின் வினை செய்தலும், அதன் பயனாக பிறவிகளும், புதிய வினைகளும் தொடர்ந்து வருகின்றன. இவ்வாறாக வினை (அல்லது கன்மம்) உடல் ஆகிய இரண்டு ஒன்றுக்கொன்று காரணமாக அமைகின்றது. இங்ஙனம் மாறி மாறி வரும் வினை, பிறப்பு, இறப்பு என்ற சுழற்சியிலிருந்து நாம் எப்படி விடுபடுவதென்ற வினா எழுகிறது.

ஆணவத்தின் பிடியிலிருந்து எம்மை விடுவித்து இறையாம் தன்மை பெறச் செய்வதற்கே இறைவன் எமக்கு வினைனையும், பிறப்பிறப்பு அனுபவங்களையும் ஊட்டுகின்றான் என்பதை நாம் தெளியவேண்டும்.

உயிரின் இந்த வளர்ச்சியில் இறைவன் அநாதி காலம் தொட்டே எம்மோடு உடனாய் இருந்து வினைகளைச் செய்யத் தூண்டுகின்றான். எம்மோடு ஒன்றாய் இருந்து தன் திருவருளை எமக்குப் பெய்கிறான். ஆகவே இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் உயிருடன் கலந்திருந்து எம்மை உய்ய வைக்கிறான். இந்த இறை – உயிர் உறவை அத்துவித உறவென்பர்.

தன்முனைப்போடு நாம் செய்யும் நல்வினை, தீவினை இரண்டும் வருவினை (ஆகாமியம்) எனப்படும். நாம் முற்பிறப்பில் செய்த வருவினை முழுவதும் அந்தப் பிறவியில் பயனுக்கு வருவதில்லை. பின் வந்த பிறவிகளிலும், இந்தப்பிறவிலும் அதில் ஒரு பகுதி பயனுக்கு வராமல் குவிந்து கிடக்கலாம். இந்த வினைக்குவியலுக்கு தொல்வினை (சஞ்சிதம்) என்று பெயர். ஒவ்வொரு பிறவியிலும் நாம் அனுபவிக்க வேண்டிய வினைப்பயனை, இறைவன் இந்தத் தொல்வினைக் குவியலிலிருந்து ஊட்டுவான். இங்ஙனம் ஊட்டப்படும் வினைக்கு ஊழ்வினை (பிராப்தம்) என்று பெயர். விதியென்ற பலரும் கூறுவது இந்த ஊழ்வினையையேயாம்.

நாம் ஒரு வினை செய்கிறோமென்றால் அந்த வினை தனித்து நடைபெற முடியாது. அஃது ஒரு பொருள் பற்றியே நடைபெறமுடியும். பொருள்களெல்லாம் மாயையிலிருந்து உண்டாகியதால் கன்மம் அல்லது வினைக்கு மாயை தேவைப்படுகிறது. கன்மமும் மாயையும் அறிவற்ற பொருள்களாதலால் அவற்றைக் கூட்டி எம்மைச் செயற்படுத்த வைப்பவன் இறைவனே ஆவான். திரும்பத் திரும்ப வினை செய்தும் அதன் பலன்களை அனுபவித்தும் வரும் உயிருக்கு சிறிது சிறிதாக அளவு விளக்கம் ஏற்படுகின்றது. இந்த அறிவு விளக்கம் அனுபவத்தின் வாயிலாகவே வருகின்றது. அனுபவம் மாயையிலிருந்து தோன்றிய பொருள்கள் மூலம் ஏற்படுகின்றது. ஆகவே நமது அறிவு விளக்கத்திற்கு மாயை துணை செய்தியதென்பது பெறப்படும். இருளிலே கைவிளக்கு பயன்படுவதுபோல. இறையருள் என்னும் பகலவனொளி வரும்வரை மாயை பயன் தருகின்றது. உமாபதி சிவாச்சாரியர் தன் திருவருட் பயனில் 'விடிவாமளவும் விளக்கனைய மாயை" எனக்கூறி இதனை விளக்குவார்.

அறிவு விளக்கம் பெற்ற ஆன்மா "யான்", 'எனது' என்னும் செருக்கொழிந்து, எல்லாம் இறையருளால் நடக்கின்றது என்ற உணர்வு பெறுகின்றது. இந்த நிலையில் ஆணவமலம் வலிமை குன்றி, ஆன்ம அறிவை மயக்க இயலாமல் போகிறது. அதனை 'மலபரிபாகம்' என்பர். அப்பொழுது கன்மத்திலுள்ள பிடிப்பு நீங்கி விருப்பு வெறுப்பு இல்லாத நிலை வரும். இதனை இருவினையொப்பு என்பர். இதன்பின் இறையருள் ஆன்மாவில் பதியும் நிலை ஏற்படும். இதனை அருள்வீழ்ச்சி (சத்தி நிபாதம்) என்பர். ஓர் அவைக்கூட்டத்தினரிடை ஒரு கல் வீழ்ந்தால் அக் கூட்டத்தினர் அனைவரும் விலகுதல் போல அருள்வீழ்ச்சி ஏற்பட்டவுடன் உலகப்பற்றுக்கள் தாமாகவே நீங்கிவிடும்.

உலகப் பற்றுக்களிலிருந்து விடுபட்ட நிலையே வீடு அல்லது முக்தியாகும். சித்தாந்தம் முத்திக்கு மேலாக சிவானந்த அனுபவத்தில் அழுந்துவதைக்கூறி வீடு பேறு என்பதே முடிந்த பயன் எனக்காட்டும். வீடு என்பது பாச நீக்கமும், பேறு என்பது சிவானந்த அனுபவமுமாகும். இங்கே இறையும், உயிரும் கலக்கும் நிலையை அத்துவிதக்கலப்பென்பர். துவிதம் என்றால் இரண்டு. அத்துவிதம் என்றால் இரண்டல்லாதது. ஆனால் ஒன்றல்ல. சித்தாந்தம் கூறும் இந்தக் கலப்பு நீரும் நீரும் கலப்பது போலன்றி உப்பு கலப்பது போல் என்று கூறலாம்.

இங்ஙனம் அத்துவிதமாய் எம்மோடு என்றும் இருக்கும் இறைவனே சிவபெருமான். அவனது ஆற்றலாகிய சக்தியும் அவனும் அம்மை அப்பராக நின்று எம்மை உய்விக்கிறார்கள்.

"சைவத்தை அறியுங்கள்"

## நூல் அறிமுக விழா





மாமன்றத் தலைமையகத்தில் நடைபெற்ற "சைவத்தை அறியுங்கள்" நூலின் அறிமுக விழாவில் நூலாசிரியர் திரு க. கணேசலிங்கம் நன்றியுரையாற்றுவதையும், மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர் உட்பட ஏனைய பிரமுகர்களையும் விழாவுக்கு வருகை தந்திருந்தவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# திருப்புகழில் திருமால்

முருகவே. பரமநாதன்

*கூடிய இலயம் சதிபிழை யாமைக்*
*கொடியிடை உமையவள் காண*
*ஆடிய அழகா அருமறைப் பொருளே*
*அங்கணா எங்குற்றாய் என்று*
*தேடிய வானோர் சேர்திரு முல்லை*
*வாயிலாப் திருப்புகழ் விருப்பால்*
*பாடிய அடியேன் படுதுயர்களை யாய்*
*பாசுபதா பரஞ் சுடரே !*

*– ஏழாந்திருமுறை*

*தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்*
*குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி*
*ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்*
*மழைசோர நினைந்து உருகி ஏத்தி நாளும்*

*– பெருமாள் திருமொழி*

*திருப்புகழ் படிப்பவர் சிந்தைவலு வாலே*
*ஒருத்தரை மதிப்பதில்லை யுன்றனருளாலே*

*– திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம்*

*படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்*
*பிடிக்கும் பொழுதுவந் தஞ்சவென்பாய் பெரும்பான்பினின்று*
*நடிக்கும் பிரான்மருகா......*

*கந்தரலங்காரம்*

*வேலா சரணம் சரணம் என்மேல் வெகுளாமல் இனி*
*மேலாயினும் கடைக்கண் பார் பருப்பத வேந்தன் மகன்*
*பாலா குறுமுனியார்க்கும் திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்*
*ஆலாலம் உண்டவர்க்கும் உபதேசித்த என்ஆண்பவனே*

*– முருகன் அந்தாதி*

*திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷதரு*
*சிற்றடியு முற்றிய னிருதோளும்*
*செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு*
*செப்பெனஎ னக்கருள்கை மறவேனே*

*திருப்புகழ்*

*முந்துதமிழ் மாலை கோடிக்கோடி*
*சந்தமொடு நீடு பாடிப்பாடி*
*முஞ்சர்மனை வாசல் தேடித்தேடி யழலாதே.*

*– திருப்புகழ்*

சுமார் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அருணகிரியார். அவர் பாடியது திருப்புகழ். இறைவன் பெரும்புகழை – கீர்த்தியைச் சந்தக்கவியாற் பாடி[illegible]வர் அவர். பதினாறாயிரம் திருப்புகழ் பாடியதாக இலக்கிய வரலாறு கூறும். இப்போ உள்ளவை ஆயிரத்து முந்நூற்று இருபத்து நான்கு பாடல்கள் மட்டுமே. திருப்புகழ் யாப்பு புதுமையானது, இதைப் பின்பற்றி இசுலாம், சமணம், கிறீத்தவம் போன்ற சமயத்தினர் திருப்புகழ் பாடியுள்ளனர். தான் + அது + ஆன = தான தான என வரும். எனவேதான் அதுவான நிலையைக் காட்டும் இப்பாடல் முருகன் மீது எழுந்தது. குறிஞ்சி நிலக் கடவுள் முருகன். பெரும் பெயர் முருகன் எனப் பேசப்படும். முருகன் செந்தமிழ்த் தெய்வமுமாம். முருகனுக்கும் ஆறு என்ற எண்ணுக்கும் தொடர்பு உண்டு.

திருமுகங்கள் ஆறு. அவன் வளர்ந்த மலர்கள் ஆறு. பால் கொடுத்த கார்த்திகைப் பெண்கள் அறுவர். ஆறுபடைவீடுகள் அவன் ஆலயங்கள், ஆறாதாரத்துக்கும் அவனே தலைவன் திருமந்திரம் ஆறெழுத்தால் அமைந்தது. ஆறுமுகன், சண்முகன் அவன் திருநாமங்கள். அருணகிரி அருளியவை ஆறுபிரபந்தங்கள். அருணகிரி, நக்கீரர், சிதம்பரசுவாமிகள் பாம்பன் சுவாமிகள், தொட்டிக்கலை சிதம்பரமுனிவர், வள்ளலார் முதலிய அறுவர் சிறப்பாகப் பாடினர். திருப்புகழ், ஆற்றுப் படை அலங்காரம் போன்ற பக்திப் பனுவல்கள் ஆறெழுத்தாலமைந்தவை. கதிர்காமம், திருக்கோயில், திருவேரகம், திருத்தணிகை ஆவினன்குடி, இப்படிப்பல க்ஷேத்திரநாமங்கள் ஆறெழுத்தால் அமைந்தவை. விரத நாட்களும் ஆறு.

முருகப் பெருமான் ஈழநாட்டிலும் பல க்ஷேத்திரங்களில் கோயில் கொண்டுள்ளான். கண்ணன் கீதையிலே தெய்வங்களிலே நான் அறுமுகன் என்று கூறுகிறான். திருப்புகழை ஒவ்வொன்றாகத் தட்டிப் பார்த்தால் சுமார் நூறு பாடல்களுக்குச் சற்றுக் கூட உள்ள பாடல்களில் முருகனை, திருமால் மருகோனே எனப் பாடியுள்ளார். இன்னும் பலபுகழ்ப் பாடல்களில் இராமன் கண்ணன் வரலாறு பேசப்படுகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் சமவிழுக்காடுள்ள பாடல்களில் திருமால் பேசப்படுகிறார். முருகனைப் பாட வந்த அருணகிரிப் பெருமான் தான் பாடிய பிரபந்தங்களில் திருமாலையே போற்றியும் உள்ளார். மாதிரிக்குக் கந்தரலங்காரத்தை மட்டும் தொட்டுப் பார்ப்போம்.

*மூவடி கேட்டன்று மூதண்ட கூடமுதடுமுட்டச்*
*சேவடி நீட்டும் பெருமான் மருகன் தன் சிற்றடியே*

*கந்தரலங்காரம் 15*

*கைதானிருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க*
*எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே*

*மேலது 22*

*நடிக்கும் பிரான்மருகா.....*

*மேலது 50*

*மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை*

*மேலது 90*

*கருமான் மருகனை செம்மான் மகளைக் களவு கொண்டு*

*மேலது 91*

முருகனின் பெரும்புகழ் பேசும் திருப்புகழில் முருகனைத் திருமால் மருகனாய்க் காட்டிய போதெல்லாம் சிறப்பாக இராமாவதாரமும் கண்ணன் லீலைகளும் பெரிதும் பேசப்படுகின்றன. முருகா திருமால் மருகா என விழிக்காதபோதெல்லாம் "திருமகள் உலாவு மிருபுய முராரி திருமுருக நாமப் பெருமான்காண்" – எனப்பாடிய பாவங்களை நிறையத் திருப்புகழிலிலே காணலாம். பிள்ளைத் தமிழிலே வாரானைப் பருவம் மிக உயர்ந்தது. மீனாட்சி, பிள்ளைத்தமிழ், காந்திமதி பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், போரூர்முருகன் பிள்ளைத்தமிழ், மாவைப் பிள்ளைத்தமிழ், வல்லிபுரமாயவன் பிள்ளைத்தமிழ், பிரபந்தங்களில் வருகைப் பருவம் சிறப்பாய் அமைந்துள்ளன. பெரியாழ்வார் பாடிய பாசுரங்களிலும் பல களை கொட்டும் பாடல்கள் அமைந்துள்ளன. எனினும் அருணகிரிப்பெருமான் தாசரதியான கோசலவராமனை ஒரு குழந்தையாக்கி கோசலை ஆராமையோடு ஆள்ளுற அழைக்கும் பாங்கைப் பேசி– அப்படியான அயோத்திமன் திருமாலின் அவதாரமே – அந்தமாயவனின் மருமகனே என சொல்லுக்குச் சொல் வார்த்தைக்கு வார்த்தை மணியாய் அழைக்கும் ஒரு வார்ப்பு இது.

*தொந்தி சரிய மயிரே வெளிறநிரை*
*தந்த மசைய முதுகேவளைய இதழ்*
*தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி*
*தொண்டு கிழவ னிவனா ரென இருமல்*
*கிண்கி ணெனமு னுரையே குழறவிழி*
*துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி*
*வந்த பிணியு மதிலே மிடையு மொரு*
*பண்டி தனுமெ யுறுவே தனையுமிள*
*மைந்த ருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி*
*மங்கை யழுது விழவே யமபடர்கள்*
*நின்று சருவ மலமே யொழுக வுயிர்*
*மங்கு பொழு து கடிதே மயிலின் மிசை வரவேணும்*
*எந்தை வருக ரகுநா யக வருக*
*மைந்த வருக மகனே இனி வருக*
*என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம*
*இங்கு வருக அரசே வருகமுலை*
*யுண்க வருக மலர்சூ டிடவருக*
*என்று பரிவி னொடுகோசலைபுகவ வருமாயன்*
*சிந்தை மகிழு மருகா குறவரிள*
*வஞ்சி மருவு மழகா அமரர் சிறை*
*சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா*
*திங்க ளரவு நதிசூ டியபரமர்*
*தந்த குமர அலையே கரைபொருத*
*செந்தின கரி லினித மருவிவளர் பெருமாளே*

*திருப்புகழ் 47 திருச்செந்தூர்*

இப்பாடலில் முதற் பன்னிரு அடிகள் வயோதிபம், நரை, திரை, வாதகப வேதனை நோயின் தாக்கம், உடலில் ஏற்படும் மாற்றங்கள், இயற்கை உபாதிகள், மக்கள், மனைவியரின் இறுதிக்குரல் ஓசை, மனோநிலைகள் பற்றியும், இறுதியாத்திரையான மரணநிலை ஏற்படுங்கால் முருகனை மயில் மீது வந்து காட்சி கொடுக்கும்படி வேண்டுதல் செய்யும் நிலை பேசப்படுகிறது. இப்படி விநயமாய்க் கேட்கும் ஒரு சூழ்நிலையும், இறுதிநிலையும் எல்லார்க்கம் பொதுவும், இயற்கையும், இயல்பானநிகழ்வும், தவிர்க்க முடியாததுமாகும். மனிதப்பிறவியுடன் ஒட்டி உறவாடும் வாழ்வியல் மாற்றங்களை அருளாளர்கள் பாடியுள்ளனர். அருணகிரியார், பட்டினத்தார், சித்தர்களிற் சிலர், ஆழ்வார்கள் நால்வர் தம் அருளிப் பாடல்களில் இச்சூழ்நிலையை எடுத்துக் கூறி வாழ்வைத் திறம்பட மேற்கொள்ளுங்கள். இறைவனைச் சிக்கெனப் பிடியுங்கள் என அறிவுறுத்தியும் உள்ளனர், யாக்கைநிலையாமை, இளமைநிலையாமை, செல்வநிலையாமை, மரணபயம், இணைவிழைச்சு வெறுப்பு, ஒழுக்கக்கேடு போன்றவற்றைப் பற்றி தொடர்ந்து சொல்வதனால் உயர்ந்த ஆன்மீக நெறிக்கு நம்மை ஆற்றுப் படுத்தினர் எனலாம்.

உடல்மாற்றம் வயோதிபம் போன்றனவற்றை அனுபவிப்பவரும் சுற்றமும் எப்படி நோக்குவர் என்பதை உலக அனுபவமாக வைத்துப் பாடிய பாடல்களை திருமங்கை ஆழ்வார் வாக்கில் காணலாம்.

*முற்றமூத்துக் கோல்துணையா*
*முன்னடி நோக்கி வளைந்து*
*இற்றகால் போல் தள்ளி*
*மெள்ள விருந்தங்கிளையாமுன்*

*திருநாலாயிரம் 668*

*முதுகு பற்றிக் கைத்த*
*லத்தால் முன்னொரு கோலூன்றி*
*விதிர்வி திர்த்துக் கண்சு*
*ழன்று மேற்கிளை கொண்டிருமி*
*'இதுவென் னப்பர் மூத்த*
*வாறெ' ன்றிளையவ ரேசாமுன்*

*திருநாலாயிரம் 969*

*உறிகள் போல்மெய்ந் நரம்பெ*
*ழுந்தூண் தளர்ந்துள் ளமெள்கி*
*நெறியை நோக்கிக் கண்சு*
*ழன்று நின்று நடுங்காமுன்*

*திருநாலாயிரம் 970*

*மீளை சோரக் கண்ணி*
*டுங்கிப் பித்தெழ மூத்திருமி*
*தாள்கள் நோவத் தம்மில்*
*முட்டித் தள்ளி நடவாமுன்*

*மேலது 971*

*எய்த்த சொல்லோ டீளை*
*யேங்கி யிருமி யினைத்துபலம்*
*பித்தர் போலச் சித்தம்*
*வேறாய்ப் பேசி அயராமுன்*

*மேலது 973*

*பப்ப அப்பர் மூத்த*
*வானு பாழ்ப்பது சீத்திரளை*
*ஒப்ப ஐக்கள் போத*
*வுந்த வுன்தமர் காண்மின் என்று*
*செப்பு நேர்மென் கொங்கை*
*நல்லார் தாம்சிரி யாதமுன்னம்*

*மேலது 974*

*'ஈசி போமி னீங்கி*
*ரேன்மி னிருமி யிளைத்தீர், உள்ளம்*
*கூசி யிட்டீர்' என்று*
*பேசுங் குவளையங் கண்ணியர்பால்*
*நாச மான பாசம்*
*விட்டு நன்னெறி நோக்கலுறில்*
*வாசம் மல்கு தண்டு*
*மாயான் வதரி வணங்குதுமே* *மேலது 975*

இலங்கையைப் பதிரி என்பர். இம்மரம் நிறைந்த இடம் பதரி என்னும் திவ்விய சேக்ஷத்திரம். எனவே இப்புனிதமான ஆலயத்தை நாம் எப்போ வணங்க வேண்டும். உடல் தளர்வதற்குமுன் பதிரியைச் சேவித்து வாருங்கள் என இப்பாசுரங்கள் பேசுகின்றன. இதே பொருளமைவில் இன்னோர் பதிகமும் உண்டு.

*"கண்ணும் சுழன்று பீளையோ*
*பீளைவந் தேங்கினால்*
*பண்ணின் மொழியார்' பைய*
*நடமின்' என்னாதமுன்* *திருநாலாயிரம் 1478*

*தொங்குண் குழலார் கூடி*
*யிருந்து சிரித்து, நீர்*
*இங்கென் னிருமி யெம்பால்*
*வந்தெ' தன் றிகழாத முன்,* *மேலது 1479*

*கொங்கார் குழலார் கூடி*
*யிருந்து, சிரித்து எம்மை*
*எங்கோலம் ஐயா ! என்னினிக்*
*காண்பதென் னாத முன்* *மேலது 1480*

*மின்னேரிடையார் வேட்கையை*
*மாற்றி இருந்து*
*என்நீ ரிருமி யெம் பால்வந்த*
*தென்றிகழா தமுன்* *மேலது 1483*

திருநறையூர் நின்ற எம்பிரானை வணங்குங்கள் என இப்பாடல்கள் வரிசை அறிவுறுத்துகிறது. அருணகிரியின் திருப்புகழில் முதற்பகுதி இப்பாடல்களின் சாரமாகவே தொனிப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறே பெரியாழ்வார் கண்ணனை அம்மம் (முலை) வண்ண வா, பூச்சுட வா, மஞ்சன நீராட்டவா என்று அழைக்கிறார். தமது பாசுரங்களில் அப்பாணியிலேதான் இராமனை அன்புடன் அழைக்கும் பகுதியும் அமைந்துளது. மிக எளிமையான பதங்களால் அன்னை கோசலை அன்புடன் அழைக்கும் பாங்கு படித்த உடனேயே நெஞ்சிற் பதிந்து விடுகின்றது. இதுவே கவிஞனின் கவிதா சாமார்த்தியமும் முத்திரையுமாம்.

*எந்தை வருக ரகுநா யகவருக*
*என்கண் வருக எனதா ருயிர்வருக – அபிராம*
*இங்கு வருக அரசே வருக முலை*
*யுண்க வருக மலர்சூடிட வருக*
*என்று பரிவி னொடு கோசலைபுகல வருமாயன்*
*சிந்தை மகிழு மருகா –*

என்று முருகப் பெருமானை இராகவனுடன் இணைத்துப் பேசும் இத்தமிழ் பிள்ளைத்தமிழே தான். எனவே அருணகிரிப் பெருமானின் பாரத இராமாயணப் பரீட்சயமும், ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்காற்பட்டதன் விளைவும் இப்பாடலில் மட்டுமன்றி, அதிகமான பாடலில் அந்த அனுபவம் பளீச்சிடுகின்றன என்பதை நுகர்வோரான முருகபக்தர்கள் நன்கு அனுபவிப்பர். இதிற் சந்தேகமே இல்லை. இதற்கு இலச்சினையாக இன்னும் சில திருப்புகழ் பேசும் திருமால் மருகனின் சிறப்பை மேலோட்டமாகக் காண்போம்.

*முரணிய சமரினில் மூண்ட ராவண*
*னிடியென அலறிமு னேங்கி வாய்விட*
*முடிபல திருகிய நீண்ட மாயவன் மருகோனே*
*திருவானைக்கா திருப்புகழ் 503*

*சற்பகிரி நாத முத்தமிழ்வி நோத*
*சக்ரகதை பாணி மருகோனே*
*திருச்செங்கோடு திருப்புகழ் 393*

*திருவொன்றிவி ளங்கிய அண்டர்கள்*
*மனியின் தயி ருண்டவ னெண்டிசை*
*திகழும்புகழ் கொண்டவன் வண்டமிழ் பயில்வோர் பின்*

*திரிகின்றனவன் மஞ்சுநி றம்புனை*
*பவன்மிஞ்சுதி றங்கொள வென்றடல்*
*ஜெய துங்கமு குந்தன் மகிழ்ந்தருள் மருகோனே*
*திருப்பரங்குன்றம் திருப்புகழ் 71*

திருமழிசை ஆழ்வார் பாடலின் பின் சென்றார்.

திருவெஃகாவில் கோயில் கொண்டருளிய பெருமாள் இதை குமரகுருபரர் தமது பிள்ளைத் தமிழிலே (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்) பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே எனப்பாடினார். அருணகிரியாரும், வண்டமிழ் பயில்வோர் பின் திரிகின்றவன் எனப் பாடியமை குறிப்பிடத்தக்கது. கொண்டாடினால் நின்றாடுவான் இறைவன் என்பர் பெரியோர். அருணகிரிப் பெருமானின் பாடல்கள் தோறும் முருகன் பெருமை பேசப்படுகிறது. அதேபோது திருமால் பெருமையும் பாடப்பட்டுள்ளது. இத்திருப்புகழை ஓசையுடன் சந்தம் தொனிக்க உருக்கமாகப் பாடும் போது முருகப் பெருமான் காட்சி தருவது போன்ற ஒரு அனுபவம் முருக சிந்தையுடையோர்க்கு ஏற்படுகிறது. இவ்வனுபவம் திருப்புகழின் தெய்வீகத்தன்மையை பிரதிபலிப்பதாகும். அவ்வளவு மகிமை திருப்புகழுக்கு உண்டு எனலாம்.

# ஈதல் எனும் பேரறம்

பண்டிதர் சி. அப்புத்துரை

மகா பாரதப்போர் நடைபெறுகின்றது. பதினேழாவது நாள். அருச்சுனனுக்கும் கர்ணனுக்குமிடையே உக்கிரமான போர் நடைபெறுகின்றது. பகலவன் மறைவதற்கு இன்னும் இரண்டு விற்கிடைப்போது மட்டுந்தான் உண்டு. இக்குறுகிய காலத்துள் கர்ணனைக் கொலை செய்யவில்லையெனில் பாண்டவர் அழிவு நிச்சயம். பார்த்த சாரதி – மாமாயன் கண்ணன் – சிந்தனையில் ஒரு ஒளிக்கீறு; உடனடியாகப் போர் நிறுத்தம்; தொடர்ந்து நடைபெற்ற போரினால் – போர்த் தாக்கத்தினால் மெய் தளர்ந்திரத மேல் விழும் கர்ணன் முன் நரைதிரை மூப்புத் தளர்வுடன் ஓர் அந்தணர் தோன்றுகின்றார். தமக்கு ஏதாவது தரவேண்டும் என இரக்கின்றார். அந்த விருத்த வேதியனுக்கு ஏதாவது கொடுக்கத்தான் வேண்டுமெனக் கர்ணனும் விரும்புகின்றான். ஆனால் இடம் போர்க்களமாயிற்றே ! கொடுப்பதற்குரிய இடமும் ஆகாதே ! ஆயின், கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்று சொல்லவும் அவன் மனம் விரும்பவில்லை. கொடுப்பதற்கு இப்போது இங்கு எதுவுமில்லை என்று சொன்னால் அந்தவேளை இல்லை என்று சொன்னதாகப் பட்டுவிடுமே என்ற அச்சம் அவனுக்கு. பொருத்தமான, நாகரிகமான வார்த்தையொன்று அவன் நாவில் தவழ்கின்றது. "தரத்தகு பொருள்நீ நவில்க" என்னும் அருமந்த தொடர் கர்ணன் நாவில் நடஞ் செய்கிறது ஆவியோ நிலையில்; கலங்கியது; அது உடம்பின் உள்ளேயோ, வெளியேயோ என்பது தெரியவில்லை. பரவியாகிய யான் வேண்டுபவர்கள் வேண்டியதைக் கொடுக்கக்கூடிய நிலையில் நீ வரவில்லை, ஆன காரணத்தால் யான் இப்போ தரக்கூடியதை நீயே சொல்வாயாக", என்கின்றான். இல்லையே என்று சொல்லக்கூடிய வகை கேட்டு விடாதே என்பது மறைந்து நிற்கின்றது போலும்.

அந்த வயோதிப மறையவனுஞ் சந்தர்ப்பத்தை சாதகமாக்கி, "ஒன்றியபடி நின் புண்ணியம் அனைத்தும் உதவுக" என்றலும் கர்ணன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தான் வஞ்சிக்கப்படுகின்றேன் என்ற எண்ணம் கர்ணன் மனதிற் கிஞ்சித்தும் ஏற்பட்டது கிடையாது. இல்லை என்று சொல்லாது கொடுக்கக்கூடிய ஒன்றை – அந்த வேளை கொடுக்கக்கூடியது ஒன்றைக் கேட்டானே என்ற பேருவகையோடு தம் உடம்பைத் தைத்து நின்றதொரு அம்பை இழுத்து அதன் துதியிலிருந்து ஒழுகும் குருதி கொண்டு தாரை வார்த்து கொடுக்கின்றான். பெரியதொரு அமைதியும் மகிழ்ச்சியும் நிலவுவதொரு சூழலை அங்கு அவர்களுடனாகி நாம் அநுபவிக்கின்றோம்.

கர்ணன் தன் உயிரைப் பெரிதாக மதிக்கவில்லை. மதித்திருந்தால் உயிருக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டிருக்கும் அறக்கடவுள், தன் பாதுகாப்பு நிலையை அகற்றிக் கொள்ளக்கூடிய வகையில், புண்ணியம் அனைத்தையும் கொடுத்திருக்க முடியாது. அன்றியும், தன் புண்ணியம் அனைத்தையும் தத்தம் செய்து கொடுத்தவேளை, உனக்கு வேண்டியதைக் கேள் என்று ஒருவரை ஒருவர் உணர்ந்த நிலையிற் – கண்ணன் கர்ணனைப் பணிக்கின்றான். அந்த நேரத்திலும் தன் உயிர் பற்றிச் சிந்திக்காத கர்ணன், "ஏழெழு பிறப்பும் இல்லென்றிரப் போர்க்கு இல்லையென்றுரையா இதயத்தைத் தரவேண்டும்" என்று வேண்டுகின்றான். அவன் சிந்தனை அறத்தின் வழி நின்றது. போரிற் கிடைக்கும் வெற்றியையோ, நீண்டகாலம் சுகமாக வாழ்தலையோ கர்ணன் உயர்பயனாகக் கருதவில்லை. அறத்தின் வழிப்பட்டதாகிய வாழ்வுதான் உயர்பவன் தரவல்லது என்ற எண்ணம் அவனை ஆட்கொண்டிருத்தமையை யாம் உணரமுடிகின்றது.

எப்பேர்ப்பட்ட வள்ளலாக இருந்தாலும் எல்லோருக்கும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் அவரவர் விரும்பியவற்றைக் கொடுப்பதென்பது முடியாத காரியம். இந்த உண்மையைப் பதிற்றுப்பத்து என்னுஞ் சங்க இலக்கியம் சுவைபட விளக்குகின்றது. அந்த நூலில் ஒரு சேரமன்னனது வள்ளன்மை பற்றிப் பேசப்படுகின்றது. பணத்தையோ பொருளையோ கொடுத்துவிட்டுப் பின்னர் வருத்தப்படுபவர்கள் இருக்கிறார்கள். "கொஞ்சம் குறைத்துக் கொடுத்திருக்கலாமே" என்று கழிவிரக்கப்படுவர் ஒரு சாரார். அந்தச் சேர மன்னன் எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினுஞ்சரி கொடுத்ததை நினைந்து வருந்தியது கிடையாது. "கஷ்டப்பட்டவர்களுக்கு, பிச்சைக்காரர்களுக்குத்தானே கொடுத்தேன்; எனவே நல்லதுதானே செய்தோம்" என்று மகிழவும் மாட்டான். வல்லமை குறைந்தவர்களுக்குக் கொடுப்பது, இயலாதவர்களுக்கு உதவுவது புண்ணியத்தைத் தேடித்தரக்கூடிய செயல்தான்.

ஆனால், அதனை எண்ணி யாம் தருமஞ் செய்யக் கூடாது. செய்தால் அது பண்டமாற்று வியாபாரமாகிவிடும். அந்தச் சேரமன்னன் உயர்ந்த பண்பு பொருந்தியவன். எல்லாவற்றுக்கும் மேலானதொரு பண்பினை அவனிடங் காணமுடிந்தது. காலையில் வந்து பொருள் பெற்றுச் சென்ற ஒருவன் மாலையிலும் வருகின்றான். அந்த வேளை, "நீ காலையிற் பொருள் பெற்றுச் சென்றவன் தானே ! மீண்டும் வந்திருக்கிறாயே ! என்று கொடுப்பதை மறுக்கமாட்டான். மறுத்துவிட்டால் அப்போது பொருள் இல்லை என்று சொன்னதாகப் பட்டுவிடும். அதனால் எந்தவித மனச் சலனமும் இன்றி மீண்டும் அவனுக்குப் பொருள் கொடுக்கின்றானாம். வள்ளன்மை அவனிடம் பெருமை கண்டது.

*ஈத்த திரங்கான் ஈத்தொறும் மகிழான்*
*ஈத்தொறும் மாவள் ளியனே !*

என்பதுதான் அந்தச் சேரமன்னனது வள்ளன்மையயப் புலப்படுத்தும் பாடற்பகுதி. மாவள்ளியன் என்பது போன்ற புனிதமான கருத்து மேம்பாட்டைத் தரக்கூடிய வேறொரு சொல்லை அந்த இடத்துவ யோகத்திற்குக் கண்டுகொள்வது கடினமானது.

ஏழாவது சைவத் திருமுறை சுந்தரர் தந்த பெருஞ்செல்வம். அங்கே திருத்தொண்டத்தொகை என்னும் பதிகத்து முதலாவது திருப் பாடலின் இரண்டாவது அடி, "இல்லையே யென்னாத இயற்பகை" என்கின்றது. நாயன்மார்கள் அறுபத்து மூவரில், சுந்தரர் வரிசைக் கிரமத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்று உயர்வு கண்டவர் இயற்பகையார். ஈசனடியார் கேட்பதெதனையும் இல்லை என்னாது கொடுக்கும் உயர் பண்பினராக அவர் அங்கு காட்சி தருகின்றார். அந்த உயர்பண்பு உலகறிய வேண்டுவதொன்று என்னுங்கருத்தால் இறைவன் அடியவர் வேடந்தாங்கி தூய நீறணிந்து இயற்பகைமுன் வருகின்றார், "உம்முடைய மனைவியைத் தரவேண்டும்" என்கின்றார் வந்த அடியவர். அடியவர் கேட்பதெதனையும் மறுக்காது கொடுக்கும் விரதம் பூண்ட இயற்பகை நாயனார் ஒரு கணப்பொழுதுகூடத் தாமதிக்காது தந்தேன் என்று சொல்லி விடுகின்றார். தம் உறவினர் ஊரவர் மூலம் அடியவர் துன்புறாத வண்ணம் பாதுகாப்பாக வழியனுப்பியும் வைக்கின்றார். இந்தச் செயற்கருஞ் செய்கை செய்த இயற்பகையார் முன் வள்ளன்மை பெருமை பெற்று நிமிர்ந்து நிற்பது தெரிகின்றது.

என்னைப் பொறுத்த மட்டில் ஈசுவரன் என்பது சத்தியம் அல்லது உண்மைதான். ஈசுவரன் என்பது சன்மார்க்கம்; ஈசுவரத் தன்மை அஞ்சாமையே. ஈசனே விளக்கும், வெளிச்சமும். நமது மனச் சாட்சியே ஈசன்.

சாசுவதமான சுதந்திரத்தையும், சாந்தியையும் அடைய, நான் செய்து வரும் யாத்திரையில் எனது தேசாபிமானம் ஒரு பாகமாகும். ஆதலால், எனக்கு மதமும் ராஜீயமும் ஒன்றுதான். மதமில்லாத ராஜீயத்தை நான் வெறுத்துத் தள்ளுகிறேன். மதத்தைக் கைவிட்ட ராஜீயம் மரணக் குண்டுக்குச் சமமாகும். ஏனெனில், அது ஆன்மாவையே கொன்று விடுகின்றது.

உலகிலுள்ள ஒவ்வொன்றையும் ஓர் சூக்ஷ்ம சக்தி இயக்கிக் கொண்டிருக்கிறது. அதை நான் உணர்கின்றேன். ஆனால் அதைப் பார்த்ததில்லை. இந்த பார்க்கொணாத சக்தியை எதிர்ப்பது கூடாத காரியம். அக் காரணத்தைக் கொண்டே 'கடவுள்' என்று ஒருவர் இருக்கிறாரென நான் கூறுகின்றேன்.

*- மகாத்மா காந்திஜி*

# இன்பமே எந்நாளுந் துன்பமில்லை

வி. சங்கரப்பிள்ளை
*சைவசித்தாந்த ஆசிரியர்,*
*கீரிமலை சிவநெறிக் கழகம்.*

அம்மையப்பருக்கு மீளாவாளாய் அவரது மலர்ச் சேவடிகளையடைந்த அடியவர்களாகிய நம்மனோர்க்கு "எந்நாளும் இன்பமே யல்லாது ஒருநாளும் துன்பமேயில்லை" என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. அவர் அருள் வாக்கின் உள் பொருளை நோக்குவாம்.

யாவரும் இன்பத்தையே விரும்புகின்றனர். நிறைந்த இன்பத்தை விரும்புகின்றனர். இன்பத்தைக் கெடுப்பது துன்பம் – மனக்கவலை. இஃது இல்லாமல் இருக்குங்காலம் எது ? குழந்தைப் பருவமேயெனலாம். பசி பிணி முதலியவை எக்காலத்தும் இருப்பினும், மனக்கவலை என்பது குழந்தைப் பருவத்தில் அறியப்படாததொன்றே என்று கூறலாம். அதனாற் குழந்தைகள் பெரும்பாலும் இன்பமாகவே ஆடியும் பாடியும் களிப்புடன் பொழுது போக்குவதைக் காணலாம்.

குழந்தைப் பருவத்தைக் கடந்து வாலிபப் பருவத்தையடையும் போது வாழ்க்கைக்கு வேண்டிய தொழிலைப் பற்றியகவலை, அதுவழியாகப் பொருள் தேடுவதைப் பற்றிய கவலை, வருகின்ற பொருளைக் கொண்டு குடும்பத்தை நடத்த வேண்டிய கவலை, இப்படிப் பல கவலைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றி விடுகின்றன.

*"அன்னவிசாரம் அதுவே விசாரம் அது வொழிந்தால்*
*சொன்னவிசாரம் தொலையா விசாரம் நல்ல தோகையரைப்*
*பன்னவிசாரம் பலசால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்கு*
*என்ன விசாரம் வைத்தாய் இறைவா கச்சியேகம்பனே"*

என்கிறார் பட்டினத்தடிகள்.

இப்படிப்பட்ட கவலைகள் ஒன்றும் குழந்தைகட்கு இல்லை. அதற்குக் காரணம் எல்லாக் கவலைகளையும் பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டு குழந்தையை இன்பமாக வளர்ப்பதேயாம். ஆகவே, நன்றாக உண்பதும், உறங்குவதும், விளையாடுவதுமே குழந்தையின் வேலையாகிறது.

குடும்ப பாரத்தினால் அல்லலுறகிறவர்க்கு இக்குழந்தைப் பருவத்தை நினைத்தால் என்றுமே குழந்தையாய் இருக்கும் நிலை நமக்கு வாய்க்கக்கூடாதா என்று கூட எண்ணத் தோன்றும். அவ்வாறு இருப்பதற்கு எண்ணும் தாய் தந்தையரும் உள்ளவர்களாயிருக்க வேண்டுமன்றோ.

தங்கள் தாய் தந்தையர் என்றும் உள்ளவராயும், தாங்கள் என்றுமே குழந்தைகளாகவும் இருக்கும் நிலை உலகில் எவருக்கேனும் இருத்தல் கூடுமோ ? கூடாது என்பது தெளிவு.

ஆயினும், உலகிலுள்ள எல்லோருமே என்றுங் குழந்தைகளாகவிருக்க, அவர்தம் தாய் தந்தையரும் என்றும் உள்ளவராய் இருக்கும் நிலை உளது. அதனை அறியாது இருப்பது தான் குறை.

*"அம்மையப்பரே யுலகுக்கம்மையப்பர்"*

என்று திருக்களிற்றுப்படியார் கூறுகிறது. அதன்படி அம்மையாகிய சத்தியும், அப்பனாகிய சிவமும் அனைவர்க்கும் தாய் தந்தையர். அவர் தங்குழந்தைகளே அனைத்துயிர்களும். ஆனால், இக்குழந்தைகள் தம் தாய் தந்தையரையறிவதில்லை. அதனால் அல்லல் உறுகின்றன. ஒரு கூட்டத்தில் தாய் தந்தையர்களை விட்டுப்பிரிந்த குழந்தைகள் அழுது அல்லலுறுவது அனுபவத்திற் காணப்படுவதன்றோ.

உடலுக்குத் தாய் தந்தையர் இவ்வுலகத்தில் உள்ளனர். அவர்களை யாவரும் நன்கு அறிகின்றனர். ஆனால், உயிர்களுக்குத் தாய் தந்தையராகிய சத்தியும், சிவத்தையும் ஒருவரும் அறிவதில்லை. ஏனெனில் அவர்கள் உடலுக்குரிய தாய் தந்தையரைப் போல ஊனக்கண்ணாற் காணக்கூடியவரல்லர். ஞானக் கண்ணாலேதான் காணத்தக்கவர்கள். அந்த ஞானக்கண்ணை அறியாமையாகிய இருள் மறைத்து நிற்கிறது.

ஆணவ இருள் நீங்கப் பெற்றால் ஞானக் கண் திறக்கும், அம்மையப்பரைக் காணலாம். அல்லல் நீங்கி இன்பத்துடன் வாழலாம். அந்த ஆணவ இருள் நீக்குவது எப்போது? ஆணவ இருள் நீங்கி அம்மையப்பரைக் கண்ட அநுபூதிமான்களது அருளுரைகளைக் கேட்டலும், அவ்வுரைகளின் வழி நிற்றலுமே அறியாமையாகிய அகவிருள் நீங்குவதற்குரிய வழியாகும்.

அம்மையரப்பரைக் கண்டு அகவிருள் நீங்கப் பெற்ற அருளாளராம் அப்பரடிகள் அருளுரைகள் :

தம்மைச் சார்ந்த ஓரறிவுமுதல் ஆறறிவு உயிர்வரை அனைத்துக்கும் அம்மையப்பர் இருக்க அவர் அடித்தொண்டைச் செய்யாது, பொருள் தேடிப் புகழ் தேடிச் சுழன்று உலகியல் இன்பமொன்றிற் திளைத்து வாழ்ந்து மாளும் மனிதர்களைப்

பார்த்துப் பின்வரும் தேவாரப் பாசுரக் கூற்றின் மூலம் இரங்குகின்றார்.

*"திருநாமமஞ் செழுத்துஞ் செப்பாராகில்*
*தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்*
*ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்*
*உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்*
*அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்*
*அளியற்றார் பிறந்வாறேதோ வென்னிற்*
*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்*
*பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே"*

அவ் விரங்குதலோடமையாது. அம்மயக்க மனிதர்களது நெஞ்சை நன்னிலையில் நிறுத்த வேண்டி, அவர்களது நெஞ்சை விளித்துக் கூறும் முகமாக,

நெஞ்சமே ! நீநல்ல நிலையைப் பெற்று இவ்வுலகத்தில் நல்ல புகழோடு வாழ வேண்டுமென்று எண்ணுவாயேயாயின் யான் ஒரு வழி காட்டுவேன். அது மிகவும் நல்ல வழி, மெய்யன்பர்கள் நடந்து சென்ற வழி, என்பின்னேவா, அதோ தெரிகிறது அம்மையப்பர் திருக்கோயில், அதனுள் ஒரு நாளுந் தவறாது பொழுது புலர்வதற்கு முன் சென்று திருவலகாற்றுடைத்து, பசுவின் சாணியால் மெழுகி, நல்ல மணம் மிக்க பூமாலைகளைக் கட்டி, அம்மையப்பருக்குச் சாத்தக் கொடுத்து, அவர்திரு முன்பு நின்று, அவர் புகழைப்பாடிப் பரவி, இரு கரங்களையுஞ் சிரமேற்குவித்துக் கூத்தாடி, எல்லாவுயிர்களுக்கும் அளியாத இன்பத்தையருள்பவனே ! உனக்கு வெற்றியுண்டாகவென்றும், உமது திருவடிக்குப் பலகால் வணக்கம் வணக்கம் என்றும், கங்கையைத் தாங்கிய செஞ்சடா பாரத்தையுடைய முதல்வா ! என்றும், பலமுறை சொல்லிச் சொல்லி அவர்முன் அழுது நிற்பாயானால், நீ நிச்சயமாக நல்லநிலைப் பெறுவாய் என்று சரியை வழிபாட்டின் மூலம் பேரின்ப நிலையாகிய முத்தியின்ப நிலை பெறும் வழியைக் காட்டுகின்றார்.

அவ்வழிப்படுத்தும் தேவாரப் பாசுரம்,

*"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்,*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்*
*ஆரூரா வென்றென்றே யலறா நில்லே"*

"திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்" என்ற எதிர்மறைக் கூற்றால் திருவைந்தெழுத்தே இறைவனது திருநாமம்.

*"நற்றுணையாவது நமச்சிவாயவே"*

இதனை இயன்றளவு ஓதவேண்டும் என்றும் அப்பரடிகள் அருளுகின்றார்.

*"அஞ்செழுத்துமே அம்மை அப்பர்தமைக் காட்டுதலால்*
*அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்து – அஞ்செழுத்தை*
*ஓதப்புக்குள்ள மதியுங் கெடிலுமை கோன்*
*ஏதமற வந்தளிக்குங் காண்"*

*–திருக்களிற்றுப்படியார்*

"அஞ்செழுத்துமே அம்மையப்பரைக் காட்டுதலால் அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்து", அவ்வழிச் சென்றால் அஞ்ஞான இருள் நீங்கி ஞானக்கண் பெற்று அம்மையப்பரைக் காணலாம். அம்மையப்பரைக் கண்டு விட்டால் அப்பால் அல்லலொன்றுமில்லை. அங்ஙனம் கண்ட அருளாளர்களுக்கு,

*"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"*

சமண பல்லவ அரசன் இட்ட அரச கட்டளைக்குப் பணியாது, அப்பரடிகள் – நாவுக்கரசர் அருளிய பதில் திருமுறைப்பாசுரம்,

*"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்*
*நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்*
*'இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை'*
*தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான*
*சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்*
*கோமார்க்கே நாமென்று மீளாவாளாய்க்*
*கொய் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே"*

*தமிழ் வேதம் - ஆறாந்திருமுறை.*

*திருச்சிற்றம்பலம்*

# விசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாதரே ! பள்ளி எழுந்தருளாயே !

*ராகம் :– பூபாளம்*

ஆண்டுகள் பலவானாலும் அடியார்கள் கூடிவந்து
ஆர்வமுடன் வேண்டிட அலகிலாக் கருணையினால்
மீண்டும்வந்து செங்கற்பண்ணைச் சிவன்கோயி லின்கண்
மீளக்குடி யமரும் விஸ்வநாத சுவாமியே !
ஈண்டு பிறந்தவர்கள் இன்தமிட் பாவினால்
ஈடிலா நின்புகழ் பாடிடவும் ஏற்ற
ஆண்டவனே ! ஆடரவம் அணியாகப் பூண்டவனே !
ஆரமுதே ! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– ஆரபி*

ஆரமுதே! அப்பனே! ஒப்புடனம்மை விசாலாட்சியை
ஆங்கு நின்மேனி ஓர்பாற் கொண்டவனே!
ஆரணிய முனிவரது ஆணவமொடுக்கிய அரசே!
ஆதாரம் நீயென வந்தோர்க் கருள்
பூரணா! புனிதா! நீன்னாடல் காணப்
பூமியிற் பிறந்திடவும் ஏங்குவர் அமரர்
பேராசையா லுனைப்பாட விழைந்தவள் பிழைபொறுப்பீர்
பேரின்பமே! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– வசந்தா*

பேரின்பமே! பெம்மானே பிஞ்ஞகா! பிறைநுதலாள்
பேரழகி விசாலாட்சி அம்மை சமேதனே!
பாரினிற் கபாலமேந்திப் பலிகொண்ட பரனே!
பாந்தளனி சடையிற் பிறையுடன் கொன்றையந்
தாரிலங்கப் பாதங்களிலே கழல்சிலம் பொலிக்கத்
தாண்டவம் ஆடுஞ் சிற்சபேசா! தமியேற்கருள்
வாரிவழங்கும் வள்ளலே! வன்னவேலவன் தாதையே!
வாழ்முதலே! பள்ளி எழுந்த ருளாயே

*ராகம் :– மோகனம்*

வாழ்முதலே! வானாய் மண்ணாய் வளியொளியாய்
வாரியுமாய் விளங்கும் ஒருரு விலியே!
தாழ்வுமிலி உயர்வுமிலி தமியேற்கருள் தலைவன் நீ!
தாயுமாய்த் தந்தையுமாய்த் தாங்குந் தயாபரனே!
ஆழ்கடல் முப்புறஞ் சூழ் அழகுதிருக்கோணையம்பதி
ஆதிசெங்கற் பண்ணனச் சிவன் கோவிலில்
ஏழ்பிறப்பு மறுத்தெம்மை ஆட்கொள்ள வந்த
ஏகாம்பரனே! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– ஷண்முகப்பிரியா*

ஏகாம்பரனே! சிவனே! ஏலவார்குழலி விசாலாட்சியாம்
ஏந்திழையை இடப் பாகங் கொண்டவனே!
போகனே! யோகனே! சனகாதி முனிவர்கட்குப்
போதமருள ஞானமே வடிவாய் அமர்ந்தவனே
தேகமெலாம் வெண்ணீறும் பசுஞ்சாந்தும் பொலியத்
தேசிகனாய்ச் சமயகுரவற் கருளிய தேசிகா!
ஆகமமுறையில் அர்ச்சித்து வழிபடும் ஆலயங்களின்
ஆதாரமே! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– ரஞ்சனி*

ஆதாரமே! அமுதே! அற்புதமாய் அண்டமெலாம்
ஆக்கியவா! ஆக்கிய வண்ணங் காத்துப்பின்
ஏதாயினும் வழியில் அழித்துமறைத் தருள்பவனே!
ஏதமிலாத் தோழருக்குத் தூது நடந்திளைத்த
பாதா! பக்குவர்க்கருளப் பலப்பல வேடந்தாங்கிப்
பாரிறங்கித் திருவிளையாடல்கள் பண்ணியவா!
ஓதாதவர்க்கும் ஓதுவோர்க்கு மொருசேரவருள் ஒப்பிலி!
ஓங்குசுடரே! பள்ளி எழுந்தரு ளாயே.

*ராகம் :– காபி*

ஓங்குசுடரே! ஒண்நித்தில நகையாள் உலகெங்கும்
ஓசையருளுள் அம்மை விசாலாட்சி பாகரே!
தூங்கு பனிமலர்ப் பொழில்சூழ் சிவன்கோவிற்
தூண்டா மணிவிளக்காய்ச் சொல்லரிய வெழில்
தாங்கு திருமேனியாய்! தனித்தவர்க் கொப்பரிய
தாயானவனே! தத்துவங் கடந்த தனியனே!
காங்கேயன் கணபதி உமைசேரக் கவின் கோலக்
காட்சியளிப்பவனே ! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– ஹம்சானந்தி*

காட்சியளிப்பவனே! மலர்க்கணையால் மோனங்கலைத்த
காமனை எரித்தவனே! சோமனைச் சடையிலே
மாட்சிபெற வைத்தசுந்தரா! நுதற்கண் விழித்து
மாபுரம் மூன்றெரித்தவனே! இம்மாநகர் இருந்து
ஆட்சிசெய்ய வந்தஅரசே! ஆதிசேடரு முனியும் வேண்ட
ஆராவன்பால் ஆடற் திறங் காட்டியவா!
தாட்சிணிய மாய் தமியள் பிதற்றுமொழி ஏற்பாய்
தாயாள குணா! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– கானடா*

தாயாளகுணா! தவக்கொழுந்தே! தற்பரம் பொருளே!
தாபரிப்பா ரிலாது தஞ்சம் புகுந்தோரைச்
சேயாய் எடுத்தணைத்துத் திருஞானப் பாலூட்டிச்
சேவகனா யிருந்தும் சேவைபுரி சேவகனே!
காயாது கனியாகிக் கலந்தினிப்பாய் தொண்டருளம்
காதிற் குழையோடு கனகமணித் தோடசைய
ஓயாது நடமாடும் ஓங்காரப் பொருளே!
ஓசையுருவானவா! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– சாவேரி*

ஓசையுருவானவா! ஒப்பிலா மணியே! உத்தமனே!
ஓங்குமகிழுமர வில்வமர நிழற்கீழ் இருந்தெம்
ஆசையகற்றி அருளாட்சி செய்ய வந்தாய்
ஆண்டவனே ! எம்மனத் தகத்தே படிந்த
மாசையகற்றி மனக்கோயி லமைத் தாங்கே
மாசிலா நின்னெழிலுரு வைத்திட, மெல்ல
ஓசைப்படாது ஓடிவா ஐயனே! ஞானம்
ஓதிடுவோனே! பள்ளி எழுந்த ருளாயே.

*ராகம் :– சாரங்கா*

ஓதிடுவோனே! அடியார்சூடு பாமாலை உகப்பவனே!
ஓங்குபெருஞ் செழுஞ்சுடரா யன்றுதோன்றிச்
சோதித்தாய் அயன்மாலை அவரகந்தை யொழித்த
சோதியே ! ஆரூரன் மருளகற்றப் பழுத்த
வேதியனாய் வாதாடிச் சபையில் வழக்குரைத்து
வேண்டியவா றடிமை கொண்ட விமலா!
பாதிமதி சூடியவா! பங்கயமலர்ப் பாதமருளும்
பாவவிமோசனே! பள்ளி எழுந்த ருளாயே.

சுபம்

செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு
*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*
*உவர்மலை, திருகோணமலை*

# வேதங்களும் ஆகமங்களும்

- திருமதி. ஏ. என். கிருஷ்ணவேணி -
*விரிவுரையாளர், நுண்கலைத்துறை*
*யாழ். பல்கலைக்கழகம்*

வேதங்களும் ஆகமங்களும் இந்துக்களின் பிரமாண நூல்களாகும். சைவசித்தாந்திகள் வேதத்தைப் பொதுவாகவும் ஆகமத்தைச் சிறப்பாகவும் கொள்கின்றனர். வேதாகமங்களின் துணைநூல்கள் பல உள்ளன. இவை வேதாங்கள், சூத்திரங்கள், இதிகாசங்கள் புராணங்கள், உபபுராணங்கள், தந்திராஸ்திரங்கள், சிற்ப சாஸ்திரங்கள் முதலியனவாகும். இவற்றுள் இருக்கு, யசூர், சாமம், அதர்வனம், எனும் நான்கு சங்கிதைகளையும் இவற்றுடன் தனித்தனியே தொடர்பு கொண்ட பிரமாணங்களையும், அவ்வாறே ஆரணியங்களையும் உபநிடதங்களையும் தன்னகத்தே கொண்டு விரிந்தமைந்தது வேதம். வேதாங்கங்களான சிட்சை, வியாகரணம், நிருத்தம், கற்பம், சோதிடம், சந்தோவிசிதி என்ற ஆறுடனும் ஆறுதரிசனங்களுடனும் தொடர்பு கொண்டு இவை கூறும் கருத்துக்களை தமக்னெ உரிய நடையில் உருவாக்கி விளக்குவன சூத்திரங்கள் எனப்படும். இவை சிரௌதசூத்திரம், கிருஷ்யசூத்திரம், தர்மசூத்திரம், எனப்படும். இராமாயணம், பாரதம் இரண்டும் இதிகாசங்கள் ஆகும். புராணங்கள் மகாபுராணம், உபபுராணம் என்று இருவகைப்படும். மத்ஸ்யம், மார்க்கண்டேயம், பவிஷ்யம், பிரம்மம், பிரமாண்டம், பிரமகை வர்த்தம், வாயு, விஷ்ணு, வராகம், அக்கினி, நாரதீயம், பத்மம்,. இலிங்கம், கருடம், கூர்மம், காந்தம், பாகவதம், முதலிய பதினெண்புராணங்களும் மகாபுராணங்கள் எனப்படும். இவை தவிர்ந்த ஏனைய புராணங்கள் உபபுராணங்கள் எனப்படும். அவை சனற்குமாரம், நரசிம்மம், நாரதீயம், சிவரகசியம், துர்வாசம், கபிலம், மானவம், பார்க்கவம், வாருணம், காளிகர், சாம்பவம், நந்திகேசுவரம், வாசிஸ்டம் பாகவதம் என்பனவாகும். மகாபுராணம், உபபுராணம் என்ற தொகுதிகளுக்குள் அடங்காத புராணங்கள் சமஸ்கிருதத்திலும், தமிழிலும் காணப்படுகின்றன. இவை கோயில்களுடன் தொடர்பு பெற்ற புராணங்கள் ஆகையால் அவை தலபுராணங்கள் என்று கூறப்படும்.

வேதங்களையும், ஆகமங்களையும் எடுத்துக் கொண்டால் அவை மலத்தினாற் பிடிக்கப்பட்ட பெத்தநிலையிலுள்ள ஆன்மாக்களை ஈடேற்றும் வண்ணம் இறைவனால் அருளப்பட்டவை எனக் கூறுவர். இதனை திருமந்திர ஆசிரியர் "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல் ஓதில் பொதுவும் சிறப்பும் மென்றுள்னுக" எனக் கூறுகிறார். மேலும் "முதலாகும் வேதம் முழுதாகமமாக பதியான ஈசன் பகர்ந்த இரண்டு" எனவும் கூறப்படுகிறது.

வேதங்கள் கர்மகாண்டம், ஞானகாண்டம், எனப் பிரிக்கப்படுகின்றன. வீட்டுநெறியாகிய ஞானபாதத்தைக் கூறுவது ஞானகாண்டம். கர்மகாண்டம் கர்மானுஷ்டானங்களான கிரியைகள் பற்றிக் கூறுகிறது.

வேதங்களின் தோற்றம் பற்றித்திருமுறைகளும் விளக்கங்களைத் தருகின்றன. "மந்திரவேதங்கள் ஓது நாவார்" என ஞானசம்பந்தரும், "ஓதினார் வேதம் வாயால்" என அப்பரும் "மறைநான்கும் விரிந்துகந்தீர்" என சுந்தரரும் "மிக்கவேதம் மெய்யூர் சொள்ளவனே" என மணிவாசகரும் வேதங்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டன என்ற கருத்தைக் கூறுகின்றனர். மேலும் தேவாரம் வேதசாரம் என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

திருமந்திரத்தில் வேதத்தைப் பற்றிய குறிப்புக்களும் வேதத்தின் சிறப்பும் தெளிவாகக் கூறப்படுகிறது. வேதாகம சாரத்தைத் தமிழில் செப்பவந்தவர் திருமூலர் என்று கூறப்படுகிறது. "ஆகமம் செப்பலுற்றேனே" எனவும் "வேதத்தைச் செப்ப வந்தேனே" எனவும் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார். திருமந்திரம் வேதத்தின் சிறப்பை,

*"வேதத்தைவிட அறம் இல்லை வேதத்தின்*
*ஓதந் தரும் அறம் எல்லா உள தர்க்க*
*வாத்தை விட்டு மதிஞர் வளமுற்ற*
*வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே"*

*"வேதம் உரைத்தானும் வேதியனாகிலன்*
*வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட*
*வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்*
*வேதம் உரைதானும் மெய்ப்பொருள் காட்டவே"*

ஆகமங்களை எடுத்துக் கொண்டால் அவற்றைப் பொது நூல் என்று கூறமுடியாது. வைதீக சமயங்கள் யாவற்றுக்கும் வேதம் பொது நூல் என்பது போல ஆகமங்களும் பொது நூலாக உள்ளன எனக் கூறலாம். வைஷ்ணவருக்குரிய ஆகமங்கள் சங்கிதை எனவும், சாக்தரது ஆகமங்கள் தந்திரங்கள் என்றும் பெயர் பெறும். எனவே ஆகமங்கள் என்றால் அவை சைவ ஆகமங்களையே குறிக்கும். ஆகமங்கள் சைவசமயத்தின் சிறப்பு, நூல்களாக விளங்குகின்றன. சைவசமயத்தின், முழுமுதற் கடவுளாகிய சிவனைப் பற்றியே சிறப்பாகக் கூறுகின்றன.

வேதங்கள் ஆகமங்கள் என்ற இரண்டும் சைவசித்தாந்தத்திற்குப் பிரமாண நூல்களாகக் கொள்ளப்படுகிறது, வேதங்களை விட ஆகமங்கள் முக்கியமானவை எனவும், ஆகமங்களை விட வேதங்கள் முக்கியமானவை என்றும், இரண்டும் சமம் என்றும் 3 வகையானகருத்துக்கள் கூறப்பட்டாலும் வேதம் பொதுவாகவும், ஆகமம் சிறப்பாகவும் கொள்ளப்படுகிறது.

ஆகமம் என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் அது "ஒன்றில் இருந்து வந்தது" என்று பொருள்படும். ஆகமங்கள் சிவனிடமிருந்து வந்ததாகக் கொள்வது பொது மரபு ஆகும். இங்ஙனம் கொள்வது பொருந்தாது எனக் கூறி இதற்கு வெவ்வேறு விதமாகவும் பொருள் கூறுகின்றனர். இறைவனிடமிருந்து வந்தது எனக் கூறுபவர்கள் ஆகமம் என்பதில் "ஆ" என்பது வழிமுறை என்றும் "கம்" என்பது வருதல் உணர்தல் என்றும் கொண்டு இறைவனிடமிருந்து வருதலையுடையதாய், உணர்ச்சி பயப்பதாய் உள்ளது எனக்கூறுவர். சிலர் "ஆ" என்பது பாசம் என்றும் "க" என்பது பசு என்றும் "ம" என்பது பதி எனவும் முப்பொருள் பற்றிக் கூறுவதே ஆகமம் என்று விளக்கங்கூறுவர். வேறு சிலர் "ஆ" என்பது சிவஞானம் என்றும், க என்பது மோட்சம் என்றும் ம என்பது மலநாசம் என்றும் பொருள் கூறுவர். ஆகமங்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களைச் சிறப்பாகக் கூறுகின்றன.

ஆகமங்கள் இறைவனால் அருளப்பட்டவை என்பதனைத் திருமுறைகளில் இருந்தும் அறிந்து கொள்ளலாம், மாணிக்கவாசகர் "ஆகமம் ஆகிநின்று அன்னிப்பான்" எனவும் "மன்னுமாமலை மகேந்திரமதனிற் கொள்ள ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனப் பாடுகின்றார். திருமூலர் ஆகமம் பற்றிக் கூறியதை "சுந்தர ஆகமம் சொல் மொழிந்தானே" என்ற குறிப்புத் தெளிவுபடுத்துகிறது. திருமூலர் இறைவனால் ஆகமம் அருளப்பட்டதை "தானாய் அடியார்கள் அர்ச்சிக்கும் நந்தி உருவாகி ஆகமம் ஓங்கி நின்றாளே" எனவும்.

*"அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்*
*எண்ணிலி கோடி தொகுத் திடுமாயினும்*
*அண்ணல் அறைந்த அறிவறியா விடின்*
*எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே"*

எனவும் கூறுகின்றார்.

ஆகமங்கள் சைவசமயத்திற்கே சிறப்பாக உரியதனால் இவை சிவாகமங்கள் என்றழைக்கப்படும். இச்சிவாகமங்களின் எண்ணிக்கை 28 என்று கூறப்படுகிறது. திருமூலர்,

*"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்"*
*அஞ்சொடு இருபத்து மூன்றுளதாகமம்"* என்கிறார்.

இவ்வாகமங்கள் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சுகஷ்மம், சகஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகப்பிம்பம், புரோத்தீதம், லலிதம் சித்தம், சந்தானம், சர்வோகதம், பரமேஸ்சுரம், கிரணம், வாதுளம் என்பனவாகும். இவற்றைவிட மிருகேந்திரம் முதலாக விசுவான்பகம் இறுதியாக 207 எண்ணிக்கையைக் கொண்ட உபாகமமங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைஷ்ணவ ஆகமங்கள் சங்கிதை என்றும் தந்திரம் என்றும் பஞ்சராத்திரம் என்றும் அழைக்கப்படும், பெரும்பாலும் வைஷ்ணவ ஆகமங்கள் பஞ்சாத்திரமென்றே அழைக்கப்படும், இவை விஷ்ணுவின் திவ்விய கல்யாண குணங்களைக் கூறுவனவாகும். இவை எண்ணிக்கையில் 108 வகைப்படும்.

சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சாக்தர்களது ஆகமங்கள் தந்திரங்கள் என்று அழைக்கப்படும். அவை எண்ணிக்கையில் 77 ஆகும்.

சிவாகமங்கள் பற்றிய குறிப்பை மெய்கண்ட சாத்திர நூல்களிலும் காணலாம்.

சிவஞானசித்தியார் "அனாதியே அமலனாய அறிவைநூல் ஆகமந்தான்" என்கிறது. மெய்கண்டதேவர் ஆகமக்கருத்துக்களை ஒழுங்குபடுத்தித் தமிழ் மொழியில் 12 சூத்திரங்கள் அடங்கிய சிவஞானபோதத்தினை வெளியிட்டார் எனக் கூறப்படுகிறது. வடமொழியிலுள்ள ரௌரம் எனப்படும் ஆகமத்திலும் மெய்கண்ட தேவர் கூறும் கருத்துக்களை உடைய பன்னிரண்டு சூத்திரங்கள் காணப்படுவதனைக் கொண்டு மெய்கண்ட தேவர் அவற்றை மொழிபெயர்த்தருளினாரேயன்றித் தாமாக எதையும் செய்யவில்லை எனச் சிலர் வாதாடுகின்றனர். வேதாகமக் கருத்துக்களே சிவஞானபோதத்தில் இடம் பெற்றுள்ளமையை,

*"வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்*
*ஓதுதமிழ் அதனுள் ளுறுநெய் – போதமிகு*
*நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான்*
*செய்ய தமிழ் நூலின் திறம்!*

என்ற பாடல் விளக்குகிறது. வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்படும் கருத்துக்களே திருமுறைகளிலும், சாத்திர நூல்கள் என்று கூறப்படுகின்ற மெய்கண்ட சாத்திரங்களிலும் விரித்துரைக்கப்படுகின்றது.

இந்திய தத்துவங்களிற் அறுவகை அளவைப் பிரமாணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அவற்றில் சிறப்பாக மூவகை அளவைப் பிராமணங்களை அடிப்படையாகக் கொண்டு தமது தத்துவக்கருத்துக்களை வெளிப்படுத்துவதைக் காணலாம். இம்மூவகை அளவை பிராமணங்கள், பிரத்தியஷம், அனுமானம், ஆப்தவாக்கியம் அல்லது உரை எனப்படும். ஒரு பொருளை நேரே கண்டு அறிதல் காட்சிப் பிராமணமான பிரத்தியட்சம் எனப்படும். நேரே அறியப்படாது மறைந்து நின்ற பொருளை உடனிற்கும் ஏதுவைக் கொண்டு அறியும் அறிவு அனுமானப் பிரமாணம். இவ்விரண்டு பிரமாணங்களாலும் அறியப்படாத பொருட்களை உண்மை வாக்கியங்களைக் கொண்டு உணரும் அறிவு ஆப்தவாக்கியம், உரை, அல்லது வேதாகமப் பிரமாணம் எனப்படும். ஆப்தவாக்கியம் ஒரு பொருளை அனுபவத்தால் அறிந்த மகான்களின் வாய் மொழி மூலம் அறிதலாகும். அவர்களது வாக்கைக் கேட்பதன் மூலம் அறிவதனால் இதைச் சுருதிப் பிரமாணம் என்று கூறுவர். ''ஸ்ரு'' என்ற வடமொழிச் சொல்லினடியாகப் பிறந்த சொல் ஸ்ருதி. ஸ்ரு என்பது கேட்டல் என்று பொருள்படும். சைவசித்தாந்திகள் கடவுளுண்மையை விளக்குவதற்கு சுருதியையே ஆதாரமாகக் கொள்ளுவர். இறையருள் பெற்ற அனுபூதிமான்களுடைய வாக்குகளே இன்று சுருதி என்றும் ஆகமம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. எனவே தான் கடவுளுண்மைக்கு இவ்வேதாகம வாக்குகள் முக்கிய ஆதாரமாகின்றன.

ஆகமங்கள் 28னுள் காமிகம் முதல் ஐந்தும் கௌசிக இருஷியின் பொருட்டு இறைவனின் சத்தியோசாத முகத்தினின்றும் கூறப்பட்டதாகவும், தீப்த்தம் முதல் 5 ஆகமங்களும் இறைவனின் வாமதேவமுகத்தினின்றும் காஷிபரிஷியின் பொருட்டுக் கூறப்பட்டதாகவும், விஜயம் முதல் 5 ஆகமங்கள் அகோர முகத்தில் இருந்தும் பரத்துவாசரிஷியின் பொருட்டு கூறப்பட்டதாகவும், ரௌரம் முதலிய 5ம் கௌதமரிஷியின் பொருட்டு தற்புருடமுகத்தில் இருந்து கூறப்பட்டதாகவும், புரோகிதம் முதலிய 8ம் இறைவனின் ஈசான முகத்தினின்றும் அகத்திய ரிஷியின் பொருட்டு அருளப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வாகமங்களில் முதல் பத்தும் விஞ்ஞானகலருள் பரசிவ அனுக்கிரகம் பெற்ற பிரணவர் முதலிய பதின்மருக்கு அருளிச் செய்யப்பட்டதாகவும், ஏனைய 18 ஆகமங்களும் அநாதி உருத்திரர் முதலிய 18 உருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. உமாபதி சிவாச்சாரியார் ஆகமங்களின் தோற்றம் பற்றி பின்வருமாறு கூறுகிறார். ''சதாசிவ மூர்த்தியால் அநந்ததேவருக்கும் அநந்ததேவரால் சிறீகண்டருக்கும், சிறீகண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனிதருக்கும், மனிதரால் மனிதர்களுக்கும் உபதேசம் செய்யப்பட்டது'' எனக் கூறுகிறார்.

வேதம் என்பது ''வித்'' என்ற சமஸ்கிருதச் சொல்லினடியாகப் பிறந்தது. வித் என்றால் அறிதல் என்று பொருள்படும். எனவே வேதங்கள் அறிவின் இருப்பிடம் எனப்படும், அறிவில் இருவகை உண்டு. மனிதன் தனது வாழ்க்கையை உயர்வாக்குவதற்கு உலகிலுள்ள பொருட்களை ஒவ்வொரு விதமாகப் பயன்படுத்தலாம் என்பதை ஆராய்வது ஒருவகை. இந்த வாழ்க்கையும் இந்த உலகமும் எதற்காக எதிலிருந்து தோன்றியது என்பதை அறிவது இரண்டாவது வகை. இந்த இரண்டாவது வகை அறிவின் விரிவே இந்திய தத்துவஞானமாகும். முதலாவது வகை அறிவுக்கு உலகிலுள்ள பொருள்களும் உலகில் உள்ள பகுதிகளும் விஷயமாக, இரண்டாவது வகை அறிவு உலகம் முழுவதையுமே தனக்கு விஷயமாக்கி, இந்த உலகம் அதிலிருந்து எங்ஙனம் எதற்காக உற்பத்தியானது என்பதை ஆராய்கிறது. இந்த அடிப்படை அறிவைத் தருவதால் இவை அறிவு நூல் என்று கூறப்படும்.

இவ் வேதங்கள் இருக்கு, யசூர், சாமம், அதர்வனம் என நால்வகைப்படும். இவை ஒவ்வொன்றும் மந்திரப்பகுதி பிராமணப்பகுதி என இவ்விரண்டு பகுதிகளைக் கொண்டன. பிராமணப்பகுதியில் மேலும் உபநிடதம் எனும் ஒரு பகுதி உண்டு. மந்திரம், பிராமணம், உபநிடதம், ஆகிய மூன்றையும் சேர்த்து வேதம் என்ற பெயரால் வழங்குவது இயல்பு, இவற்றுள் மந்திரங்கள் தெய்வங்களை நோக்கின் கூறப்படும் துதிப்பாடல்களாகும். பிராமணம் தெய்வங்களை நோக்கிச் செய்யப்படும் யாகத்தையும் அதனோடு தொடர்புடைய கிரியைகளையும் செய்யும் முறைபற்றியும், அக்கிரியைகளின் மூலமாக ஒருவன் பெறக்கூடிய பயன்பாட்டினையும் எடுத்துக் கூறும் பகுதி, உபநிடதம் வேதத்தின் சாரமாகவும், வேதத்தின் அந்தமாகவும் அமைந்து வேதாந்தம் என்ற பெயரைப் பெறுவதுடன், மனிதன், மனிதனுக்கு அடிப்படை சக்தியாக அமைந்த ஆன்மா பிரபஞ்சத்திற்கு அடிப்படை சக்தியாக அமைந்த பிரமம் பற்றிய மெய்ப் பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதுடன், ஆன்மாக்களின் குறிக்கோள், அவை பிறவித்துன்பத்துள் ஈடுபட்டு அல்லலுறுவதற்குக் காரணமாயமைந்த கர்மம் மறுபிறவிக் கொள்கை, அப்பிறவியிலிருந்து விடுபட்டுப் பூரணத்துவம் பெறுவதற்கான ஞானமார்க்கம் பற்றிய தத்துவ விசாரணைகளை முன்வைக்கின்றது. இந்த வகையில் இந்திய தத்துவங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைபவை உபநிடதங்கள்.

வேத இலக்கியம் என்பது இருக்கு, வேதம் தொடக்கம் உபநிடதம் வரையுள்ள இலக்கியங்களைத் தன்னத்தே கொண்ட, பெரும் சமய தத்துவப் பாரம்பரியத்தை உள்ளடக்கியதென்பது தெளிவாகிறது.

# விஞ்ஞான உலகில்
# சமய வாழ்வும் சமரச உணர்வும்

செல்வி. க. காந்திமதி (B.A. Dip - in- Ed.)
*செங்கலடி மகா வித்தியாலயம்*

**நா**ம் கலியுகத்தில் "அணு" சகாப்தத்தில் வாழ்கிறோம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலக வரலாற்றிலே என்றுமில்லாத அளவுக்கு விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும் மருத்துவக் கண்டு பிடிப்புகளும், வாழ்க்கை வசதியைப் பெருக்கிக் கொள்ளும் கண்டு பிடிப்புகளும் அதிகரித்துள்ளன என்று பெருமை பேசிக் கொள்கிறோம். மனிதன் பூமியைப் பிரித்தாண்டான். கடலைக் கட்டியாண்டான். ஆகாயத்தையும் சொந்தமாக்கிக் கொண்டான். இன்று விண்வெளியில் சந்திர மண்டலத்தையும் ஒரு கைபார்த்து விட்டான் மனிதன். இப்புதுயுக மனிதன் கல்வித் தரத்திலும் அறிவாற்றலிலும் பழைய காலத்து மனிதனைவிட பன்மடங்கு மேம்பட்டுள்ளான் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனாலும் என்ன? பழைய காலத்து மனிதன் தன் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக கருதிய அரும் பொருள் ஒன்றை இன்றைய சமுதாயம் இழந்து விட்டதைப் பார்க்கிறோம். பழைய நாளில் வாழ்க்கை வசதிகள் மிகக் குறைந்திருக்கலாம். மாடிக் கட்டிடங்கள் போக்குவரத்துச் சாதனங்கள் பொழுது போக்குக்குரிய வாய்ப்புக்கள் முதலியன இல்லாதிருக்கலாம். குடிசையில் வாழ்ந்தாலும் மனிதன் அமைதியோடு வாழ்ந்தான் என்பதை மறுக்க முடியாது. வாழ்க்கை வசதிகளும் நாகரிகமும் மிகுதியாகப் பெற்றுள்ளதன் பயனாக இன்று மனித சமுதாயம் "அமைதி" என்ற செம் பொருளை இழந்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று செல்கிறது. வானையும் மண்ணையும் பரிசாகப் பெற்றுத்தான் என்ன பயன்? அந்தப் பேரத்தில் நம்முடைய ஆன்மாவை நாம் இழப்பதானால்.! என்ற ஆன்றோர் வாக்கு இங்கு நினைவு கொள்ளத் தக்கது. வாழ்க்கை வசதிகள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகரித்துள்ளதோ அவ்வளவுக் கவ்வளவு பொறாமை போட்டி பூசல், வெறுப்புணர்ச்சி, சகிப்பின்மை புரிந்துணர்வின்மை ஆகியன பெருகியுள்ளன. ஒரு புறம் வாழ்க்கையை வளம்படுத்தும் வசதிகளும், மறுபுறத்தில் மனிதனை துயரத்தில் ஆழ்த்தும் பிரச்சினைகளும் மலைபோலக் குவிந்துள்ளன.

விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் பெற்றுள்ள நாகரிக வாழ்க்கையினால் தன் ஆற்றல் மிகுந்தவனாய் அறிவினைப் போற்றி, உணர்வினை இழந்து அறநெறியை மறந்து புலன் வழிச் செல்லும் போக்குடையவனாயிருக்கின்றான் மனிதன். கடவுள் நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் இழந்து, சமயத்தையும் ஆன்மீகத் துறையையும் வெறுத்தொதுக்கும் அளவுக்கு சென்றுள்ளமையால் அமைதியின்றி வாடுகிறது இன்றைய உலகம். சந்திர மண்டலத்தில் கவனம் செலுத்தும் மனிதன் தனக்குள் இருக்கும் ஆன்மீக மண்டலத்தை ஆராய்ச்சி செய்ய மறந்து விட்டான். விஞ்ஞான வளர்ச்சியோடு சமய ஆன்மீக வளர்ச்சியையும் கலந்துறவாடின் தனிமனிதன் உள்ளத்திலும் மனித சமுதாயத்திடையேயும் அமைதியும் சாந்தியும் நிலவும்.

பொருளாதாரத்துறையிலும் நாகரீக வாழ்க்கையிலும் உச்சநிலையை அடைந்துள்ள மேலை நாடுகளுக்குச் சென்றவர்கள் இதை கவனித்திருக்கலாம். குறிப்பாக அமெரிக்காவில் இளஞ்சமூகத்தினரிடையே தோன்றி வளர்ச்சியடைந்து வருகின்ற சமய இயக்கங்கள் அங்குள்ள சமுதாயத்தின் உள்ளத்தில் நிகழும் பெரும் மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றன என்றே கூற வேண்டும். பெரிய நகரங்களில் வசிக்கும் செல்வந்தரின் பிள்ளைகள் பலர் எல்லா வசதிகளுமுள்ள நாகரீக வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு இந்த இயக்கங்களில் சேர்ந்து புதிய முறையில் அமைதி காண முற்பட்டுள்ளனர். மேலும் மேலை நாடுகளில் நிலவி வரும் யோக நிலையங்கள் மக்களிடையே புத்துணர்ச்சியையும் பெருவிழிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன.

மனிதனுக்குத் தேவையானது முழுமையான வளர்ச்சியாகும். ஒரு முகவளர்ச்சி அமைதிக்கு வழிகாட்ட முடியாது. மூளையைப் பற்றி நிற்கின்ற அறிவும் நெஞ்சத்தைப் பற்றி நிற்கும் உணர்வும் சமமாக வளர்ச்சி பெற்றால் தான் அவனை முழு மனிதன் என்று சொல்ல முடியும். அறிவை வளர்த்து உணர்வை புறக் கணிப்பின் எங்ஙனம் அமைதி காண்பது. மனிதனுடைய மனம் ஓர் அதிசயக் கருவியாகும். அது பண்படுமளவுக்கே அமைதி உண்டாகும். இக்கருத்தை மனதிற் கொண்டே தாயுமான அடிகள் "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்றும், "நான் நான் எனக்குளறியே ஒன்றை விட்டு ஒன்று பற்றி பாசக் கடலுக்குள்ளே வீழாமல் பரிசுத்த நிலையை அருள்வாய்" என்றும், பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையே" என்றும் பேசுகிறார்.

முதலில் மனிதன் தான் யார் என்பதையும், தனக்கும் இறைவனுக்கும் உலகத்திற்கும் உ.ள்ள தொடர்பையும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். பண்டைய முனிவர்களும் மகாரிஷிகளும் தமது ஆத்மீக அனுபவத்தின் மூலம் கண்ட

பேருண்மை மனிதன் இயல்பில் தெய்வீகத் தன்மை பொருந்தியவன். உடல் உயிர் ஆகியவற்றின் கூட்டே மனிதன். உடல் அழியுந்தன்மையுடையது. ஆத்மா அழிவற்றது. அது பூரணப் பொருளாகிய கடவுளின் அம்சம். இந்தக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே வாழ்க்கை இயல்பு அமைய வேண்டும். மனித சரித்திரத்தில் பழைய காலமாயினும் சரி, இன்றைய விஞ்ஞான சகாப்தத்திலாயினும் சரி, நவயுகமாயினும் சரி எக்காலத்திலும் மனிதனுடைய அடிப்படைப் பிரச்சினைகள் பொதுவானவை. அவை வாழ்வில் துன்பம், சோகம், துயர், வேதனை, இன்னும் தவிர்க்க முடியாத பிணி, மூப்பு, சாக்காடு இவற்றை என்றும் எதிர் நோக்கி நிற்கிறது. மனித வாழ்க்கை, சமயம் ஒன்று தான் இவற்றிற்குத் தகுந்த பரிகாரத்தை தரக்கூடும்.

இந்து சமயம் இகலோக வாழ்க்கைக்குப் போதிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்ற தவறான கருத்து நிலவிவருகிறது. இந்து சமயம் யாரையும் உலகத்தை விட்டு காட்டுக்கு ஓடச் சொல்லவில்லை. அது மனிதன் பூரணத்துவம் அடைவதற்குப் பல படிகளை அடைவதற்கு ஏற்ற பயிற்சி அளிக்கும் ஒரு சர்வகலாசாலையாகவே இந்த உலகத்தையும் கருதுகிறது. வருணாச்சிரம தர்மத்தில் இல்லறத்திற்கே முதலிடம் கொடுக்கிறது. இந்துசமயம் பிரமச்சாரி, வானப் பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூன்று ஆச்சிரமத்தாருக்கும் ஆதரவு கொடுப்பவர் இல்லறத்தவரே,

*"இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணை"* என்கிறது திருக்குறள்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் இம்மை மறுமையாகிய இரண்டிற்கும் வேண்டிய நான்கு புருவாத்தங்களையும் பெற்றுய்தல் வேண்டும். அவையாவன தர்மம் (அறம்) அர்த்தம் (பொருள்) காமம் (இன்பம்) மோட்சம் (வீடுபேறு) என்பனவாம்.

மனிதன் பொருளை நல்லவழியில் நின்று ஈட்ட வேண்டும் "அருளொடும் அன்பொடும் பொருந்தி வராத பொருள் பசுமட்கலத்து நீர் போலச் செய்தானையும் கொண்டிருத்தலின்" அங்ஙனம் சம்பாதித்த பொருளை இருவகையாகப் பயன்படுத்த வேண்டும். ஒன்று அறத்திற்கும் மற்றது நல்லறமாகிய இல்லற இன்பம் துய்ப்பதற்கும். அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று இக்லோக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை. மோட்சம் அல்லது பேரின்பம், வீடு என்னும் நான்காவது பேற்றை பெறுவதற்கு இன்றியமையாதவை. மனித முயற்சிகளுக்கெல்லாம் மணி முடியாகத் திகழ்வது மோட்சத்தை அடைதல். இதனை ஔவைப் பிராட்டி கூறுகின்றார்.

*"ஈதல் அறம், தீவினை விட்டீட்டல் பொருள்*
*எஞ்ஞான்றும், காதல் இருவர் கருத்தொருமித்து*
*ஆதரவு பட்டதே இன்பம், பரனை நினைந்து*
*இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு"*

ஆகவே மனிதனுடைய இறுதி இலட்சியம் அல்லது குறிக்கோள் கடவுள் காட்சியே. இறைவனுடன் இரண்டறக் கலந்து பிறப்பு இறப்பு இல்லா பேரின்பத்தை அனுபவித்தலே.

மனிதனிடத்து மூன்று வகையான தன்மைகள் அமைந்துள்ளன. அவற்றில் ஒன்று சுயநலம், காமம், கோபம், பேராசை, வெறுப்பு முதலிய விலங்கு இயல்புகள். இரண்டாவது – சகோதரத்துவம், இரக்கம், அன்பு முதலிய மனிதப் பண்புகள். மூன்றாவது எல்லா ஜீவராசிகளிடத்திலும், அனுதாபம், கருணை, சிந்தை, சொற் செயலின் தூய்மையாகிய தெய்வீகப் பண்புகள், இதில் இறுதியாகக் குறிப்பிட்ட உயர்ந்த வாழ்க்கையை தெய்வீக வாழ்க்கை என்கிறார் இமயஜோதி சிவானந்தர். மனிதன் தன்னுள் மண்டிக் கிடக்கும் விலங்கியல்பை உதறித்தள்ளி உள்ளே மனிதத் தன்மையில் தெய்வ உணர்வை ஏற்றி அருளன்பில் தெய்வ சிந்தனையில் ஊன்றி வாழ வேண்டும். இவ்வாறு தீவிரமாக வாழ்தலே தெய்வீக வாழ்வு என்கிறார் சிவானந்த முனிவர்.

இந்த ஆன்மீக ஒருமைப்பாட்டினை அடைவதற்கு இந்துசமயம் மக்களின் தனிப்பட்ட உளப்பாங்கிற்கும், ஆற்றலுக்கும் பரிணாம வளர்ச்சிக்கும் ஏற்ப நான்கு பெரும் நெறிகளை வகுத்துள்ளது.

1. கர்மயோகம் – பயன்கருதாப் பரநலத் தொண்டிற்குரிய பாதையாகும். உலக நன்மை கருதி தன்னலமற்ற சேவை புரிதல். என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பது அப்பரின் அருள் வாக்கு. இது சுறுசுறுப்பான இயல்புடைய மனிதனுக்குப் பொருத்தமானது.

2. பக்தியோகம் – ஆண்டவன் மீது அளவுகடந்த அன்பிற்குப் பக்தி என்றும் அந்த மார்க்கம் பக்தியோகம் என்றும் கூறப்படும்.

3. இராஜயோகம் – இதனை அட்டாங்க யோகம் எனவும் கூறுவர். இது புலனடக்கம் மனவொழுக்கம் ஆகியவற்றின் மூலம் இறைவனுடன் ஒன்று படும் பாதையாகும். எட்டு அங்கங்கள் ஆவன, யமம், நியமம், ஆசனம்,

பிராணாயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி. இது தெளிவற்ற இயல்புடைய மனிதனுக்குப் பொருந்தும்.

4. ஞானயோகம் – நான் யார், இவ்வுலகம் யாது போன்ற ஆராய்ச்சியின் மூலம் சத் – சித் ஆனந்த சொரூபத்தில் அமைதி பெறுதல் ஆய்வுத் திறனும் ஆன்மீகப் போக்கும் கொண்ட மனிதனுக்கு இது தகுதியுடையது. இதே போன்று மகரிஷி சிவானந்தர் இதனை முழுமையான யோகம் என்றும் தற்கால மக்களின் உள்ளப் பாங்கிற்கு இயைந்ததாகவும் கூறுகிறார். தொண்டுசெய் அன்பு காட்டு, கொடு, பரிசுத்தனாகு, தியானம்பயில், அனுபூதி அடை, நல்லவனாயிரு, நல்லதைசெய், இரக்கமுள்ளவனாய் இரு, கருணையுள்ளவனாயிரு, நான் யார் என்று ஆராய் ஆத்மாவை அறி, விடுதலைப் பெறு.....

இந்து சமயம் சர்வமத சமயக் கொள்கைகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதுபல்வேறு சமயங்களும் இறைவனை அல்லது பேரின்பத்தினை அடைவதற்குரிய வெவ்வேறு மார்க்கங்கள் எனக் கருதுகிறது. எவ்வாறு நதிகள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி வெவ்வேறு வழிகளில் ஒடி ஈற்றில் நாமரூபங்களை இழந்து சமுத்திரத்தில் சங்கமமாகின்றனவோ, அவ்வாறே வெவ்வேறு மதங்களும் வெவ்வேறு நெறிகளைப் பின்பற்றி இறுதியில் ஒரே இலட்சியத்தை அடைகின்றன.

இந்து சமய சமரச விளக்கம் இன்றைய உலகில் பெரிதும் தேவைப்படுகிறது. நல்லிணக்கம் புரிந்துணர்வு, சகோதரத்துவம், ஆன்மீக ஒற்றுமை, மனஅமைதி, சாந்தம், சமாதானம் உலகில் விளங்குவதற்கு சமய வாழ்வு பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

# பிரார்த்தனை

பிரார்த்தனைதான் என்னைக் காப்பாற்றி வருகின்றது. அது இல்லாமலிருந்தால் பல வருடங்களுக்கு முன்னமேயே எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும். எனது 'சத்திய சோதனை' யைப் படித்தால் உங்களுக்கு இது நன்றாகத் தெரியவரும். சொந்த முறையிலும், பொதுஜன ஊழியன் என்ற முறையிலும் நான் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதை நீங்கள் அறியலாம். அவ்வப்போது திடீர் திடீரென்று ஏக்கம் பிடிக்கும். அப்போதெல்லாம் பிரார்த்தனை செய்வேன். எனது ஏக்கம் பறந்து போய் விடும். ஆனால் சத்தியத்தை நான் எவ்வளவு எனது வாழ்க்கையில் கொண்டிருக்கின்றேனோ அவ்வளவு தூரம் பிரார்த்தனையை நான் கொள்ளவில்லை. பிரார்த்தனை செய்வது ஓர் அவசியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

★★★

பிரார்த்தனை செய்யச் செய்ய கடவுள் பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை செய்வதில் ஒரு ஆசையும் ஆனந்தமும் ஏற்படத் தொடங்கிற்று. 'பிரார்த்தனை' இல்லாமற் போனால் உயிர் வாழ்வதே ஓர் பாலைவனம் போல் தோன்றிற்று.

★★★

கடவுளிடத்தில் முதலில் எனக்கு போதிய நம்பிக்கை யில்லாதிருந்தால், அவரைக் குறித்து பிரார்த்தனை முதலியவைகளிலும் நான் அவநம்பிக்கை கொண்டிருந்தவன். ஆதலால் தான் நான் தோற்றுப் போனேன். ஏதோ வாழ்வில் ருசியில்லாமலே இருந்தது. பிறகுதான் அறிந்து கொண்டேன். உடலுக்கு எவ்வாறு உணவு அவசியமோ அவ்வாறே ஆத்மாவுக்குப் பிரார்த்தனை அவசியமென அறிந்தேன். ஆனால் உடலுக்கு உணவைவிட, ஆத்மாவுக்கும் பிரார்த்தனை கட்டாயம் வேண்டும் என்பது இப்போது தெரிகிறது. தேகத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு அவ்வப்போது பட்டினி போட வேண்டியது அவசியம். அதே மாதிரி ஆத்மாவைப் பட்டினி போடலாமா ? ஆத்மாவை ஒருக்காலும் பட்டினி போடக்கூடாது என்பது விளங்குகின்றது. புத்தர், ஏசுநாதர், முகம்மது நபி முதலிய பெரியோர் பிரார்த்தனையினால் தான் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார்கள். பிரார்த்தனையின்றி உயிர்வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

*- மகாத்மா காந்திஜி.*

# மரியாதைப் பண்புடைமை

- குமாரசாமி சோமசுந்தரம் -

சமூகத்தில், மரியாதைப் பண்புகளைப் பேணி வாழ்பவர்கள் உயர்ந்தோராகக் கணிக்கப்படுகின்றனர். பிறர் முன்னிலையில் நாம் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அதற்கேற்றாப் போல் சிறந்த முறையில் நடந்து கொள்வது மரியாதை நடத்தையாகும். மரியாதையாக நடந்து கொள்வதைப் பொறுத்தே மனித உறவுகள், மனிதத் தொடர்புகள் அமைகின்றன. நயத்தக்க நாகரிகம் உடையவன், பண்பாளன், மாமனிதன் என்று சிலரைப் போற்றுகின்றோம். காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், அத்தகையவர்கள் மரியாதையாக நடந்து கொள்பவர்கள் என்பது தெரியவரும்.

பெரியோர், மூத்தோர், பெற்றோர், ஆசிரியர் ஆகியோரைக் கனம் பண்ணுதல், மரியாதையாகும். இவ்வாறு அவர்களுக்கு உரிய மரியாதையைச் செலுத்தி, அவர்களைக் கனம் பண்ண வேண்டும் என்பது சமூகப் பழக்க வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

மரியாதை செய்தல் என்பதால் நாம் உணர்ந்து கொள்வது யாது? என்னும் வினாவினை நாம் எம்மையே உள்ளூரக் கேட்டுப் பார்க்க வேண்டும். இவ்வாறு நம்மில் எத்தனைபேர் கேள்வியை எழுப்புகின்றோம். கேள்விகளைக் கேட்பதன் மூலமே, விடைகளைத் தேடிக்கண்டு கொள்ள முடியும். நல்ல ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூகப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றல் என்பது இக்கேள்விக்கு ஒரு விடையாகும்.

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு உயர்ந்தோர்களால் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த முறையில் நடந்து கொள்ளல் என்பது மற்றொரு விடையாகும். ஒருவரிடம் ஒரு பொருளை வாங்கும் போது இரண்டு கைகளாலும் அதனை வாங்குதல், வாங்கிக் கொண்டு நன்றி சொல்லுதல் மரியாதைப் பண்புடைமையாகும். வயதில் மூத்தவர்கள், பெரியோர்கள் என்போர் நிற்கும் போது, வயதிற் குறைந்தவர்கள் ஆசனத்தில் அமர்ந்திருத்தலோ அமர்ந்திருந்தபடி அவர்களுடன் உரையாடுவதோ, மரியாதைக் குறைவான செயல்கள் ஆகும். வீதியில் நடந்து செல்லும் போது, மூத்தோர், பெண்கள், நோயாளர், நலிவுற்றோர் மற்றும் பெரியவர்கள் எதிரே வந்தால் அவர்களுக்கு வழிவிட்டு, விலகிச் செல்பவர்கள் மரியாதை தெரிந்தவர்கள். தெருவோரங்களில், மதிற்சுவர்மீது அமர்ந்திருந்து அரட்டை அடிப்பவர்கள்; பெண்களுக்கும், வயோதிபர்களுக்கும் இடையூறுகள் விளைவிப்பவர்கள்; பலர் முன்னிலையில் ஆபாசமாக நடந்து கொள்பவர்கள், ஆகியோர் மரியாதை, இங்கிதம் என்பன தெரியாதவர்கள்.

நடை, உடை, பாவனையில் மரியாதைப் பண்புடைமை பேணப்படுதல் அவசியம். அப்போது தான் அவர்கள் நயத்தக்க நாகரிகமுடையவர்கள் என்று சமூகம் அவர்களைக் கணிக்கும். கணிப்பு என்பது ஒரு உளவியல் தேவையாகும். தாம் பிறரால் கணிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் என எண்ணுபவர்கள், மரியாதை பேணுபவர்களாக அமைதல் வேண்டும். மரியாதையை அசட்டை செய்து விட்டு, தான் தோன்றித்தனமாக நடந்து கொள்பவர்களைச் சமூகம் ஒருபொருள் ஆகக் கணிக்காது; அதுமாத்திரமல்ல ஒரு பொருட்டாக மதிக்கவும் மாட்டாது. ஒருவனின் மதிப்பினை உணர்த்துவது அவனிடம் காணப்படுகின்ற மரியாதைப் பண்புடைமை ஆகும்.

நாம் பிறருக்கு எவ்வகையிலும் இடைஞ்சல் ஆக இருத்தல் ஆகாது. இதனை நாம் கடைப்பிடிக்க வேண்டுமானால், நாம் முதலில் கட்டியெழுப்ப வேண்டியது மரியாதைப் பண்புடைமையாகும். ஒருவர் படித்துக் கொண்டிருக்கிறார் அல்லது சுறு சுறுப்பாக ஆர்வத்துடன் ஒரு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர் முன்னால் இருந்து கொண்டு நெட்டி முறித்து, கொட்டாவி விட்டு, சோம்பலாக இருந்தால், அது மரியாதையற்ற செயல். அவர்களுக்குத் தொல்லைகள் உண்டாக்கத் தக்கதும், அருவருப்பை ஏற்படுத்தத் தக்கதுமான இத்தகைய செயல்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் மரியாதைப் பண்புடைமையாகும். பலர் கூடியிருக்கும் பொது இடங்களில் நாம் மரியாதையாக நடந்து கொள்ளுதல் மிக அவசியம். மதுபோதையில் பிறர் பழிக்கும் வகையில் நடந்து கொள்ளுதல்; ஆணும் பெண்ணும் தகாத முறையில் நடந்து கொள்ளுதல்; தகாத வார்த்தைகளைப் பிரயோகித்துப் பேசுதல்; உரத்துச் சிரித்தல்; அங்கசேஷ்டைகள் செய்தல்; புகைத்தல் என்பன மரியாதையற்ற நடத்தைகள். இவற்றால் பிறருக்கு எத்துணை அசௌகரியங்களையும் தொல்லைகளையும் ஏற்படுத்துகிறார்கள் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வதில்லை. நாம் பிறர் முன்னிலையில் மரியாதையுடன் நடந்து கொண்டால், பிறருக்கு நம்மால் தொல்லைகள் ஏற்படாது அவர்களின் விருப்பத்திற்கும் உள்ளாகின்றோம். நம்மிடையே உள்ள உறவும் நட்பாக மலருகின்றது. பகைமை உணர்வு ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளுகிறோம். மரியாதைப் பண்புடைமை மனித உறவுகளைப் பலப்படுத்துகின்றது; முரண்பாடுகளைக் களைகின்றது என்பதால், மரியாதையை நாம் பேணி நடந்து கொள்ளுதல் அவசியமாகின்றது.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன் எவ்வாறு மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும்.

*“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து”*
என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

அனிச்சம் பூ மிக மிக மென்மைத் தன்மை வாய்ந்தது. அந்தப் பூவினை எடுத்து மோந்தவுடன் வாடிவிடும். ஆனால் விருந்தினரோ அதனிலும் மென்மையானவர்கள். சற்று முகம் மாறுபட்டு, மலர்ச்சியில்லாமல் அவர்களை நோக்கினால் போதும், வந்த விருந்தினர்கள் வாடிவிடுவர். விருந்தினரை முகமலர்ச்சியுடன் இருகரங்கூப்பி வணக்கம் கூறி, “வாருங்கள்”, “அமருங்கள்” என உபசரித்து அவர்கள் ஆசனத்தில் அமர்ந்த பின்னர் நாமும் அமருவதே மரியாதைப் பண்பாகும். அவர்கள் பேசுவதை விநயமாகச் செவிமடுத்து, அவர்கள் கேட்பதற்குப் பணிவாகவும் பண்பாகவும் விடையளிக்க வேண்டும். அவர்களைப் பேசவிடாமல் நாமே பேசிக் கொண்டிருப்பதும், அவர்கள் பேசும் போது இடையிடையே குறிக்கிட்டு அவர்களின் பேச்சுக்குக் குந்தகம் ஏற்படுத்துவதும் அவர்களை அவமரியாதை செய்வதாகும். அவமரியாதை பிறரின் மனத்தைப் புண்படுத்துவதாகவும், வேதனைக்கு உள்ளாக்குவதாகவும் அமையும். பிறர் பேசும் போது கேட்காமல், அசட்டை செய்வதும், அவர்களை அலட்சியப்படுத்துவதும், அவமரியாதை செய்வதாகவே அமையும். ஏதாவது தவறுதலாக நடந்து கொண்டால், உடனே அவர்களிடம் மன்னிப்புக் கேட்பதன் மூலம், நிலைமையைச் சீர் செய்து கொள்ள முடியும்.

சமூகமாகக் கூடிவாழுகின்ற நாம் நமது வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ளவும், பிரச்சினைகள் இன்றி எல்லோருடனும் இணக்கமாக வாழவும், ஏனைய ஆட்களுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். மரியாதைப் பண்புடைமையைப் பெற்றிருப்பின் நல்ல மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளப் பெரிதும் துணை நிற்கும். எந்த ஒருவரும் சமூகத்தில் தனித்து வாழ முடியாது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. கூடிவாழ்வதற்கு சமூக இசைவாக்கம் தேவைப்படுகிறது. மரியாதைப் பண்புகளைப் பேணுவதன் மூலம், சமூக இசைவாக்கம் விருத்தியாகிறது. மரியாதையைக் கொடுத்துத்தான மரியாதையை வாங்க வேண்டும் என்று சொல்வார்கள். சமூகத்தில் நாம் எந்த அளவிற்கு பிறருக்கு மரியாதை செய்கிறோமோ அந்த அளவிற்கு அவர்களும் நமக்கு மரியாதை செய்வார்கள். இவ்வாறு மரியாதையாகப் பேசுதல், மரியாதையாகப் பழகுதல், மரியாதையாக ஒழுகுதல் என்பவற்றின் விளைவாக, நல்ல மனிதத் தொடர்புகளை ஏற்படுத்த முடிகின்றது. நாம் மரியாதையின்றி நடந்து கொண்டு, பிறரிடம் மரியாதையை எதிர்பார்ப்பது மடமை. சமூகம் தனியாட்களுக்கிடையிலான தொடர்புகளால் கட்டியெழுப்பப்படுகிறது. சமூக உறுப்பினன் என்ற முறையில் அந்தக் கட்டியெழுப்பும் பணிக்கு நாம் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். சமூகத்தில் நாம் மரியாதை பேணி நடந்து கொண்டாலே போதும். அதுவே பெரும் பங்களிப்பு ஆகிவிடும்.

சமூகத்தில் பல்வேறு நிலைகளில் பலருடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை உள்ளது. எந்த ஒரு விடயத்திலும் மோதல், முரண்பாடு எதுவுமின்றி பிறரோடு இணைந்து செயலாற்றுகிறோம் என்றால் அங்கு சிறந்த மனித உறவுகள் விருத்தியாகியுள்ளன என்பது தான் பொருள். நல்லுறவு இருந்தால், ஒருவரில் ஒருவர் பரஸ்பரம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். நல்ல நம்பிக்கையின் அடிப்படையில் உதவுதல், உபசரித்தல், தமக்குத் தெரிந்த பயனுள்ள தகவல்களை ஒழிப்பு மறைப்பின்றிப் பரிமாறிக் கொள்ளல் என்பன தாராளமாக நிகழும். மனிதத் தொடர்புகளுக்கு வலுவூட்டும் சக்தியாக விளங்குவது ஒருவருக் கொருவர் மரியாதை செய்தல் ஆகும்.

மனிதத் தொடர்புகள் ஏற்படும் ஆரம்பகால கட்டங்களில் மரியாதை பேணப்படுதல் போன்று, பின்னர் பேணப்படுவதில்லை. நன்றாகப் பழகி நண்பர்கள் ஆகிவிட்ட பின்னரும் மரியாதைச் சம்பிரதாயங்கள் எல்லாம் தேவையா? என்று வினவலாம். “டில்லிக்கு ராஜாவாக இருந்தாலும், எனக்குத் தம்பிதானே” என்ற முறையில் ராஜாவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதைக் கொடுக்காமல் விட முடியுமா? ஒவ்வொருவருக்கும் உரிய விதத்தில், சமூகத்தில் அவர்கள் பெற்றுள்ள நிலை, இடம், அந்தஸ்து என்பனவற்றைப் பொறுத்து, மரியாதை வழங்கப்பட வேண்டும். உரிமை காரணமாகவோ, நெருங்கிய நட்புக்காரணமாகவோ, உரிய மரியாதையைச் செலுத்தாமல் விடுவது உசிதமல்ல.

திரு., உயர்திரு, வணக்கத்திற்குரிய, அதிவணக்கத்திற்குரிய, மகாகனம் பொருந்திய, மாண்புமிகு, மேதகு, அதி உத்தம, மேன்மை தங்கிய ஆகிய மரியாதை அடைமொழிகளை, அவரவர் சமூகத்தில் பெற்றுள்ள இடம் என்ன என்பதை அறிந்து ஏற்ற முறையில் பயன்படுத்துகிறோமல்லவா. மரியாதை என்பது வரிசையறிந்து வழங்கப்பட வேண்டியது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியது நாகரிகம் ஆகும். என்னதான் சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் பேசினாலும் உரிய விதத்தில் மரியாதை செய்தல் என்பதை அலட்சியம் செய்தல் ஆகாது. மனிதத் தொடர்புகள் பலப்படுத்தப்படுவதற்கு ஆதாரமே ஒருவருக்கொருவர் காட்டும் மரியாதையே என்பதை மறந்து விடலாகாது.

சில வேளைகளில், மரியாதை செய்தல் என்பது வெறுமனே சம்பிரதாயமாகவும்; ஏதாவது ஒன்றை அடைவதற்கோ, ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கோ, உதவியைச் சுலபமாகப் பெறுவதற்கோ, ஆற்றப்படும் போலி நடிப்பாகவும் வந்து விடுவதைக் காண்கிறோம். முகஸ்துதியாகச் செய்யப்படும் மரியாதை, பிறரை ஏமாற்றுவதாக அமைகிறது. இது மரியாதைக்குச் செய்கின்ற அவமரியாதை என்றே கொள்ள வேண்டும். மரியாதை செய்தல் என்பது ஒரு நல்ல பண்பாடு. அதைத் தேவைக்கேற்றபடி துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. வெறும் நடிப்பாகவோ, பாசாங்காகவோ ஆக்கிவிடுதல் ஆகாது. நேரே கண்டால் மரியாதை, காணாத நேரத்தில் அவமரியாதை என்ற போலித்தனம்

இருக்கக் கூடாது. எண்ணம், சொல், செயல் தூய்மையோடு மரியாதை செய்யப்பட வேண்டும். "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு" கூடவே கூடாது என்கிறார் பெரியார் ஒருவர்

மரியாதைப் பண்புடைமை சமூக – கலாசார விழுமியமாக உள்ளது. ஒவ்வொரு ஆட்களுக்கோ, குழுவினருக்கோ ஏற்ப நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள் நம் முன்னோரால் நமக்குக் கையளிக்கப்பட்டு வந்துள்ளன். வீட்டில் பெற்றோருக்கும் மற்றைய உறுப்பினர்களுக்கும் எவ்வாறு மரியாதை செலுத்துவது என்பதைப் பிள்ளைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும். பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மற்றும் சக மாணவர்கள், மாணவத் தலைவர்கள் ஆகியோருடன் பழகும் போதும், உரையாடும் போதும் வரிசையறிந்து அவரவர்க்கு ஏற்ற முறையில் மரியாதை செய்வது எப்படி என்பதை நன்கு அறிந்து, ஒழுகுதல் அவசியம். மரியாதையாக நடந்து கொள்ளுதலையே நன்னடத்தை என்பர். மரியாதை தெரியாதவர்களை மனிதராக எவரும் மதிப்பதில்லை. நாலு பேருடன் இங்கிதமாகப் பழகத் தெரியாதர்களை எப்படி மனிதர்கள் என்று கூறமுடியும்? அவர்கள் விலங்குக்குச் சமம். இந்தக் காலத்தில் கல்வி கற்றவர்கள் கூட, மரியாதை தெரியாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களைக் குறை கூறிப் பயனில்லை. கல்வி முறையில்,. மரியாதைப் பண்புடைமை இடம் பெறாதிருத்தலே, மரியாதை தெரியாத, ஆனால் கல்வி கற்ற மனிதர்கள் இருப்பதற்குக் காரணம். மரியாதை செய்யும் பழக்கமானது மற்றையோர் மரியாதை செய்வதைப் பார்த்துப் பின்பற்றுதல், போலச் செய்தல் மூலம் இளைய தலைமுறையினரிடம் சேர்ந்து கொள்கிறது. வழிகாட்டுவோர், நடந்து காட்டுவோர் பற்றாக் குறையினாலும், பிறநாட்டுக் கலாசாரங்களின் ஊடுருவல்களினாலும் மரியாதைப் பண்புடைமை எம்மிடையே மறைந்து வருகிறது. அதன் விளைவு இன்று சமூகத்தில் காணப்படும் அமைதியின்மை, தொல்லைகள், வன்முறைகளில் பிரதிபலிக்கின்றது. மனிதன் மனிதனாக வாழமுடியாமல் தவிக்கின்றதற்குக் காரணம் மரியாதை செய்வதைக் குறைத்துக் கொண்டமையேயாகும்.

மனிதன் தன்னை மேன்மேலும் உயர்த்திக் கொள்ளாவிடில், மனிதப் பிறவியினால் பயனில்லை. மரியாதைப் பண்புடைமை, மனிதனின் உயர்வுக்கு உறுதுணையாயுள்ளது.

"மரியாதையை விதைப்பவன், நட்பை அறுவடை செய்வான்" என்பது பெரியோர் வாக்கு.

*"பிறரைப் பாராட்டுங்கள், யாருக்கும் பாராட்டுப்*
*பிடிக்கும். உங்களையும் பாராட்டுவார்கள்.*
*பிறரை மதியுங்கள்; மதிப்புக் கிடைக்கும்.*
*அன்பு செலுத்துங்கள்; அன்பு உங்களைத் தேடிவரும்.*
*மரியாதை செய்யுங்கள்; உங்களையும் மரியாதை செய்வார்கள்.*
*இவை ஒற்றை வழிப் பாதைகள் அல்ல;*
*இரட்டை வழிப்பாதைகள்" என்பதைக் கருத்தில் கொண்டு,*
*மரியாதை செய்து, அமைதி பேணி வாழ்வோமாக.*

# இந்து தர்மம்

பசுவின் ஜீவனிலிருந்து மனித ஜீவன் அனேக உண்மைகளை அறியலாம். இப்படிப் பசுமாட்டை இந்து மதத்தில் பெரிதாகக் குறிப்பிடுவதற்குச் சில காரணங்கள் எனக்குத் தோன்றுகின்றன. பாரத நாட்டில் மனிதனோடு உயிர்த் தோழமை கொண்டது பசு ! நாட்டு வளப்பத்தைக் காட்டுவது பசு ! பால் தருவது மட்டுமின்றி விவசாயத்திற்கு உதவியாயிருப்பவை பசு மாடுகளே ! 'இரக்கம்' என்ற குணத்திற்கு இலக்கியம் போன்றது பசு ! அந்த சாந்தப் பிராணியைக் கண்டு நமக்கு இரக்கம் ஊறுகின்றது. பசுவைக் காப்ப தென்றால் பராபரனின் படைப்பில் அடங்கிய பலவகை ஜீவராசிகளையும் காப்பதென்றே பொருள் கொள்ள வேண்டும். முதன் முதல் தோன்றிய முனிபுங்கவர் பசுவின் அருகிலேயே இருந்திருக்க வேண்டும். உலகுக்கு இந்து மதம் போதித்த புனிதமான உபதேசம் கோ சம்ரக்ஷணமேயாகும். எந்த நாள் வரை இந்துக்கள் பசுவைக் காக்கின்றார்களோ அந்நாள் வரை இந்து மதம் பசுமையாயிருக்கும் என்பது திண்ணமன்றோ !

- மகாத்மா காந்திஜி

# வீரத்துறவியைப் பாடு

எடுப்பு

வீரத்துறவியைப் பாடு — அந்த
விவேகா னந்தரைப் போலநீ வாழு

தொடுப்பு

குருவின் உபதேசம் கேழு — இராம
கிருஷ்ணர் வாழ்க்கையைநீ பாரு — *(வீரத்)*

முடிப்பு

இருப்பை நிகர்த்த தசைகளும் — நல்ல
இறுக்க மானபெரும் உறுதியும்
விரும்பும் உருக்கு நரம்பும் — உயர்ந்த
விளையும் அன்பென்றே உணர்வாய் *(வீரத்)*

குறிக்கோள் பற்றியே தொண்டில் — என்றும்
குன்றா துலர்ந்தென்றும் வாழு
முறிக்கா அன்பிலே தோய்ந்து — மக்கள்
முன்னேற் றத்தினிலே மூழ்கு *(வீரத்)*

உண்மையை அறிவதே உயர்வாம் — உள்ள
உண்மையின் உயிரொன்றே இறையாம்
திண்மையின் வெளிப்பே திறனாம் — ஏற்ற
செய்கை வெய்வதுவே திருவாம் *(வீரத்)*

*(யாழ். மத்திய கல்லூரியில் கல்லூரி இந்து மாமன்றமும், அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமும் நடத்திய சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி விழாவில் பாடப்பட்ட கவிதை)*

ஆக்கம் – நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை

# மேற்கிலங்கையின் இந்துக்களின் பழமையின் சின்னம்

## திருநந்தியேஸ்வரம்

த. மனோகரன்

இலங்கையைச் சிவபூமி என்றார் திருமூலர். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலம் முதல் இலங்கையில் சிவவழிபாடு நிலவி வந்துள்ளமையை இராமாயணம் எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையை ஆண்ட இராவணன் ஒரு சிறந்த சிவபக்தன். அம்மன்னன் காலத்தில் இலங்கை அடங்கிலும் பல சிவாலயங்கள் சிறப்புடன் இருந்தன என்று கூறப்படுகின்றது.

வடக்கே நகுலேஸ்வரம், வடமேற்கே திருக்கேதீஸ்வரம், கிழக்கே திருக்கோணேஸ்வரம், மேற்கே முன்னேஸ்வரம் என்பன பண்டைய இலங்கையின் சிவவழிபாட்டின் சின்னங்களாக விளங்குகின்றன. இவை புராண, இதிகாச தொடர்புடையவை. இராவணன் காலத்தில் இலங்கையடங்கிலும் ஆயிரம் சிவாலயங்கள் இருந்தன என்றும் கூறப்படுகின்றது.

கால ஓட்டத்தில் அந்நியராட்சி இலங்கையைக் கௌவத் தொடங்கிய காலத்தில் பழம்பெரும் இந்து ஆலயங்கள் சிதைத்து அழிக்கப்பட்டன. இன்றும் சிறப்புடன் போற்றப்படும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன கூட பாதிப்புக்குள்ளாகி மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டன என்பது நோக்கத்தக்கது.

கேகாலை மாவட்டத்தின் இரம்புக்கணை நகரில் விளையாட்டு மைதானம் அமைக்கவென்று 1968ஆம் ஆண்டளவில் நிலத்தைச் செப்பனிட முற்பட்டபோது மிகப்பெரிய சிவாலயமொன்றின் சின்னங்கள் நிலத்தினடியில் இருந்து வெளிக் கொணரப்பட்டது. அச்சின்னங்கள் இன்று பேணப்பட்டு வந்த போதும் அதன் வரலாறு ஆய்வுக்குரியதாக ஆக்கப்படாமல் விடப்பட்டுள்ளமை துரதிஷ்டமானதே.

தற்போது கொழும்பு மாவட்டத்திலும் பழம்பெரும் சிவாலயமொன்று இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இரத்மலானையினுள்ள கொணாகோயில என்ற சிற்றூரில் நிலத்திற்கடியில் புதையுண்டிருந்த பல சிவாலய சின்னங்கள் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன.

நிலத்தைத் தோண்டிய வேளை ஆவுடையாரொன்றும் நந்தியும் வெளிவந்துள்ளன. கருங்கல்லாலான ஆவுடையாரைத் தட்டிப் பார்க்கும் போது வெண்கலஒசை ஒலிக்கின்றது. கருங்கல்தூண்கள், மிகப்பெரிய தலவிருட்சமான ஆலமரம் என்பனவும் அங்கு காணப்படுகின்றன.

இவ்விடத்தில் சிவலிங்கம் உட்பட ஆலயத்தில் பல விக்கிரகங்களும் புதையுண்டிருக்கலாம் என்றும் அவற்றை வெளிக் கொண்டுவர உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சிவாலயம் அமைந்திருந்த இடத்தில் இன்றுள்ள முருகன் கோயிலின் தர்மகர்த்தாவான எம். காமினி ஆர் பெர்னாண்டோ கூறுவதுடன், அதில் தீவிர ஆர்வமுடையவராகவும் காணப்படுகின்றார்.

சிங்கள பௌத்தரான அவர் சமஸ்கிருத சுலோகங்களைத் தெளிவாக உச்சரித்துப் பூசை செய்கின்றார். இக்கோயில் இராவணன் காலத்து பெருமை பெற்ற கோயில் என்பதை நிரூபிப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார். பண்டைய ஆதாரங்கள் பலவற்றைத் தந்துதவிய அப்பெருமகன் இந்துக்களின் போற்றுதற்குரியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வரலாறு மறைக்கப்படாது வரலாற்றுண்மைகள் வெளிக் கொணரப்படவேண்டும் என்ற பெருமனம் கொண்ட அப்பெரியார் தந்துதவிய சான்றுகளை அடியொற்றி இச்சிவாலய வரலாற்றை ஆராயலாம்.

சிங்களத்தில் 'கொணா கோயில்' என்பது தமிழில் எருதுக் கோயில் என்று பொருள்படும். ஊரும், கோயிலும் இன்று கொணா கோயில் என்றே சிங்களத்தில் அழைக்கப்படுகின்றன. கோயில் என்பது தமிழ்ச் சொல்லாகும்.

நாம் இக்கோயிலின் பெயரைத் தமிழில் குறிப்பிடுவதானால் நந்திக்கோயில் அல்லது நந்தியேஸ்வரம் என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் இலங்கையில் சிவாலயங்கள் யாவும் ஈஸ்வரங்கள் என்றே குறிப்பிடப்படுகின்றன.

இனிநாம் வரலாற்றுக்குறிப்புகளைப் பார்ப்போம். கோட்டை இராசதானியை 1415 முதல் 1467 வரை ஆட்சி செய்த மன்னன் 6ஆம் பராக்கிரமபாகு, அம் மன்னனின் மகள் உலகுடை குமாரி. ''உலகுடை குமாரி'' என்பது தமிழ்ப் பெயராகும்.

சிங்கள இலக்கியங்களிலே சிறப்புப் பெற்ற நூல்களில் ஒன்று ''சலலீஹினி சந்தேசய''. இது தமிழில் குயில்விடுதூது

என்று பெயர் பெறுகின்றது. பன்மொழிப் புலமை கொண்ட ராகுல தேரர் எனும் பௌத்த பிக்குவால் 6ஆம் பராக்கிரமபாகு காலத்தில் இயற்றப்பட்டது இந்நூல். இந்நூலிலே இரத்மலானையில் புதையுண்டு தற்போது கண்டு பிடிக்கப்பட்ட சிவாலயமான நந்தியேஸ்வரம் தொடர்பான மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இளவரசி புத்திரபாக்கியம் வேண்டி களனியிலுள்ள விபீஷண தெய்வத்திடம் குயிலைத் தூதனுப்புகின்றாள். அவ்வாறு அனுப்பப்படும் பறவைக்குச் செல்லும் வழியையும், தங்குமிடத்தையும் கூறுவதாக அப்பாடல்கள் உள்ளன. இப்பாடல்களின் விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

அகில், கற்பூரம், சாம்பிராணி போன்றவற்றிலிருந்து எழும் வாசனைப் புகையின் மத்தியிலே, ஜொலிக்கின்ற கொடிகளையுடையதும், மிகப்பெரிய மிருதங்கம் எனப்படும் மேளத்தினாலும், சங்குகளினாலும் எழுப்பப்படும் ஓசையுடனும், காண்டாமணியின் ஓசையுடனும் மக்கள் மிகவும் விருப்புடன் தமிழ் மொழியில் பாடும் தோத்திரங்களால் மனதைக் கவரும் ஈஸ்வரன் கோயிலில் தங்கவும் என்பது முதற்பாடலின் கருத்து.

அடுத்த பாடலில் தேவதாசிப் பெண்களின் எடுப்பான மார்பகங்களில் பூசியிருக்கும் கும்குமப்பூ வாசனையைத் தழுவி, பறவைகளின் ஓசையுடன் சேர்ந்து இளந்தென்றல் வீசும் போது காலைப் பூசையில் ஐந்துவித இசைக்கருவிகள் ஒலிக்கப்படும். அப்பஞ்ச தூர்ய நாதங்களைக் கேட்டு சூரியன் உதயமாகும் வேளை நித்திரைவிட்டெழவும் – இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மற்றப்பாடலில் உதய பர்வதம் என்னும் தங்கவிளக்குத் தூணில் பிரகாசிக்கும் விளக்குப் போன்ற சூரியன் உலகிற்கு ஒளிவீசும் வேளையில் ஈஸ்வரக் கடவுளுக்கு நடைபெறும் நடனங்களுடனான பூசை உற்சவத்தைப் பார்த்துவிட்டு உறுதியான மனதுடன் நீலநிற ஆகாயத்தில் உனது பயணத்தைத் தொடரவும் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று கவிதைகளில் உள்ளவற்றை நோக்கும்போது இவ்விடத்தில் 14ஆம் நூற்றாண்டிலே அதாவது ஐரோப்பியர் இந்நாட்டிற்குக் காலடி எடுத்து வைக்காத காலத்திலேயே, அதாவது இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பே ஈஸ்வரன் கோயில் அதாவது சிவன் கோயில் இருந்துள்ளது என்பது கூறப்பட்டுள்ளது. அத்துடன் தமிழில் தோத்திரங்கள் பாடப்பட்டமையால் தமிழர்கள், இந்துக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதும் தெளிவுறுத்தப்படுகின்றது.

இந்து சமயத்தவரல்லாத மதிப்புக்குரிய பௌத்த பிக்குவான ராகுலதேரர் உண்மையை உள்ளபடி உணர்த்திய உத்தமர் என்பது கவனத்திற்குரியதுடன், நடுநிலைத் தன்மை வாய்ந்ததுமாகும். இளவரசியின் பெயர் உலகுடைகுமாரி என்பது தமிழ்ப் பெயர் என்பதுடன் தென்னிலங்கையை ஆண்ட அரசர்கள் இந்துக் கோயில்களைப் போற்றிப் பேணியுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இராகுல தேரரின் "சலலீஹினி சந்தேசிய" என்னும் நூலிலுள்ள பாடல்களின்படி உலகுடை குமாரி புத்திரப் பேறுவேண்டி களனியிலுள்ள விபீஷண தெய்வத்திடம் தூதனுப்பும் வேண்டுகோள் ஓலையைத் தாங்கிச் செல்லும் வழியும் குறிப்பிடப்பட்டுள்ளது. விபீஷண தெய்வமாகக் குறிப்பிடப்படுபவர் இராவணனின் தம்பியும், இராமபிரானால் இலங்கை அரசான மகுடாபிஷேகம் சூட்டப்பட்டவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இனி கூறப்பட்ட வழியைப் பார்ப்போம். கோட்டை இராசதானியின் தலைநகரமான ஸ்ரீஜயவர்த்தனபுரத்திலிருந்து மாலை வேளையில் சுப நேரத்தில் பயணத்தை ஆரம்பித்து தியவண்ணா ஓயாவின் கொந்தகஹ தொட்டையைத் தாண்டி மறுபக்கம் போனால் அங்கு காணப்படுவது ஈஸ்வரன் கோயில்.

இவ்வாறு குறிப்பிடப்படும் ஈஸ்வரன் கோயில் இரத்மலானையினுள்ள கொணாகோயில என்னும் இடத்திலுள்ள நந்தியேஸ்வரத்தையே குறிக்கின்றது. மேற்படி ஈஸ்வரன் கோயிலிலிருந்து மறுநாள் களனியிலுள்ள விபீஷணன் கோயிலுக்குப் புறப்படுமாறு கூறப்பட்டுள்ளது. வழியை ஆராயும் போதும் இது உறுதிப்படுத்தப்படுகின்றது.

அந்நியர் ஆட்சி இலங்கையில் பரவிய வேளையில் 1519ஆம் ஆண்டில் போர்த்துக்கீசர் இச் சிவன் கோயிலை இடித்து அழித்துள்ளனர். அத்துடன் நில்லாது அக்கோயில் பிரதம குருவாகவிருந்த குப்புசாமி குருக்களையும், அவரது குடும்பத்தினரையும் அழித்துள்ளனர். குப்புசாமிக் குருக்களின் மகனொருவரைத் தமது இலங்கையின் முதலாவது மதகுருவாக நிலைப்படுத்தினர் என்று கூறப்படுகின்றது.

இச்சிவாலயம் அழிக்கப்பட்டதுடன் மதமாற்ற நடவடிக்கைகளிலும் வேகமாக ஈடுபட்ட போர்த்துக்கேயருக்கெதிராக விதியபண்டாரனென்ற பிரதானி கொதித்தெழுந்து போரிட்டு மதம் மாறியவர்களையும், புதிதாக அந்நியரால் அமைக்கப்பட்ட தேவாலயங்களையும் அழிக்க முற்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஏழாயிரம் ஏக்கர் காணி இக்கோயிலுக்குரியதாக இருந்ததாகவும் அவை அந்நியராட்சிக் காலத்தில் பிற

தேவைகளுக்காகப் பயன் படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இச்சிவாலயத்தின் தலவிருட்சமான ஆலமரம் மனதைக் கவரும் வண்ணம் மிக ரம்மியமான சூழலை இன்றும் அவ்விடத்தில் ஏற்படுத்தி நிற்கின்றது. தூர்ந்து போயுள்ள குளத்தை அகழ்ந்தால் அதில் ஆலயத்திலிருந்த சகல விக்கிரகங்களையும் மீட்க முடியும் என்று அங்குள்ளோர் நம்புகின்றனர். அங்குள்ள சில சிதைவுற்ற சின்னங்களையும் கண்டெடுக்கப்பட்ட ஆவுடையாரையும், நந்தியையும் நோக்கும் போது மிகப் பெரிய கருங்கல்லாக சிவாலயமொன்று அவ்விடத்திலிருந்ததை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

போர்த்துக்கீசரால் சிதைக்கப்பட்டபின் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மீண்டும் அவ்வூர் மக்களின் முயற்சியால் அவ்விடத்தில் முருகன் ஆலயம் நிறுவப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றன. பண்டைய விக்கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு மீண்டும் அதே இடத்தில் ஈஸ்வரன் கோயில் நிறுவப்பட வேண்டும் என்பது அங்கு பரம்பரையாக வாழ்ந்து வரும் மக்களின் விருப்பமாகும். இதனை அங்கு சென்ற போது அறிந்து கொள்ள முடிந்தது. பிறப்பால் சிங்களமொழியையும், பௌத்த சமயத்தையும் சேர்ந்ததாகக் கூறப்படும் அம்மக்களின் ஆர்வம் நிறைவேற இறையருள் கூட வேண்டும். இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். வரலாற்று உண்மைகள் நிலைநிறுத்தப்பட்டால் இந்நாட்டில் சூழ்ந்துள்ள மாய இருள் நீங்க வழிபிறக்கும்.

அண்மையில் இச்சிவாலயம் அமைந்திருந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவில் பிறதேவைக்காக நிலத்தை அகழ்ந்தபோது ஒரு அம்மன் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. அச்சிலை தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆழ்ந்தெடுத்தபோது ஏற்பட்ட தாக்கத்தால் விக்கிரகத்தின் தலைப்பகுதி தனியாக உடைந்துள்ளது. சிறு சிறு பாதிப்புக்குள்ளான அச்சிலை 11ஆம், 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென தொல்பொருள் ஆய்வாளர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

வரலாற்று, தொல்பொருள் ஆய்வுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டால் இலங்கையின் மேற்குக்கரையின் பண்டைய மக்களின் சமய, மொழி, கலை, பண்பாட்டுச் சிறப்புக்கள் வெளிக்கொண்டு வரப்படலாம். இதன்மூலம் இலங்கையின் இந்து சமயத்தின் தொன்மை தெளிவுறுத்தப்படும். பண்டைய பெருமை நிலை நிறுத்தப்படும். திருநந்தியேஸ்வரத்தின் புகழ் உலகெங்கும் ஒங்கும். திருநந்தியேஸ்வரரின் வெளிப்பாட்டுடன் நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலைக்கப் பிரார்த்திப்போம்.

## மங்கலப் பொருட்கள்

*'சௌந்தர்யலஹரி' என்னும் நூலில் ஆதிசங்கர பகவத்பாதாள் பார்வதியை ஸ்தோத்திரம் செய்கையில், "உன்னுடைய காதணியான தோட்டின் மகிமையினால் தான் ஸ்ரீ பரமேஸ்வரன் சமுத்திரத்திலிருந்து உண்டான ஆலகால விஷத்தைச் சாப்பிட்டும்கூட, இறக்காமல் இருக்கிறார்" என்றும் கூறுகிறார். அதையே "தவ ஜனனீ தாடங்க மஹிமா" என்கிறார். தாடங்கமென்றால் தோடு. எல்லாக் கோயில்களிலும் உள்ள அம்மன், தோடு இல்லாமல்- தாடங்கம் இல்லாமல் - இருக்க மாட்டாள். தோடு என்பது மங்களகரமானது. மங்களத்தை அளிக்கக் கூடியது. ஆகவே பெண்கள் முக்கியமாக சுமங்கலிகள் - தோடில்லாமல் இருக்கக்கூடாது.*

*காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கையில் வளையல், காலில் மெட்டி முதலியவை அணிகலன்களாக இருந்தாலும், மங்கலப் பொருள்களாகச் சொல்லப்படுகின்றன.*

*தற்காலத்தில் ஒரு கையில் வளையலும் மற்றொரு கையில் கடிகாரமும் கட்டிக் கொள்கிறார்கள். அதனால் பல சௌகரியங்கள் இருந்த போதிலும் மங்களம் பெறுவதில் அரைப் பங்கு குறைந்து விடுகிறது. ஆகவே வினைப் பயனால் வரும் துன்பம் ஒருமுறை, நாமே இது போன்ற பல காரியங்கள் மூலம் வரவழைத்துக் கொள்ளும் துன்பம் மற்றொரு முறை.*

*கல்யாணத்தில் முக்கியமானது தாலி கட்டுவதென்பது. அதைத்தான் மங்களசூத்திரம், மங்கள நாண் என்பார்கள். ஆகவே இந்தத் தாலி கட்டுவது என்பது, மூன்று முடிச்சு போடக்கூடிய நூலாகத்தான் இருக்க வேண்டுமென்பது தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் பலர் தங்கச் சங்கிலியை வாங்கி அதைக் கோத்து விடுகிறார்கள். தாலி கட்டும்போது சொல்லக்கூடிய மந்திரத்தில், 'கழுத்தில் தாலி கட்டுகிறேன்' என்றுதான் இருக்கிறதே தவிர, கோத்துப் போட்டு விடுகிறேன்' என்றில்லை.*

*மேலும் தாலி என்பது ஒரு மங்களப் பொருள். அதை அணிகலன்கள்போல் எடுத்து மாட்டி வைப்பதென்பது சரியல்ல. ஒரு விசேஷப் புண்ணிய காலங்களில் - தாலிக் கயிறு நைந்து போகும் சமயம் வேறு கயிறு மாற்றிக் கொள்ளலாம். அணிகலன் போல் அவ்வப்போது மாற்றக் கூடாது.*

*(ஜெயேந்திர சுவாமிகள்)*

# மக்கள் சேவைப் பாதையில் மாமன்றம்

**கந்தையா நீலகண்டன்** - *மாமன்றப் பொதுச் செயலாளர்*

கடந்த இரு தசாப்தங்களில் மக்கள் படுகின்ற – பட்டுவருகின்ற துன்பங்கள், வேதனைகள், சோதனைகள், வார்த்தைகளால் வடித்தெடுக்கப்படக் கூடியவையன்று. எங்கள் உடன் பிறப்புகள் தங்கள் சொந்த நாட்டில் கதிகலங்கி நிற்கின்ற அவலம், சரித்திரத்தின் இருண்டதோர் அத்தியாயம். அப்படியான ஒரு துர்ப்பாக்கிய நிலையில் தான் இன்னுமொரு தசாப்தத்திற்குள் காலடி எடுத்து வைக்கப் போகின்றோமா ?

கண் கலங்க, உள்ளம் ஏங்க இந்த வினாவிற்கு விடை என்னவாக இருக்கும் என்பதறியாது நிற்கின்ற காலகட்டம் இது.

'இறைபணி நிற்க' என்ற உயர் நோக்கை இலட்சியமாகக் கொண்டு, இந்நாட்டின் இந்து மன்றங்களையும் அறக்கட்டளைகளையும் ஒன்றிணைத்து, இந்து மக்களின் உச்ச நிறுவனமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நிலையில் செய்யக்கூடியவை என்ன ? மாமன்றம் ஆழ்ந்தாராய்ந்து எடுத்த முடிவுகள் இருவகை.

முதலாவது, உலகியல் சக்திகளில் நாங்கள் எல்லோரும் நம்பிக்கையை இழந்து நிற்கின்ற இக் கட்டத்தில் எல்லாம் வல்ல இறைவனே கதி என்ற ரீதியில் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி ஆகிய புனித நாட்களில் இந்துக்கள் கொண்டாட்டங்களையும் விழாக்களையும் தவிர்த்து இறைவழிபாட்டில் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு கடந்த சில ஆண்டுகளாக வேண்டுகோள் விடுத்து வந்திருக்கிறோம்.

**02.04.1999** அன்று புதிய கதிரேசன் ஆலயத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஒழுங்கில் பல இந்து மன்றங்களும் கலந்து கொள்ளும் பிரார்த்தனை வழிபாட்டையும் ஒழுங்கு செய்திருந்தோம்.

இரண்டாவது சமூகநலன் பணி. அல்லலுறும் மக்களுக்கு எங்களாலான உதவிகளையும் சேவைகளையும் அளித்து வருகின்றோம். வடகிழக்கில் உணவு உடையின்றித் தவித்த மக்களுக்கு கொழும்பு மாநகரில் நிதியும் பொருட்களும் சேர்த்து அனுப்பி வந்திருக்கிறோம். சமீபத்தில் வன்னி மக்களுக்கு மூன்று லொறிகளில் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைத்திருக்கிறோம். அகில இலங்கை இந்துமாமன்றக் குழு ஒன்று இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தஜி மகராஜ் சகிதம் வவுனியாவிற்கு **06.03.1999** அன்று நேரில் சென்று வவுனியா முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் அரச அதிபர்களையும் வன்னியில் அளப்பரிய சேவையாற்றி வருகின்ற ஏனைய அரச அதிகாரிகளையும் கண்டு வன்னி நிலைமையை நேரில் அறிந்ததுடன், பூந்தோட்டத்தில் எட்டு முகாம்களில் மக்கள் அனுபவிக்கும் துயர நிலையையும் கண்டு கலங்கினோம். மேலும் மாமன்றத்தினால் ஆன சேவைகளை செய்ய முயல்வோம். அந்தத் துயரைப்போக்க மேலும் அருளை ஆண்டவனும், ஆதரவை மக்களும் தரவேண்டும். இராமலிங்க அடிகள் கடந்த நூற்றாண்டில் கூறியதை இந்நாட்டின் வரம்புக் கட்டில் நின்று கொண்டு நினைவு கூர வேண்டி இருக்கின்றது:–

*"மண்ணுல கதிலே உயிர்கள் தாம் வருந்தும்*
*வருத்தத்தை யொரு சிறிதெனினும்*
*கண்ணுறப் பார்த்து செவியுறக் கேட்டும்*
*கணமும் நான் சகித்திடமாட்டேன்*
*எண்ணுறு மெனக்கே நின்னருள் பலத்தால்*
*இசைத்த போதிசைத்த போதெல்லாம்*
*நண்ணுமவ் வருத்தம் தவிர்க்க நல்வரந்தான்*
*நல்குதல் எனக்கிச்சை எந்தாய்"*

இதே கருத்து பல நூற்றாண்டுகளுக்குமுன் திருவள்ளுவர் செய்த திருக்குறளிலும் எதிரொலித்தது.

*"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தன் நோய் போல் போற்றாக்கடை"*

*"அறமே மறங்கள் முழுதழிக்கும்*
*அறமே கடவுள் உலகேற்றும்*
*அறமே சிவனுக் கொருவடிவமாகும்"*

எனக் காஞ்சி புராணத்தில் சிவஞானமுனிவர் கூறியிருக்கிறார்.

*"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல்"*

என்றார் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய வள்ளுவப் பெருந்தகை.

பகவத் கீதை (அத்தியாயம் 12 – பாடல் 4) யில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பின்வருமாறு அருளினார் :

*"யார் எல்லோரின் நலனிலும் இன்பம் காட்டுகிறார்களோ அவர்கள்தான் என்னிடம் வந்து அடைவார்கள்"*

"யாருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவனையே நான் மகாத்மா என்பேன்" என்ற சுவாமிஜி விவேகானந்தர் மேலும் கூறினார் : "நீங்கள் அனைவரும் பிறர்க்கென உழைத்துக் கொண்டே இறப்பதை நான் விரும்புகிறேன்"

அதே நேரத்தில் எங்களின் எதிர்கால சந்ததியிலும் அக்கறை காட்டுவதும் எமது கடமை.

இந்நாட்டின் தலைநகரில் எமது சமயப் பண்பாட்டு வழியில் இந்துப் பிள்ளைகள் கல்வி கற்று வளரவேண்டும், வாழ வேண்டும் என்ற புனித நோக்குடன் கொழும்பில் வாழ்ந்த 24 இந்து பிரமுகர்கள் 1951ம் ஆண்டில் இந்து வித்தியாவிருத்திச் சங்கம் அமைத்து பம்பலப்பிட்டியில் பிள்ளையார் பாடசாலையாக ஆரம்பமாகி இன்று தேசியக் கல்லூரியாக வளர்ந்திருக்கும் கொழும்பு இந்துக் கல்லூரியையும், இரத்மலானையில் பிரமாண்டமான கட்டிடங்களைக் கொண்ட கொழும்பு இந்துக் கல்லூரியையும், பம்பலப்பிட்டியில் சரஸ்வதி மண்டபத்தையும் நிறுவினர். தங்கள் சொந்த நலன்களை ஈடுவைத்து அந்த பிரமுகர்கள் இக்கைங்கரியத்தைச் செய்தனர்.

இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரி இராணுவ முகமாக மாறி எங்கள் பிள்ளைகளுக்கு என்று நிறுவப்பட்ட கல்விக்கூடம் பறிபோகும் நிலை வந்தவேளை அகில இலங்கை இந்துமாமன்றமும் இந்து வித்தியாவிருத்திச் சங்கமும் அன்றைய கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலந்திரன் அன்றைய கொழும்பு மாநகரமுதல்வர் திரு. க. கணேசலிங்கம் ஆகியோரின் ஆதரவுடன் அன்றைய ஜனாதிபதி இரணசிங்க பிரேமதாசவிடம் செய்த மகஜரின் விளைவாக மீண்டும் பாடசாலையாக இயங்க இக் கல்லூரி திறக்கப்பட்டது.

இன்றைய அதிபர் திரு. ந. மன்மதராஜனின் ஆக்கமும் ஊக்கமும் அக் கல்லூரியில் ஏழை மாணவர்களுக்கு ஓர் இலவச விடுதியை அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த ஆண்டில் ஆரம்பிக்க வழிவகுத்தது. திரு. பொன். பாலசுந்தரம் போன்ற வள்ளல்கள் தரும் உதவியுடன் இவ்விடுதியில் நாற்பது மாணவர்கள் தங்கி கல்வி கற்கிறார்கள். இன்னும் பலர் இவ்விடுதியில் தங்க விரும்புகிறார்கள். அதற்கு வழிவகுக்க மாமன்றம் விழைகின்றது. அதிபர் திரு. மன்மதராஜன் தயாராக இருக்கிறார். ஆனால் விடுதி நிதியம் மேலும் வளர்க்கப்பட்ட பின்பே விடுதியை விஸ்தரிப்பது உசிதம். திரு. திருக்குமார் நடேசனின் ஆதரவில் நடந்த ஸ்ரீ முருகதாஸ் சுவாமியின் ஆத்மீக இன்னிசை கச்சேரி, சட்டத்தரணி சின்னத்துரை சுந்தரலிங்கம் செய்த உதவி இந்நிதியத்தை வளர்க்க உதவியது. அவை மட்டும் போதாது மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. த. கணநாதலிங்கம் எடுத்த முயற்சியால் பிரபல பெரும் பாடகி கானசரஸ்வதி பத்மவிபூஷணம் டி. கே. பட்டம்மாளின் பேர்த்தி 'இன்னிசை மாமணி', 'யுவகலா பாரதி' ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் வழங்கும் இன்னிசைக் கச்சேரி இந்நிதியம் மேலும் வளர நடத்தப்படுகிறது. இவ்விடுதியில் மேலும் மாணவர்களை வளர்ப்பது எங்கள் கடமை – பணி. அதற்கு தேவையாக நிதியம் வளர சகலரும் உதவ வேண்டும். இது ஒரு புனித அறப்பணி.

மெய்ஞானம் கற்று இறைபணி நிற்கவிரும்பும் சிறியவர்கள் யாம். எம்மை வழிப்படுத்த வந்த ஆத்மீக ஞானிகள் பேதித்தவையை மறவாது நினைந்து அவ்வழி வாழ முனைய வேண்டும்.

*"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"*

என்றும்,

*"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"*

எனவும் தாயுமானவர் அருளிய பொன்மொழிகளை எங்கள் வாழ்க்கையின் நாளாந்த வழிகாட்டிகளாகக் கொண்டு இன்று வேதனைகளிலும் சோதனைகளிலும் வாடும் எங்கள் அன்பு உடன் பிறப்புகளின் துடர் துடைக்கப் புறப்படுவோமாக.

வறியவர் ஒருவர்க்கு அவர் வேண்டும் ஒன்றை உதவாதவன் செல்வம், அனைத்து நலன்களும் வாய்க்கப் பெற்ற ஒருத்தி, தனித்திருந்து மூப்படைவதைப் போன்றது என்பதனை,

*"அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்*
*பெற்றாள் தமியள்மூத் தற்று"*

என்ற குறளில் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

*"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்றறியேன்; பராபரமே"*

என்று பாடிய தாயுமானவர் அடிகள், நாங்கள் பெற்ற இன்பம் சகலரும் பகிர நாங்கள் உதவவேண்டும் என்ற உயர் நோக்கினை பின்வரும் அடிகளில் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார் :

*"காகம் உறவு கலந்துண்ணக்*
*கண்டீர் ! அகண்டா காரசிவ*
*போக மெனும்பே ரின்ப வெள்ளம்*
*பொங்கித் ததும்பிப் பூரணமாய்*
*ஏக வுருவாய்க் கிடக்குதையோ !*
*இன்புற் றிடநாம் இனி எடுத்த*
*தேகம் விழுமுன் புசிப்பதற்குச்*
*சேர வாரும் ! செகத்தீரே !"*

வன்னியிலும் ஏனைய இடங்களிலும் வாழும் இடம் பெயர்ந்த சகோதரங்களுக்கு சொந்த நாட்டில் தாங்கள் இருக்க சொந்த இல்லங்களில்லாத அப்பாவி மக்களுக்கு நேசக்கரம் நீட்டுவது நாங்கள் செய்யக்கூடிய பெரும் அறம். வீட்டில் வதித்து படிக்க இயலாத அனாதைச் சிறார்களுக்கு இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் தன்னின மக்களின் துயரத்தைப் போக்கத் தன் வாழ்வை அர்ப்பணித்த மகான் கலாநிதி வேலாயுதபிள்ளையின் நினைவாக இருக்கும் வேலாயுதபிள்ளை மண்டபத்தில் வதிய வைத்து உணவு, உடை சகல வசதிகளும் இலவசமாகத் தந்து கல்வி கற்க வைக்கும் நல்ல கைங்கரியத்திற்கு நாம் செய்யும் உதவி அறங்களில் எல்லாம் உயர்ந்த அறம்.

மற்றவர்களின் நலன்பேணி மக்கள் தொண்டே இறைபணியாக மேற்கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீசிவகாமியம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளை என்றும் இறைஞ்சி நிற்போம்.

*"ஊருக்கு உழைத்திடல் யோகம்*
*நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்*
*போருக்கு நின்றிடும் போதும்*
*உளம் பொங்கல் இல்லாத*
*அமைதி மெய்ஞ்ஞானம்"*

*– மகாகவி பாரதியார்*

## மகா சிவராத்திரி விழா

மாமன்றத்தின் சிவராத்திரி விழா, மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் கடந்த பெப்ரவரி 14ம் திகதியன்று சிறப்பாக நடந்தேறியது. இங்கு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு நான்கு சாம காலமும் விசேடபூசை, அபிஷேகங்களை சிவஸ்ரீ. பால இராமச்சந்திரக் குருக்கள் அவர்களும், சிவஸ்ரீ. பிரபாகரசர்மா அவர்களும் நடாத்தி வைத்தார்கள்.

இலங்கை சின்மயா மிஷனைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய பிரமச்சாரி ரமண. சைதன்யா அவர்களின் சிவதியானத்துடன் சேர்ந்தமைந்த ஆன்மீகச் சொற்பொழிவும், பஜனைப் பாடலும் அன்றைய நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக இடம்பெற்றிருந்தது. மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினர்களான இரா. மயில்வாகனம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும், திரு. தி. மாணிக்கவாசகர், திரு. வ. மாணிக்கவேல் ஆகியோரின் திருமுறைப் பாடல்களும், த. கணநாதலிங்கம் அவர்களது பஜனைப் பாடலும் மாமன்ற சிவராத்திரி விழாவை சிறப்பித்திருந்தன.

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி மாணவ மாணவிகளின் பங்களிப்பு மாமன்றத்தின் சிவராத்திரி விழாவை சிறப்பித்து முழுமைப்படுத்தியது என்பதை சிறப்பாகச் சொல்லலாம். பக்க வாத்தியங்களுடன் சேர்ந்தமைந்த பண்ணிசை பக்திப் பாடல்கள், மற்றும் தாளலய நாடகம், உயர் வகுப்பு மாணவர்கள் வழங்கிய பட்டிமன்றம், கவியரங்கம் என்பன அனைவரும் பாராட்டும் வகையில் அருமையாக அமைந்திருந்தது.

மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' மகா சிவராத்திரி சிறப்பு மலர் வெளியீட்டு வைபவமும் அன்றைய சிவராத்திரி விழாவின் சிறப்பு அம்சமாக இடம்பெற்றிருந்தது.

★★★★★★

## பிரார்த்தனை

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவும், வேதனைகளால் அல்லலுறும் மக்கள் துயரங்கள் நீங்கி நிம்மதியாக வாழவும் ஆண்டவன் அருள்வேண்டி அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த பிரார்த்தனை நிகழ்ச்சியொன்று இம்மாதம் (ஏப்ரல்) 2ம் திகதி வெள்ளிக்கிழமையன்று, வெள்ளவத்தை புதிய கதிரேசன் கோவிலில் நடைபெற்றது.

அன்றைய தினம் காலை விசேட அபிஷேகம், பூசை என்பனவற்றுடன் கூட்டு வழிபாடும் இடம் பெற்றிருந்தது.

பல இந்து சமய நிறுவனங்களுடன் பொது மக்கள் பலரும் மேற்படி பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

★★★★★★

## நூல் அறிமுக விழா

சித்தாந்த ரத்தினம் க. கணேசலிங்கம் அவர்களின் "சைவத்தை அறியுங்கள்" நூலின் அறிமுக விழா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த மார்ச் மாதம் 14ம் திகதியன்று மாமன்றத் தலைமையகத்தில் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நூலின் அறிமுகவுரையை இ. நமசிவாயம் அவர்களும், ஆய்வுரையை குமாரசாமி சோமசுந்தரம் அவர்களும் நிகழ்த்தினார்கள்.

★★★★★★

## கீரிமலை, மாவிட்டபுரம் காணிகள் சுவீகரிப்புக்கு ஆட்சேபனை

கீரிமலை ஸ்ரீநகுலேஸ்வரம், மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோயில் அடங்கிய காணிகளை இராணுவமுகாம் விஸ்தரிப்புக்கு அரசாங்கம் சுவீகரிப்பு செய்ய எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை அறிந்ததும் அகில இலங்கை இந்துமாமன்றம், மாண்புமிகு ஜனாதிபதி நீதி அரசியலமைப்பு விவகார இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சர் சட்டமா அதிபர் ஆகியோருக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தது. அந்த முயற்சி கைவிடப்பட்டது என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★

# ஆதரியுங்கள் !
# தந்துதவுங்கள்

## வன்னியில்

எங்களின் உடன்பிறப்புக்கள் போதிய உணவு, உடை, மருத்துவவசதி, கல்வி முதலிய அடிப்படை தேவைகளின்றி தவிக்கின்றனர்.

பலர் தந்த நிதியுதவியுடன் பொருட்கள் உதவியுடன் மூன்று லொறிகளில் நிவாரணப்பொருட்களை வன்னிக்கு வவுனியா அரச அதிபர் மூலம் அனுப்பிவைத்திருக்கின்றோம்.

* **பால் மா**
* **உடைகள்**
* **அப்பியாசப் புத்தகங்கள்**
* **கணித உபகரணப் பெட்டிகள்**
* **பாய்கள்**

போன்ற நிவாரணப் பொருட்களை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தொடர்ந்தும் ஏற்கின்றோம். நிதியுதவியை காசோலை மூலம் எங்களுக்கு அனுப்பலாம்.

**ALL CEYLON HINDU CONGRESS**
**ACHC Building,**
**91/5, Sir Chitampalam A. Gardiner Mawatha,**
**Colombo. 2.**

*அகில இலங்கை இந்து மாமன்றம்.*
**ACHC** கட்டிடம்
**91/5,** சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2


# இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியில்
# அகில இலங்கை இந்து மாமன்றம்
# கலாநிதி வேலாயுதபிள்ளை மண்டபத்தில் நடத்தும்
# *இலவச மாணவர் விடுதி*

உங்கள் ஆதரவை நம்பி இளம் பிள்ளைகள் இவ்விடுதியில் வளர்கின்றார்கள். ஒரு மாணவனைப் பராமரிக்கும் மாதாந்தச் செலவு ரூ. 1500/-. 40 மாணவர்களை மாதாந்தம் பராமரிக்கும் மாதாந்த செலவு ரூ. 60000/-. இன்னும் பல குழந்தைகள் இவ்விடுதியில் தங்கிப்படித்து, வாழ்ந்து வளர நாடுகிறார்கள். அதற்கு வழிவகுக்க நிதியம் ஏற்படுத்தப்பட்டு வளர்க்கவே ஸ்ரீமதி நித்தியஸ்ரீயின் இன்னிசைக் கச்சேரியை இரசிக்கும் அன்பர்கள் நன்கொடை தந்திருக்கிறார்கள். நீங்களும் உதவுங்கள்.

**Contact :**
**ALL CEYLON HINDU CONGRESS**
**ACHC Building,**
**91/5, Sir Chitampalam A. Gardiner Mawatha,**
**Colombo. 2.**

*அகில இலங்கை இந்து மாமன்றம்.*
**ACHC** *கட்டிடம்*
**91/5,** *சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,*
*கொழும்பு - 2*

உ
சிவமயம்



# நந்தி



ஸர்வம் தர்ம மயம்,நந்தி, சிவபெருமானுக்கு திருநந்தி தேவருக்கு இடபவாகனத்திற்கு விருத்தியடைதல் என்ற பல பெயர் கொண்டது. சிறப்பாக கைலை மலை திருவாசல் காவலர் திருநந்தி தேவர் பெருமானைக் குறிப்பிடும். ஆனால் சிவபெருமானாகும் சைவ மத முழு முதற் கடவுளின் வாகனத்திற்கும் இத்திருநாமம் வைக்கப்பட்டுள்ளது. இடபம் என்று ஆண் மாடு. அதனால் மாடுகளைக் கண்ட நமது முன்னோர் ஆண் மாடு வாகனமென்று வைத்து விட்டார்களா? இல்லவே இல்லை. கடவுளுக்கு உருவம் வகுத்த ஞான திருஷ்டியுள்ள ரிஷிகளாலே வாகனம் நியமிக்கப்பட்டது. அது மட்டுமல்ல சிவபெருமானது கொடியும் நந்தி உருவம் வகுத்தார்கள். நமது முற்கால ரிஷிகளின் செயல்பாடுகள் இன்றைய விஞ்ஞான உலகுக்கு மேலாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. சரி, நந்தியின் பெருமை மகத்துவ உண்மைகளைக் கவனிப்போம். கைலை மலைக்கு போகும் தேவர்கள் முனிவர்கள் திருநந்தி தேவரது அனுமதி பெற்று உட்செல்ல வேண்டும். ஆக நாங்களும் ஆலயங்களில் புகுந்தவுடன் நந்தி வாகனத்தை வழிபாடு செய்து பின் மூர்த்தியை வழிபடுகின்றோம். வாகனமான நந்தி குறிப்பிடுவது ஆன்மா. உடம்பு இயங்குவது உயிரால். ஆக உயிர் இயங்குவது சிவனின் அருள் சக்தியினால் ஆன்மாவை வாகனமாக கற்பித்து உயிரை நிலைக்க செய்து சிவனே இடபதேவரின் சிறப்பு அம்சம். தரும தேவதை இடபவடிவம். நாங்கள் வாழ்வில் செய்கின்ற புண்ணிய ஞான ஒழுக்கமே தருமத்தின் வடிவம். இதை மானிட ஜன்மத்திலுள்ளார் செய்வதற்கு ஞான அறிவைக் கொடுப்பது நான்கு வேதங்களுமாம், ஆக இந்த நான்கு வேதங்களும் தரும தேவதையாகிய இடபத்தின் நான்கு பாதங்களுமாம். இவ்வேதத்தின் நல்லொழுக்க நடைமுறையை ஆகமம் புராணம் இதிகாசம் நாடகம் முதலாய பல வகையிலும் மனித ஆன்மாக்கள் பெறுகின்றனர். நான்கு வேதத்தின் அறிவுரைகள் சரியை சிரியை யோகம் ஞானம் என்கிற நால்வகைத் திருத்தொண்டுகளை செய்முறையைக் கூறுகின்றன. இதை நாம் கடைப்பிடித்தொழுகினால் அறம் பொருள் இன்பம் வீடு இவை நான்கும் கிடைக்கின்றன. இது மட்டுந்தானா? இல்லை வீடு என்பது விடுதலை பிறவியின்றும் விடுபடல் இதன் மேலும் ஏதேனும் உண்டா? ஆம். சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம் இப்பதவிகளில் ஒன்று கிடைக்கும். இந்நிலை மனித ஆன்மாக்கட்கும் ஜீவராசிகட்கும் தருவது தரும தவதை வடிவுள்ள இடபரூபமே. ஆகையால் வாகனமும் கொடியும் ஆக அமைந்தது இந்து மதம். வாகன தோற்றம் ஆன்மாவை இயங்க வைக்கிறது. கொடித் தோற்றம் நால் வகைப் பதவிகளிலொன்றை தருகின்றது. கொடிக்கம்பைப் பார்த்த படி நந்தி வைப்பது ஆன்மா இறை ஐக்கியத்தில் அமிழ்ந்தியிருப்பதைக் குறிக்கும். கொடிச் சீலையின் நுனிப்பக்கம் பார்க்க அமைப்பது பக்குவப்பட்ட ஆன்மா ஆன்ம கோடிகளின் சிவ ஐக்கிய தொடர்ப்பை ஏற்படுத்தும் அருள் சத்தியாக அமைவதைக் குறிக்கும். கொடியின் V போல் சீலை அமைவது உயிர்த்தோற்றம் ஒழுக்கத்தைக் குறிக்கும். ஆதலால் நமது இந்து ஆலயங்களில் நந்திக் கொடி அமைப்பது இன்றியமையாததாகும். அது சைவசமயத்தின் முத்திரைச் சின்னமாக விளங்குகின்றது. இக்கொடியை கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர் சின்னத்துரை தனபாலா அவர்கள் பல ஆலயங்களுக்கும் தரும கைங்கரியமாக அன்பளிப்புச் செய்துள்ளார். எனவே ஆலய தர்மகர்த்தாக்கள் இதனைப் பெற்று ஆலயங்கள் சமய தொண்டர் மடங்கள் ஆச்சிரமங்கள் ஆதீனங்கள் இவைகளில் கம்பங்களில் நட்டுவைப்பது வருங்கால சந்ததியின் மதவாழ்விற்கு ஊன்று கோலாக அமையும்.

அருள்மிகு பாலவிநாயகர் கோவில்
கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கம்
கொழும்பு -02

சிவஸ்ரீ எஸ். சந்திரசேகரக் குருக்கள்



திரு. தி. மாணிக்கவாசகர் திருமுறைப் பாடல்கள் பாடுகிறார்.



திரு. வ. மாணிக்கவேல் திருமுறைப் பாடல்கள் பாடுகிறார்.



திரு. இரா. மயில்வாகனம் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்.



ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் பேத்தி டி. கே. பட்டம்மாள் குடும்பத்தினருடன்



இரத்மலானை – கொழும்பு இந்துக் கல்லூரியின் முகப்புத் தோற்றம்



"இந்து ஒளி" மகா சிவராத்திரி சிறப்பிதழ் முதற் பிரதியை, திரு. இ. நமசிவாயம் அவர்களிடமிருந்து, இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு. ந. மன்மதராஜன் பெற்றுக்கொள்கிறார்.



மாமன்ற சிவராத்திரி விழாவில் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்கிறார்கள்.



வெள்ளவத்தை புதிய கதிரேசன் கோவிலில் நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி இலங்கை சின்மயா மிஷனைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய பிரமச்சாரி ரமண சைத்தன்யா ஆகியோருடன் மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்களும், இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரி அதிபர் மற்றும் மாணவர்களும்.



சிவராத்திரி தினத்தன்று வெளியிட்டுவைக்கப்பட்ட "இந்து ஒளி" மகாசிவராத்திரி சிறப்பிதழை திரு. இ. சிவகுருநாதன் அவர்களிடமிருந்து நீதியரசர் திரு. சி. வி. விக்னேஸ்வரன் பெற்றுக்கொள்கிறார்.

## இந்தச் சுடரில்......


1. பஞ்ச புராணங்கள்
2. பிரமாதி வருஷமே வருக
4. இன்னிசை விருந்து – கலைஞர் அறிமுகம்
7. வாழ்த்துச் செய்திகள்
9. நன்றி
10. மாமன்றத் தூதுக்குழுவின் வன்னி விஜயம்
11. இந்து மதத்தின் சிறப்பியல்புகள்
14. A Translation of the Sutras of Sivagnana Bhodham
16. பண்பாட்டுச் சுடர்கள்
18. சைவ சித்தாந்தம் – சில அடிப்படை உண்மைகள்
21. திருப்புகழில் திருமால்
24. ஈதல் எனும் பேரறம்
26. இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
28. பள்ளி எழுந்தருளாயே
29. வேதங்களும் ஆகமங்களும்
32. விஞ்ஞான உலகில் சமய வாழ்வும் சமரச உணர்வும்
35. மரியாதைப் பண்புடமை
38. வீரத்துறவியைப் பாடு
39. திருநந்தியேஸ்வரம்
42. மக்கள் சேவைப் பாதையில் மாமன்றம்
44. மாமன்றச் செய்திகள்
45. வேண்டுகோள்
47. நந்தி



*This Issue Sponsored by*

*K. G. Group of Companies*


அடுத்த சுடர்

பிரமாதி வருடம்
ஆடி - புரட்டாதி

### வாழ்த்து

வையகம் வாழ்க மேலாம் வானகம் என்றும் வாழ்க
பையர வணிந்த ஈசன் அடியவ ரெல்லாம் வாழ்க
எய்தரும் சிறப்புப் பெற்று இந்து மாமன்றத்தோடு
செய்பணி யனைத்தும் மேலு மோங்கியே நீடுவாழ்க.


## இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
பிரமாதி வருடம் சித்திரை - ஆனி இதழ்



ஆசிரிய குழு :
திரு. ஆ. குணநாயகம்
திரு. இ. சிவகுருநாதன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. கந்தையா நீலகண்டன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாடு வருடச் சந்தா | டொலர் | 10.00 |



அகில இலங்கை இந்து மாமன்றம்
A. C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2. இலங்கை.
தொலைபேசி எண்: 434990; பாக்ஸ் எண்: 344720.



இந்துஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



## HINDU OLI

Sithirai - Aani Issue of
ALL CEYLON HINDU CONGRESS
April 1999.



**Editorial Board :**
Mr. A. Gunanayagam
Mr. R. Sivagurunathan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. Kandiah Neelakandan



| | | |
|---|---|---|
| Price | Rs. | 20.00 per copy. |
| Annual Subscription | Rs. | 80.00 |
| Foreign Subscription (Including Postage) | U. S. $ | 10.00 |



ALL CEYLON HINDU CONGRESS,
A. C. H.C. BLDG.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 434990; Fax No: 344720.


**Next Issue :**
***AADI - PURADDATHY***


*Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.*



Printed By: Unic Arts (Pvt) Ltd., Colombo - 13.